LIBRARY
4 - MAY 1962
STATE LEGISLATURE, MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Thursday, 17th March 1960.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, the Deputy Speaker (SRI B. BHAKTAVATSALU NAIDU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS

Newsreels regarding Community Development Works

*425 *Q.*—SRI S. M. ANNAMALAI: கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப் பாரா—

(அ) சமுதாய நல திட்டப் பகுதிகளில் செய்யப்படும் விளம்பரங்கள், செய்திப் படம் முதலியவைகள் மத்திய சர்க்கா ரால் அனுப்பப்படுகின்றனவா ?

(ஆ) இவைகளில் நம் மாநிலத்தில் நடைபெறும் அபி விருத்தி வேலைகளைக் குறித்தும் காட்டப்படுகின்றனவா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: (அ) ஆம்.

(ஆ) ஆம்.

SRI A. GOVINDASAMY: சமுதாய நலத் திட்டங்களின் சார்பாக எடுக்கப்பட்ட படங்களில் நம் ராஜ்யத்தில் நடக்கின்ற சமுதாய நல அபிவிருத்தித் திட்டங்களின் வேலைகளைப்பற்றி படங்கள் எடுக்கப்பட்டு வட நாட்டில் காட்டப்படுகிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: ஆம். காண்பிக்கப் படுகிறது. வடநாட்டில் நம் நாட்டிலுள்ள சமுதாயநலத் திட்டங்களின் வேலைகளைப்பற்றி எடுக்கக்கூடிய படங்கள் காட்டப்படுகின்றன. உதாரணமாக ஒன்றிரண்டு விபரங்களை குறிப்பிடுகிறேன்—

Gramdan activities in Kanvoipatti, Vattalakundu Block, Rural Welfare activities in Tirumangalam Block, Pattamadai Mat-Weaving Industry in Cheranmahadevi Block, Community Development activities—special coverage, School Improvement Schemes, Midday Meals Schemes, etc.

SRI S. M. ANNAMALAI: ஸார், மத்திய சர்க்காரால் தயாரிக்கப்படுகிற படங்களைத்தவிர நம்முடைய சர்க்காராலும் இம்மாதிரிப்பட்ட படங்கள் தயாரிக்கப்படுகின்றனவா? அதல்லாமல் மத்திய சர்க்கார் எடுக்கிற படங்களுக்கு நம் முடைய சர்க்கார் பணம் கொடுக்கின்றதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: இதில் நாம் கவனிக்க வேண்டிய விஷயம், டாக்குமென்டரீஸ் என்று சில படங்கள் எடுக்கப்படுகின்றன. அது தவிர, நியூஸ் ரீல் என்று வேறு எடுக்கப்படுகின்றன. நியூஸ் ரீல்லே பொறுத்தவரை முழுவதும் மத்திய சர்க்காரால்தான் எடுக்கப்படுகிறது. டாக்குமென்டரீஸ் படத்தில் பெரும் பகுதி மத்திய சர்க்காரால் எடுக்கப்படுகிறது. சென்னை அரசாங்கத்தைப் பொறுத்த அளவில் சில டாக்குமென்டரீஸ் படங்களும் எடுக்கப்பட்டிருக்கின்றன. மத்திய அரசாங்கம் எடுக்கும் படங்களுக்கும் நாம் பணம் கொடுப்பதில்லை.

SRI P. S. CHINNADURAI: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, பெரும்பாலான செய்தி படங்களிலும் நம்முடைய பகுதியிலுள்ள அபிவிருத்தி வேலைகளைப்பற்றி செய்திப்படங்களே இல்லை என்று நான் நினைக்கிறேன். ஆகவே செய்திப்படங்களில் நம்முடைய பகுதியிலுள்ள செய்திகளையும் அதிகமாக காண்பிப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: இதில் நாம் இரண்டு விஷயங்களை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். மத்திய அரசாங்கத்தால் செய்யப்படுகிற வேலைகளுக்கு செய்திப்படங்களில் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். அதன் பின்னுல் 13, 14 ராஜ்யங்களின் செய்திகளையும் சேர்த்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. இவைகள் எல்லாம் சிறிய பகுதிகளாகத்தான் இருக்கின்றன என்பது உண்மைதான். ஆகவே இதைப்பற்றி சமீபத்தில் பேசி, அந்தந்த பிராந்தியங்களுக்கு அனுப்பப்படும் செய்திப்படங்களில் அந்தந்த பிராந்திய வாரியாக எடுக்கப்பட்ட செய்திப்படங்களையே காண்பிக்கவேண்டும் என்றும், அதற்கு தகுந்தாற்போல் எடிட் செய்து அனுப்பவேண்டும் என்றும் சொல்லியிருக்கிறோம். அதை மத்திய அரசாங்கத்திலும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

SRI M. D. THIAGARAJA PILLAI: இம்மாதிரியான, பிரயோஜனகரமான படங்களை காண்பித்தால் பள்ளிக்கூட பிள்ளைகளுக்கும் உதவியாய் இருக்கும் என்று நம்புகிறேன். பெரும்பாலும் எல்லாப்பள்ளிக்கூடங்களிலும் இதற்கான மெஷின்கள் இருக்கின்றன. ஆகவே இந்தப் படங்களை பள்ளிக்கூடங்களுக்கும் அனுப்பிக்கொடுக்க சர்க்கார் ஏற்பாடு செய்யுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: பள்ளிக்கூடங்களுக்கு கல்வி அடிப்படையில் எடுக்கப்பட்ட படங்கள் காண்பிக்கப்பட்டு வருகின்றன. அது டி.பி.ஐ. அவர்களின் கீழ் பிலிம் லைப்ரரி ஒன்று இருக்கிறது. கல்வி புகட்டக்கூடிய படங்களை காண்பிக்க வேண்டும் என்பதற்காகத்தான் இது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. செய்திப் படங்களை அங்கு காண்பிக்க முடியாது.

SRI A. GOVINDASAMY: சமுதாய நலத் திட்டத்தின் கீழ் நடைபெறுகின்ற வேலைகளை காண்பிக்கும் காலண்டர் முதலியவைகளிலும் வடநாட்டில் நடைபெறுகின்ற வேலைகளைப் பற்றியும்

17th March 1960]

வட நாட்டுத் தலைவர்களைப்பற்றியும்தான் போடுகிறார்கள். ஏன் அவைகளில் தென்னாட்டில் நடைபெறுகின்ற அபிவிருத்தி வேலைகள் குறித்து வெளிவருவதில்லை?

THE HON. SRI C. SUBRAMANIAM: இதில் நமக்குள்ள கஷ்டம் என்னவென்றால், தென்னாட்டை மட்டும் இதில் எடுத்துக் கொள்ள முடியாது. 13, 14 ராஜ்யங்களில் நடைபெறுகின்ற வேலைகளையும் இதில் சேர்க்கவேண்டும். ஆனால் நம்முடைய அளவு குறைவாகத்தான் வெளியிடப்படுகிறது என்பதை நான் ஓரளவுக்கு ஒப்புக்கொள்கிறேன். ஆகவே நம்முடைய நாட்டுக்கு வரக்கூடிய படங்களில் அதிகமாக இந்த பிராந்தியத் திலே உள்ள அபிவிருத்திகள், செய்திகள் பற்றிய விவரங்களைக் கொண்டு எடுக்கப்பட்ட படங்களை தனியாக எடிட் செய்து அனுப்ப வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். அவர் களும் சம்மதித்து இருக்கிறார்கள். இப்படிப்பார்க்கும்போது, பொதுவாக இன்னொரு பக்கம் நடக்கக்கூடிய செய்திகளை அறிவதுதான் "நியூஸ்" என்பதற்குச் சரியாக இருக்கும். அதல்லாமல் நம்முடைய நாட்டிலுள்ள வேலைகளைப்பற்றி படம் பிடித்து நாமே பார்த்து திருப்தி அடைவதில் எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லையென்றால் எனக்கும் அதில் ஆட்சேபணை ஒன்றும் இல்லை.

Harveypatti Workers' Colony, Madurai

* 426 *Q.*—SRI P. S. CHINNADURAI: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government have received any complaint about the refusal to give possession of the houses in the Madurai Harveypatti Workers' Colony, Madurai, to those workers who have paid the full amount; and

(*b*) if so, the action taken by the Government against the concerned co-operative society?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) & (*b*) There was some dispute between the Madurai Mills Co-operative Housing Society and its worker members regarding allotment of houses constructed by the Society, but it has been amicably settled.

Liquor permits

* 427 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN: கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்வி களுக்கு பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்தில் எத்தனை பேருக்கு பிராந்தி, பீர் முதலிய உயர்ந்த ரக குடிபானங்களுக்காக லைசென்சு கொடுக் கப்பட்டுள்ளது? (ஜில்லா வாரியாக).

(ஆ) என்ன காரணத்திற்காக கொடுக்கப்பட்டது?

[17th March 1960

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) A district-wise statement [a] showing the number of persons to whom permits for possession and consumption of foreign liquior or Indian made foreign spirits were issued during 1959 is placed on the table of the House.

(b) permits are granted to *Indians* only on medical grounds. Permits are issued to *non-Indians* who are not minors and to military personnel on application (i.e.) without insisting on medical certificates.

SRI V. K. KOTHANDARAMAN: ஸார், மேஜை மீது வைக்கப்பட்டிருக்கும் லிஸ்டில் கண்டுள்ளபடி, இதில் யார் யார், எம்.எல்.ஏ.-க்கள் எம்.எல்.ஸி.-க்கள் இருக்கிறார்கள் என்பதை தெரிவிக்க முடியுமா? அதோடு, மெடிக்கல் க்ரௌண்டிஸில் கொடுக்கப்பட்டிருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. இந் நாட்டில் 50 லட்சம் பேர்கள் டி.பி. நோயினால் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் கள் உபயோகித்தால் டி.பி. நோயை குணப்படுத்தலாம் என்று டாக்டர்கள் சொல்லுகிறார்கள். ஆகவே மெடிக்கல் க்ரௌண்டிஸில் பர்மிட் கொடுக்க சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இதில் சட்டமன்ற உறுப்பினர்கள் உண்டா என்கிற விபரம் என்னிடமில்லை. டாக்டர்கள் "பாரின் லிக்கர்" உபயோகிக்க வேண்டும் என்று சொல்வதின் பேரில் பலருக்கும் பர்மிட் வழங்கப்பட்டிருக்கிறது.

SRI A. GOVINDASAMY: மதுவிலக்கை நல்ல முறையிலே அமுலாக்க வேண்டும் என்ற திட்டத்தை உருவாக்குகின்ற கட்சிக்காரர்களுக்கு குறிப்பாக சட்ட சபையிலும், அமைச்சர் அவையிலும் உள்ள சில பேர்களுக்கு பர்மிட் இருப்பதாக சொல்லப்படுகிறதே அது உண்மையா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அவ்வாறு என்னிடம் ஒன்றும் தகவல் இல்லை.

THE HON. SRI C. SUBRAMANIAM: எனக்கு தகவல் தெரியும். இதிலே ஒருவருக்கும் பர்மிட் கிடையாது (சிரிப்பு).

SRI M. KALYANASUNDARAM : I find a category of people called privileged personages in the statement placed on the table of the House. What are the qualifications of these classes of people to get permits?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : It is with reference to diplomatic service.

[a] Printed as Appendix I on page 851 infra.

17th March 1960]

SRI A. A. RASHEED: May I know Sir, the number of women to whom permits were issued? (Laughter) Will the Government issue more permits to them to reduce the number of prohibition offences?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I do not deny there are women who hold permits. But I do not accept that, if more women are given permits, prohibition offences would be reduced.

SRI A. VEDARATHNAM: "ஹெல்த் ரீஸன்ஸ்" என்று சொல்லி பலருக்கு பர்மிட் கொடுக்கப்பட்டிருக்கிறதே? மதுவிலக்கு என்குயரி கமிட்டியில் சாட்சியம் கொடுத்த ஸர்ஜன் ஜெனரல் எந்த வியாதியையும் ஆல்கஹால் குணப்படுத்துவதில்லே, ஆகவே எந்த வியாதியையும் குணப்படுத்துவதற்கு ஆல்கஹால் கொடுக்க வேண்டிய அவசியம் கிடையாது என்று சொல்லியிருக்கிறுர். அவர்கள் கொடுத்த அத்தாட்சி அந்த ரிபோர்ட்டில் இணைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, ஹெல்த் ரீஸன்ஸ் பேரில் எதற்கு பர்மிட் வழங்கவேண்டுமென்பதை தயவு செய்து விளக்கவேண்டும்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: ஒரு ஸர்ஜன் ஜெனரல் தன்னுடைய அபிப்பிராயத்தை தெரிவித்திருக்கலாம். ஆனல், அரசியல் அமைப்பு சட்டத்தின்படி ஒருவருக்கு அவருடைய உடல் நிலே காரணமாக டாக்டர் அத்தாட்சி கொடுத்து "லிக்கர்" வேண்டுமென்று சொன்னல் அதை மறுப்பதற்கில்லே.

SRI K. VINAYAKAM: Sir, may I know, on what basis these liquor permits are issued and what is the policy of our Government in respect of applications for issue of permits?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The basis is it is issued on medical grounds.

Tranquebar hospital

*428 *Q.*—SRI C. MUTHIAH: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Government propose to take over the Tranquebar hospital; and

(*b*) if so, when?

THE HON. SRI M. A. MANICKAVELU: (*a*) & (*b*) On and from such date as may be specified in the notification constituting a panchayat union council under the Madras Panchayats Act, 1958, having jurisdiction over Tranquebar, the hospital at Porayar in Tranquebar Panchayat will stand transferred to and vest in the Government.

SRI C. MUTHIAH: பஞ்சாயத்து யூனியன் அமைப்பதை இப்பொழுது 6 மாதங்களுக்கு தள்ளிப்போடப்பட்டிருக்கிறது. அதனல் ரூரல் டிஸ்பென்சரியை ரெகுலராக மாற்றுவதும்,

[17th March 1960

ரெகுலர் டிஸ்பென்சரியை கவர்மெண்டு ஆஸ்பத்திரியாக மாற்றுவதும் தாமதப்படுகிறது. ஆகையால் பொதுவாக ரூரல் டீஸ்பன்சரியை ரெகுலராக மாற்றுவதையும், தரங்கம்பாடி ஆஸ்பத்திரியை சர்க்கார் எடுத்துக் கொள்வதையும் 6 மாதங்களுக்கு தள்ளிப்போட்டு காலம் கடத்தாமல், அதை உடனடியாக அரசாங்கம் எடுத்துக்கொள்ளுவதற்கு முன்வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: டிஸ்பென்சரி விஷயம் வேறு. ஆஸ்பத்திரியை பொறுத்த மட்டில், இந்த மாதிரி பஞ்சாயத்து யூனியன்கள் ஏற்பட்டால் அவ்வப்பொழுது மாற்றப்படும். பஞ்சாயத்து யூனியன் இதுவரையிலும் எங்கும் ஏற்படவில்லை என்று நினைக்கிறேன். பஞ்சாயத்து யூனியன் ஏற்படும் பொழுது இது மாற்றப்படும்.

SRI M. P. SUBRAMANIAM: அமைச்சர் அவர்கள் கூறிய பதிலிலிருந்து பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் ஏற்படுத்தப்படும் இடங்களிலுள்ள ஆஸ்பத்திரிகளையெல்லாம் அரசாங்கமே எடுத்துக்கொள்ளப்போகிறதா ? பஞ்சாயத்து யூனியன்களுக்கு லோகல் பண்டு டிஸ்பென்சரி, ரூரல் டிஸ்பென்சரி இவைகள் விடப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: டிஸ்பென்சரியை அரசாங்கம் எடுத்துக் கொள்ளாது. ஆஸ்பத்திரியை, பஞ்சாயத்து யூனியன் ஏற்பட்டதற்கு பிற்பாடு அரசாங்கம் எடுத்துக்கொள்ளும்.

Collectors' and Police Superintendents' Conference at Ootacamund

* 429 *Q*.—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Law and Order position in the State was reviewed in the Collectors' and Police Superintendents' Conference held at Ootacamund during May 1959 regarding indiscipline among students;

(*b*) what measures had been proposed to put down goonda elements in towns and villages who intimidate voters during elections; and

(*c*) if so, the details of the same?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) General matters concerning Law and Order were discussed at the Collectors' and the Police Officers' Conference held at Ootacamund during May 1959. As the Conferences were purely departmental conferences; the Government consider that it would not be in the public interest to disclose the details of the proceedings of the Conference.

(*b*) & (*c*) Do not arise.

17th March 1960]

Cattle Market at Palayamkottai

* 430 *Q.*—SRIMATHI RAJATHI KUNCHITHAPATHAM: கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க் கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

பாளையங்கோட்டை நகராட்சி மன்றத்திலிருந்து (Inspector of Local Boards) அவர்களுக்கு மாட்டுச் சந்தை ஒன்று நடத்த அனுமதி கோரி அனுப்பப்பட்ட தீர்மானத்திற்கு என்ன பதில் தெரிவிக்கப்பட்டது ?

THE HON. SRIMATHI LOURDAMMAL SIMON: The Palayamkottai Municipal Council was advised to drop its proposal to open a weekly cattle market. On a further representation the matter is being re-examined.

SRIMATHI RAJATHI KUNCHITHAPATHAM: தலைவர் அவர்களே, சந்தை போன்ற வருமான வரிகளை நகரசபைகள் எடுத்து நடத்துவதால் நகரசபை மக்கள் தலையிலுள்ள வரிச்சுமை குறைகிறது. அப்படியிருக்கும்பொழுது தனிப்பட்டவர்கள் $1\frac{1}{2}$ மைலுக்கு அப்பாற் சென்று சந்தை நடத்துவதற்கு சர்க்கார் சலுகை அளிக்கிறது. ஆயிரக்கணக்கான மாடுகள் சர்க்கார் உதவி பெற்று அங்கே வாங்கப்படுகின்றன. தனிப்பட்டவர்கள் இந்தப் பலனை அடையும் பொருட்டு இந்த நகரசபை சந்தை மறுக்கப்பட்டதா ? இதை புனராலோசனை செய்வதற்கு அமைச்சர் முன்வருவார்களா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: தனிப்பட்டவர்களுக்கு சலுகை கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு நடத்தவில்லை. பல ஆண்டுகளாக அந்தச் சந்தை அந்த இடத்தில் இருந்து வருகிறது. அதிலும் இப்பொழுது கேட்கும் இடம் அதிலிருந்து $1\frac{1}{2}$ மைல் தூரம் இருப்பதன் காரணமாகவும், அங்கு இருக்கும் சூழ்நிலை, வசதி காரணமாகவும் ஐ.எல்.பி. அவ்விதமாக அவர்களுக்கு பதிலைக் கொடுத்தார்கள். ஆனால், திரும்பவும் அதுபற்றி கேட்கப்படுவதனால் அது " ரி-எக்ஸாமின் " செய்யப்படுகிறது.

Fire accident at Sivakasi

* 431 *Q.*—SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether it is a fact that five persons were burnt alive as a result of the fire accident in Kaliswari Colour Match Works Factory in Sivakasi on 5th August 1959;

(*b*) if so, the cause of the accident; and

(*c*) whether compensation was paid to the deceased families?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) No, Sir. Only four persons were burnt to death on the spot.

(*b*) The cause of the fire is reported to be due to the careless handling of dipped match frames by the workers in the dipping shed.

(*c*) No, Sir.

[17th March 1960

SRI A. A. RASHEED : What are the steps taken to prevent recurrence of such accidents? What are the reasons for not giving compensation to the families of victims?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The rules require that certain precautionary measures should be taken and if there is any enquiry about the incident, it would have to be examined whether these precautionary measures had been taken.

SRI M. KALYANASUNDARAM : இந்த விபத்து சம்பந்தமாக எந்தமாதிரி விசாரணை நடத்தப்பட்டது என்று அறியலாமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Inspector of Factories who inspected the factory made a preliminary enquiry and he reported that out of nine persons involved, the names of two persons were not found in the Muster Roll and then Sir, dependents of four persons have filed claim petitions in the prescribed forms and the claims have been posted for hearing.

World Agricultural Fair

*432 *Q.*—SRI M. P. SARATHI : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) டில்லியில் நடந்த உலக விவசாயப் பொருட் காட்சியில் இந்த இராஜ்ஜியம் பங்கு கொண்டதா ?

(ஆ) அப்படியானல் எந்த அளவில் ?

(இ) இதற்கான செலவு என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) About 40,000 square feet of space has been rented for erecting the Madras Pavilion and stalls. The Agriculture, Animal Husbandry, Forest, Irrigation, Industries, Information and Publicity and Co-operation Departments have participated in the Madras Pavilion at the Fair.

(*c*) About rupees 6 lakhs.

SRI A. GOVINDASAMY : டெல்லியில் நடந்த விவசாய கண்காட்சியில் மீன் துறை விஷயமாக எந்தவிதமான விளம்பரமும் நமது அரசாங்கம் செய்ய வில்லையே ? அதற்கு என்ன காரணம் ? மற்ற ராஜ்யங்களெல்லாம் அதில் அதிக கவனம் செலுத்தியிருந்ததா ? நம்முடைய ராஜ்யத்தில் மட்டும் அதில் கவனம் செலுத்தாதற்கு காரணம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஏதாவது மீன் துறையில் விசேஷமாக இருந்தால் ஒவ்வொரு ராஜ்யமும் அதைப் பற்றி விளம்பரம் செய்ய ஏற்பாடு செய்திருக்கிறது. இதில் ஒன்றும் விசேஷமாகக் காட்டக்கூடியது நம் ராஜ்யத்தில் ஒன்றுமில்லை. அதுவும் குறிப்பிட்ட இடத்திலே அதை வேண்டிய அளவுக்கு தண்ணீரெல்லாம் வைத்துச்செய்ய வேண்டும். அதற்கு இடம் இல்லை.

17th March 1960]

SRI M. P. SARATHI: இந்த உலகப் பொருட்காட்சியை தென்னுட்டிலே நமது சென்னையில் நடத்துவதற்கு டெல்லி அரசாங்கத்தை சிபாரிசு செய்யும்படி நமது அரசாங்கம் கேட்குமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அடுத்த ஆண்டிலே அகில இந்திய விவசாய பொருட்காட்சி நடத்துவதாக யோசனை இருக்கிறது. இதிலே அந்நிய நாடுகள் சிலவும் கலந்து கொள்ளக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

SRI M. KALYANASUNDARAM: இது ஒரு உலகக் கண்காட்சி. அதில் அநேக தேசங்கள் பங்குகொண்டன. நம்முடைய தேசமும் பங்குகொண்டது. அப்படியிருக்கும்பொழுது நம்முடைய ராஜ்யம் இதில் பங்கெடுத்துக்கொண்ட செலவை மத்திய சர்க்கார் ஏற்றுக்கொள்ள வேண்டாமா? ஏன் இதற்காக நமது ராஜ்ய சர்க்கார் 6 லட்சம் ரூபாய் செலவு செய்ய வேண்டும்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: உலகம் மத்திய சர்க்காருக்கு மட்டுமல்ல, இந்த ராஜ்ய சர்க்காருக்கும் பங்கு உண்டு.

SRI M. P. SUBRAMANIAM: டெல்லியில் நடந்த விவசாயப் பொருட் காட்சியில் நம்முடைய ராஜ்யம் பங்கு கொண்டதற்கு பலனுக, அன்னிய நாடுகளின் பயிற்சியிலிருந்து நாம் ஏதாவது புதிய விஷயங்களை நம்முடைய ராஜ்யத்தில் புகுத்துவதற்கு முற் படுவோமா? அதே மாதிரி நம்முடைய பயிற்சி முறையில் எதையாகிலும் மற்ற பிரதேசங்கள், மற்ற நாடுகள் நன்மை என்று கருதி அதை அவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிருர்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அந்நிய நாடுகளி லிருந்து வந்திருந்தவர்கள் நம்முடைய ஸ்டாலைப் பார்த்து பாராட்டினுர்கள் என்று தெரிகிறது. நம்முடைய நிபுணர்கள் அங்கே போய் அந்நிய நாட்டு ஸ்டால்களையெல்லாம் பார்த்து, எந்த அளவுக்கு நாம் அந்த முறைகளைக் கையாளலாம் என்பதை பற்றி அவர்கள் பரிசீலனை செய்து, அதை நிறைவேற்றுவதற்கு ஏற்பாடும் செய்யப்பட்டிருக்கிறது.

SRI T. R. RAMAMIRTHA THONDAIMAN: சமீபத்தில் டெல்லியில் நடந்த விவசாய கண்காட்சியை பார்ப்பதற்காக அனுப்பப்பட்டவர்கள் நேரடியாக சாகுபடி செய்யக்கூடிய சாகு படியாளர்களா? அப்படியில்லை யென்ருல் இனிமேல் நடக் கக்கூடிய கண்காட்சிகளை பார்ப்பதற்காகவாவது சர்க்கார் பூராச் செலவையும் ஏற்றுக்கொண்டு, நேரடியாக சாகுபடி செய்யும் உழவர்களை அனுப்ப முன்வருமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: உழவர்கள் ஏராள மாக போய் பார்த்து வந்திருக்கிருர்கள். அவர்களுக்கு ரயில்வே சலுகை கூட வழங்கப்பட்டது.

[17th March 1960

SRI K. R. NALLASIVAM: இந்த உலக கண்காட்சியில் வெளி நாடுகளெல்லாம், சைனு, ரஷ்யா போன்ற நாடுகளெல்லாம், அதுவும் குறிப்பாக சைனு தன்னுடைய நாட்டுப் பயிராகிய கரும்பு, சோளம் போன்றவைகளை அங்கிருந்து கொண்டுவந்து வைத்திருந்தார்கள். ஆனல் நம்முடைய ராஜ்யத்திலும் கண்காட்சியில் கரும்பு வகைராவும், வாழை, நெல் போன்ற வகை களும் கூட வைக்கப்பட்டிருந்தாலும், அவைகள் சிறப்பான முறையில் அங்கே வைத்துக் காட்டப்படவில்லை. இனிமேலாவது நடக்கக் கூடிய கண்காட்சிகளில் நம்மிடத்தில் இருக்கக்கூடிய சிறப்பான பொருள்களை சேகரித்து வைக்க ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: சைனுவில் கரும்பு, சோளம் எவ்வளவு தூரம் வளர்ந்திருக்கிறது என்பதைக் காட்டினுர்கள். நம்முடைய நாட்டுப் பயிர்களும் அதற்கு மேலே எவ்வளவு தூரம் வளர்ந்திருக்கிறது என்பதை யும் அங்கே காட்டப்பட்டது.

SRI K. VINAYAKAM: Is it a fact that the India Government has awarded a meritorious shield to our State for having put up the best stall of the entire lot?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Yes, Sir, our pavilion has got an award.

SRI S. M. ANNAMALAI: நம் மாகாணத்திலிருந்து எத்தனை விவசாயிகள் சென்ருர்கள்? அப்படிச் சென்றவர்களுக்கு என் னென்ன சலுகைகள் செய்யப்பட்டன? சென்ற விவசாயிகளுக்கு சரிவரச் சௌகரியங்கள் செய்யப்படாததால், 2-1/2 நாட்களில் செல்ல வேண்டிய வண்டி, 4 நாட்களானதால், அவர்கள் ஜுரம் கண்டு பெரிதும் அவதியுற்ருர்கள் என்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: ரயில்வே பிரயாணத் தில் எத்தனைபேர் அப்படி ஆளானுர்கள் என்ற விவரம் என்னிடம் இல்லை.

SRI K. R. VISWANATHAN: விவசாயப் பொருட் காட்சியில் பல உலக நாடுகளும், நம் நாட்டில் பல மாகாணங்களும் கலந்துக் கொண்டிருக்கின்றன. நம் மாகாணத்தின் கூடத்தைப் பார்க்க வந்த மக்களின் எண்ணிக்கை, மற்ற நாடுகளின் கூடங் களைப் பார்த்த மக்களின் எண்ணிக்கையோடு ஒத்திட்டுப் பார்க்கப்பட்டதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: நம் மாநில பெவி லியனுக்குச் சிறப்பாக மக்கள் வந்து கொண்டிருந்தார்கள்; புள்ளி விவரங்கள் இல்லாமலே, பார்த்தவர்கள், எப்பொழுதும் நம் பெவிலியனில் மக்கள் இருந்து கொண்டே இருந்தார்கள் என்று சொல்கிருர்கள்.

17th March 1960]

Sri A. GOVINDASAMY: இந்த உலக விவசாயக் காட்சியில், நம் மாநில கூடத்தின் முகப்பில் ராமேஸ்வர கோபுரமும், நாதஸ்வர கோஷ்டியார் சிலைகளும் வைத்திருப்பதற்கு விசேஷக் காரணம் என்ன ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: முகப்பு வசீகரமாக இருக்க வேண்டும், அப்பொழுதுதான் மக்கள் உள்ளே வருவார்கள் என்றுதான் அவை வைக்கப்பட்டது. அப்படி வைத்தது வசீகரமாக இருந்தது என்று அப்புறம் தெரிந்தது.

Washing Soda

*433 *Q.*—Sri A. VEDARATHNAM: கனம கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) இம் மாநிலத்தில் வாஷிங் சோடா, காஸ்டிக் சோடா, பிளீச்சிங் பவுடர் பற்றாக்குறை உண்டா ? எவ்வளவு ?

(ஆ) இதை நிவர்த்திக்க அரசாங்கம் என்ன ஏற்பாடு செய்திருக்கிறது ?

The Hon. Sri R. VENKATARAMAN: (*a*) There is shortage of washing soda, but not of Caustic Soda and Bleaching Powder. No precise data regarding the extent of shortage of Soda ash is available. From application received from Washermens' Associations all over the State it is estimated that the supply falls short of demand by about 50 tons roughly.

(*b*) At the Government's request, a quantity of 100 tons of Soda Ash per month was allotted by the State Trading Corporation, Madras, upto June 1959 for distribution through the stockists of the Corporation to the various Washermen's Associations on permits issued by Assistant Directors of Industries and Commerce. The allotment has been increased to 120 tons per month from June 1959. The possibilities of increasing this allotment to 150 tons are being explored.

Sri A. VEDARATHNAM: இந்த வாஷிங் சோடா, காஸ்டிக் சோடா இவற்றில் நிறம்பப் பற்றாக்குறை இருப்பதால், நம் மாகாணத்தில் இது செய்ய வேண்டிய மூலப் பொருள் இருப்பதால், இந்தத் தொழிலை அபிவிருத்தி செய்ய அரசாங்கம் முயற்சி செய்யுமா, முன்வருமா ?

The Hon. Sri R. VENKATARAMAN: பொது விவாதத்தின் போது சொன்னபடி, இந்தத் தொழிலை எடுத்து நடத்த தனியார் துறையில் யாராவது முன் வந்தால், எல்லாவிதமான உதவியும் சர்க்கார் செய்யும்.

Sri A. GOVINDASAMY: சலவைத் தொழிலாளர்கள், வாஷிங் சோடா கிடைக்காமல் கஷ்டப் படுவது அமைச்சரவர்களுக்குத் தெரியுமா ? அதை அதிகமாக வழங்குவதற்கு, அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

The Hon. Sri R. VENKATARAMAN: தெரிந்துதான் இருக்கிறது. இதற்கு முன்னால் இதற்கென்று சோடா ஒதுக்கப் படவில்லை. பிறகு ராஜீய சர்க்கார் தலையீடு செய்து, முதலில்

100 டன் என்று ஒதுக்கச் செய்தோம். பிறகு அது 120 டன் எனறு ஒதுக்கப் பட்டிருக்கிறது. அதையே 150 டன்னுக உயர்த்த முயற்சி செய்து கொண்டிருக்கிறேம்.

SRI A. VEDARATHNAM: பல கோடிக்கணக்கான ரூபாய் கள் மூலதனம் தேவையுள்ள தொழில்களில், தனியார் துறையில் செய்ய அவர்களிடம் மூலதனம் இல்லாமல் இருப்பது காரணம் என்று விவரிக்கப் பட்டது. காஸ்டிக் சோடா பாக்டரிக்கு கோடிக்கணக்கான ரூபாய் மூலதனம் தேவையில்லே. அப்படி யிருக்க, அரசாங்கமே அதை எடுத்து நடத்தக் கூடாதா?

THE HON. SRI R. VENKATARAMAN: கனம் அங்கத்தினர் கோடிக்கணக்கான ரூபாய் தேவையில்லே என்று சொல்லுவது தவறு. அப்படிக் குறைந்த செலவில் தயாரிக்கக் கூடிய நிபுணத் துவத்தை அவர்கள் கண்டு பிடித்திருந்தால், அதை அவர்களே செய்யலாம். அப்படியில்லே. அது ஒரு பெரிய தொழில்.

Employees' State Insurance Scheme

*434Q.—SRI S. M. ANNAMALAI: கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) தொழிலாளர் இன்ஷூரன்ஸ் திட்டத்தை வடாற் காடு மாவட்டத்திற்கு விஸ்தரிக்கும் திட்டம் உண்டா?

(ஆ) இல்லேயாயின் காரணம் என்ன?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) & (b) The question of implementation of the Employees' State Insurance Scheme in Ranipet (North Arcot district) is under the consideration of Government.

*435 Q.—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Industries be pleased to state how far the Employees' State Insurance Scheme has been extended to the families of workers in this State?

THE HON. SRI R. VENKATARAMAN: The Employees' State Insurance Scheme has not been so far extended to the families of insured workers in this State.

SRI S. M. ANNAMALAI: வட ஆற்காடு மாவட்டம், ராணி பேட்டைக்கு எப்பொழுது இந்தச் சட்டம் அமுலுக்கு வரும்? அது தவிர, மற்ற நகரங்களுக்கு எப்பொழுது விஸ்தரிக்கப் படும்?

THE HON. SRI R. VENKATARAMAN: 1,500 தொழிலாளி கள் இருக்கும் இடத்திற்குத்தான் இந்த திட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்படும். அவ்வாறு பார்த்தால், ராணிப்பேட்டை யில் 1,500 தொழிலாளிகள் இருந்து இன்ஷூரன்ஸ் ஸ்கீமில் வரக்கூடியவர்கள் இருக்கிறர்கள். அதற்கு வேண்டிய முயற்சி செய்கிறேம்.

17th March 1960]

SRI N. K. PALANISAMI: இந்த திட்டம் குடும்பங்களுக்கு எப்பொழுது அமுலுக்கு வரும்? இதற்காக சர்க்கார் எவ்வளவு பணம் ஒதுக்கியிருக்கிருர்கள்?

THE HON. SRI R. VENKATARAMAN: ராஜ்ஜிய சர்க்கார் ஒரு கொள்கையை வகுத்துக் கொண்டது, ராஜ்யத்தில் இருக்கக்கூடிய, 1,500 தொழிலாளிகள் இருக்கக் கூடிய இடங்களில், எவ்வளவு பேர் திட்டத்தின் கீழ் வரமுடியுமோ அவர்களுக்கு முதலில் அமல் செய்து விட்டுத்தான், பிறகு குடும்பங்களுக்குச் செய்ய வேண்டுமென்று முடிவு எடுத்தோம். இந்த ராச்சியத்தில் சற்றேரக்குறைய 90 பர்செண்டுக்கு விஸ்தரித்து விடுவோம்; இரண்டு மூன்று இடங்கள் பாக்கியிருக்கலாம். ஆகவே, அதற்குப் பின்பு குடும்பங்களுக்கு விஸ்தரிப்போம்.

SRI K. B. S. MANI: 1,500 தொழிலாளிகள் இருக்கும் இடங்களுக்குத்தான் விஸ்தரிக்கப்படும் என்று சொன்னுர்கள். அப்படியானல், சிறிய தொழிற்சாலைகளில் இருப்பவர்கள் கஷ்டப் படவேண்டியதுதானு? கஷ்டப்பட்டால், அதற்கு அரசாங்கம் ஏதாவது செய்யுமா?

THE HON. SRI R. VENKATARAMAN: கனம் அங்கத்தினர் இந்த திட்டத்தின் விவரங்களைத் தெரிந்து கொண்டால், இதில் இருக்கக் கூடிய கஷ்டங்கள் தெரிந்து விடும். இதற்குத் தனியாக ஆஸ்பத்திரி வைக்க வேண்டும். பல முக்கியமான கருவிகள் வேண்டும். எக்ஸ்ரே வைக்க வேண்டும். 1,000 தொழிலாளிகள் இருக்கும் இடத்திற்கும் வைத்தால், செலவு ஏராளமாக ஆகிவிடும். அதனுல்தான் 1,500 தொழிலாளிகளுக்கு விஸ்தரித்த பிறகு, மூன்ருவது திட்டத்தில், நிதிவசதி சரியாக இருக்குமானல், 1,000 தொழிலாளிகளுக்கும் விஸ்தரிக்கக்கூடிய முறையில் அடுத்த கட்டத்தில் ஏற்பாடு செய்யலாம்.

SRI A. GOVINDASAMY: தென்னுற்காடு மாவட்டத்தில், சர்க்கரை ஆலையிருக்கும் நெல்லிக்குப்பத்தில், கிட்டத்தட்ட 3,000 தொழிலாளிகள் இருக்கிருர்களே, அங்கே இந்த திட்டம் அமுலாக்கப் பட்டுவிட்டதா? இல்லையென்ருல், எப்பொழுது அமுலாக்கப்படும்.

THE HON. SRI R. VENKATARAMAN: அதற்குத் தனிக் கேள்வி போடவேண்டும்.

Ceylon repatriates

* 436 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN: கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

இலங்கையில் இருந்து நாடு கடத்தப்பட்ட தமிழ்நாடு வந்துள்ளவர்களுக்கு என்னென்ன முறைகளில் வாழ்க்கையை நடத்த நிவாரணம் அளிக்கப்பட்டுள்ளது? எந்தெந்த ஜில்லாக்களில்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: A statement[a] is placed on the table of the House.

[a] Printed as Appendix II on pages 851–852 infra.

[17th March 1960

Sri V. K. KOTHANDARAMAN: இலங்கையிலிருந்து நாடு கடத்தப்படுபவர்கள் எவ்வளவு பேர்? எதனுல் நாடு கடத்தப் படுகிருர்கள்? அப்படி நாடு கடத்தப்பட்டவர்களுக்காக, நாசரேத்தில் ஒரு ஸ்பின்னிங் மில் கட்ட ரூ. 10 லட்சம் ஒதுக்கப் பட்டிருக்கிறது என்று சொல்லப் படுகிறதே, அந்த மில் ஆரம்பம் ஆகிவிட்டதா, அதில் தாயகம் திரும்பியவர்கள் எவ்வளவு பேர்கள் வேலை செய்கிருர்கள்?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: கனம் அங்கத்தினர் கேட்கும் தகவல்களுக்குத் தனிக் கேள்வி போடவேண்டும்.

Sri S. NAGARAJA MONIGAR: ஸார், இப்பொழுது பிற நாடுகளிலிருந்து இந்திய மக்கள் திரும்பி வந்து கொண்டு இருப் பதற்கு என்ன காரணம்? நம் நாட்டுக் கொள்கையா, அல்லது தனிப்பட்டவர்களின் விரும்பத்தகாத செய்கைகளா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: பலபேர் இன்னுட்டி லிருந்து சிலோன் முதலிய நாடுகளுக்கு சென்று, தொழிலில் ஈடுபட்டார்கள். வேலை கொடுத்தார்கள். சிலர் அந்நாட்டுப் பிரஜைகளாக ஏற்றுக் கொள்ளப் படுகிருர்கள். மற்றவர்கள் போக்குவரத்து வைத்துக் கொண்டிருக்கிருர்கள். அவர்களில் சிலர் சிலோன் நாட்டை விட்டு இங்கே வருகிருர்கள். அவர் களுக்கு வசதிகள் செய்து கொடுக்க வேண்டுவது அவசிய மாகிறது.

Minimum wages for agricultural labourers

* 437 *Q.*—Sri C. MUTHIAH: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government are examining the question of fixing the minimum wages of agricultural labourers in Thanjavur district under the Minimum Wages Act; and

(*b*) if so, when it will be introduced?

The Hon. Sri R. VENKATARAMAN: (*a*) & (*b*) No Sir. The wages for the agricultural labourers in the Thanjavur district are governed by the Tanjore Pannaiyal Protection Act, 1952, which came into force on 23rd August 1952.

Sri C. MUTHIAH: பண்ணையாள் சட்டத்தில் வராத தினசரி தொழிலாளர்களுக்கு கூலி நிர்ணயம் செய்யக்கூடிய சட்டத்தை 1959-ம் ஆண்டுக்குள் கொண்டுவரப்போவதாகச் சொன்னுர்கள். சொந்த ஜில்லாவை விட்டு இதர ஜில்லாக் களுக்கு எல்லாம் அதைச் செய்த அமைச்சர் அவர்கள் சொந்த ஜில்லாவுக்கு அதைச் செய்வதற்கு எத்தனை காலம் ஆகும் என்று கேட்கிறேன்.

The Hon. Sri R. VENKATARAMAN: இதன்காரணமாக சொந்த ஜில்லாவுக்குப் பாரபட்சம் காட்டுகிருர்கள் என்று சொல்லமாட்டார்கள் அல்லவா?

17th March 1960]

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: பண்ணையில் வேலை செய்பவர்கள் தினப்படி எத்தனை மணி நேரம் வேலை செய்யவேண்டும் என்று கேட்கிறேன்? குறைந்தபட்ச கூலி சட்டத்தின் கீழ் 8 மணி நேரம் வேலை செய்யவேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா?

THE HON. SRI R. VENKATARAMAN: குறைந்தபட்ச கூலியை நிர்ணயம் செய்துவிட்டு வேலை நிர்ணயம் செய்வார்கள். அதன் படி வேலை செய்யவில்லையென்றால் அதிகாரிகள் மூலம் இதை அமுல் நடத்த முடியும்.

SRI M. C. MUTHUKUMARASWAMY: தஞ்சை ஜில்லா பாது காப்புச் சட்டப்படி இன்று தஞ்சை ஜில்லாவில் எத்தனை பண்ணை யாள் இருக்கிறார்கள் என்று அறிவதற்கு அரசாங்கம் ஏதாவது வழிவகை செய்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN: அது இந்தக் கேள்வி யின் கீழ் எழவில்லை.

SRI T. R. RAMAMURTHA THONDAIMAN: தஞ்சை ஜில்லா வில் பண்ணையாள் அத்த கூலிகளாக வேலை செய்யக் கூடியவர்களுக்குக் குறைந்தபட்ச கூலி சட்டத்தை எப்போது தான் கொண்டுவரப் போகிறார்கள். கூலியாட்களின் புரட்சி ஜாஸ்தியாகி, தங்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்வதற்கு அவர்கள் கிளர்ச்சியிலும் போராட்டத்திலும் ஈடுபட்ட பிறகு தான் அவர்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு இந்த கூலியாள் பாதுகாப்புச் சட்டத்தைக் கொண்டுவர ஏற்பாடு செய்யப்போகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN: கனம் அங்கத்தினர் சொல்வது யோசனையில் இருந்து கொண்டிருக்கிறது. அதைப் பற்றி வெகுசீக்கிரம் முடிவு எடுக்கப்படும்.

SRI K. PERIANNAN: எந்த அடிப்படையில் விவசாயி களுக்கு கூலி நிர்ணயம் செய்யப்படுகிறது என்று அறிய விரும்பு கிறேன்?

THE HON. SRI R. VENKATARAMAN: இதை சர்க்கார் கெஜெட்டில் நோடிபிகேஷன் செய்து, அதற்கு ஆட்சேபனைகள் இருந்தால் தெரிவிக்கும்படியாகச் சொன்னார்கள். அதற்குப் பல ஆட்சேபனைகள் வந்தன. அதையொட்டி இந்தக் கூலி நிர்ணயம் செய்யப்பட்டது.

SRI S. M. ANNAMALAI: தஞ்சை ஜில்லா பாதுகாப்புச் சட்டம் இருக்கிற இடத்திலும், கையோர் மாட்டேர் வாரம் சட்டம் அமுலில் இருக்கிற இடத்திலும் குறைந்தபட்ச கூலி நிர்ணயச் சட்டம் கிடையாது. ஏன் அந்த இடத்திற்கும் விஸ்தரிக்காமல் இருக்கிறார்கள்? அதற்கு ஏதாவது காரணம் உண்டா?

THE HON. SRI R. VENKATARAMAN: இப்போது அவர் களுக்குக் கிடைக்கிற கூலி குறைந்தபட்ச கூலியைவிட அதிகமாக இருக்கிறது என்ற காரணம் தான்.

[17th March 1960

Food Production

* 438 *Q*.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether any scheme sponsored with the assistance of the Ford Foundation for maximising food production in one district has been formulated and sent to the Centre for approval ; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) An outline of a scheme by the Government of India for intensifying agricultural production in selected areas with the assistance of the Ford Foundation has been received from the Government of India.

This scheme is to be implemented as a pilot programme in a selected district having optimum potential for maximising production and to ascertain the most effective wages of expanding food production. Details relating to the scheme have not yet been finalised. Thanjavur District has been selected by the Government for the implementation of the scheme. The finalized scheme is awaited from the Government of India.

"*Package programme*"

*454-A *Q*.—SRI T. S. RAMASAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether Thanjavur district has been finally fixed for the package assistance programme in Agriculture;

(*b*) the details of assistance to be given to individual agriculturists;

(*c*) the total financial and production targets aimed at through the programme; and

(*d*) the date on which this programme will commence?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) *to* (*d*) It has been tentatively decided to implement the scheme in Thanjavur district. Details relating to the scheme have not yet been settled and final decisions will be taken on receipt of the finalized scheme from the Government of India. It has since been proposed to inaugurate the scheme on the Tamil New Year's day, i.e., 13th April 1960.

SRI N. K. PALANISAMI : I have no objection to the Thanjavur district being selected for this purpose. But the point is why the Government are selecting always developed areas and why not they select under-developed areas?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : When the hon. Member raised no objection to the selection of the Thanjavur District. I thought that he agreed with the decision of the Government. On account of the larger production potential, the Thanjavur district has been selected.

17th March 1960]

SRI T. S. RAMASWAMI: May I know whether this scheme will be extended to other areas also in course of time?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Under the scheme only one district is to be taken up. Unless the scheme is expanded, I cannot tell the hon. Member that it may be extended to other districts.

SRI A. GOVINDASAMY: தஞ்சை மாவட்டம் பூராவுக்கும் இந்தத் திட்டம் அமுலுக்கு வருகிறதா? அல்லது சில வறண்ட பகுதிகள் விடப்படுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: தஞ்சை மாவட்டம் பூராவுக்கும் இந்தத் திட்டம் வரும். ஆனால் உடனடியாக வட்டார வளர்ச்சித் திட்டம் எங்கெங்கு நடைபெறுகிறதோ அங்கெல்லாம் தான் முதல்படியாகத் தொடங்கப்படும்.

SRI S. NAGARAJA MONIGAR: Is it only financial help that the Ford Foundation are giving us or are they giving a ready-made scheme, of which they are masters, to be adopted here with suitable changes in the light of the conditions obtaining in the country?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Not merely financial help that is available but there are also other aids. For instance, even if we have the necessary finance, it is not possible to get the necesasry fertilizers required. But under this scheme, the Government will be enabled to get their requirements of fertilizers even with reference to the foreign exchange that should be made available.

Water-supply to Madras City

* 439 Q.—SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether it is a fact that the Department of Geological Survey has succeeded in getting water by drilling underground near Madras; and

(b) if so, the steps taken by the Government to pump out the water to augment Madras City's water-supply?

THE HON. SRI M. A. MANICKAVELU: (a) The survey conducted by the Superintending Geologist, Government of India, has revealed that water bearing stratum might be available near Minjur.

(b) The responsibility for the provision of water supply in the City is that of the Corporation of Madras. The Commissioner, Corporation of Madras, has reported that it may not be advisable to place too much reliance on the underground source for the City water supply.

SRI A. A. RASHEED: Is the Hon. Minister aware that the City's water supply is inadequate and if so, what steps do the Government propose to take to augment the City's water supply?

[17th March 1960

THE HON. SRI M. A. MANICKAVELU : As regards inadequate supply, not only the Minister but others also know about it. But the question is how to augment the water supply. Certain schemes for improvement are under way. There is a plan for the current Plan period, for the next Plan period and for the next Plan period also.

SRI K. ANBAZHAGAN: இந்த நிலத்திற்கு அடியில் உள்ள தண்ணீரே குறைவான அளவு கிடைக்கிற காரணத்தினுல் அது சென்னை நகரத்திற்கு மிகுதியாகப் பயன்படாது என்று கருதியிருந்தாலும், நகரத்தில் 7-1/2 லட்சம் மக்களுக்கு தண்ணீர் வசதி செய்வதற்காக முன்பு செய்த ஏற்பாடுகள் இப்போது 22 லட்சம் மக்களுக்கு சப்ளை செய்ய முடியாது இருப்பதனுல் சென்னை கார்ப்பரேஷன் வேறு பெரிய மாற்று திட்டத்திற்கு விண்ணப்பித்துக்கொள்கிற காலத்தில் அதற்கு சர்க்கார் உடனடியாக அனுமதி அளித்திருக்கிறுர்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU: பெரிய திட்டம் என்றுல் வடக்கே உள்ள நதியில் இருந்து தண்ணீர் கொண்டு வரக் கூடிய திட்டமாக இருந்தால் தான் ஏராளமாகத் தண்ணீர் கிடைக்கும். அதோடு இஸ்ரேலில் கடல் தண்ணீரைக்கூட சுத்தம் செய்து நல்ல தண்ணீராக உபயோகிக்கக்கூடியது சாத்தியம் என்ற முடிவுக்கு வந்திருக்கிறுர்கள். அதையும் கொஞ்சம் பொறுத்திருந்து பார்த்தால் சௌகர்யமாகப் போய்விடும்.

SRI K. VINAYAKAM : Sir, is the Hon. Minister aware of the fact that of late in the extended areas like Kodambakkam and Saidapet, water is not being flown into the taps but instead gas is being thrown out of the taps. In order to solve this problem of scarcity of water, will the Hon. Minister give instructions to the Corporation authorities to sink local wells in the areas concerned and solve the problem immediately?

DEPUTY SPEAKER : How does this question arise?

THE HON. SRI M. A. MANICKAVELU : I think the Corporation is looking into all that.

SRI C. N. ANNADURAI: சிதம்பரத்துக்குப் பக்கத்தில் சேத்தியாதோப்புக்கு அருகில் இருக்கிற வீராணத்து ஏரியில் இருந்து காவிரி தண்ணீர் கொண்டுவரும்படியான ஒரு திட்டத்தை கார்ப்பரேஷன் சர்க்காருக்கு அனுப்பி இருக்கிறதா?

THE HON. SRI M. A. MANICAVELU : Not that I am aware of.

SRI A. GOVINDASAMY : வெளி ராஜ்யங்களில் இருந்து தண்ணீர் கொண்டுவருவதற்கு மற்ற ராஜ்ய அரசாங்கத்தோடு கலந்து பேசிக்கொண்டிருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் தம்முடைய உரையில் சொல்லியிருக்கிறுர்கள். அப்படிப் பேசி

ஒரு சுமுகமான முடிவுக்கு வந்து, கிருஷ்ணு தண்ணீரை இங்கே கொண்டுவருவதற்கு வேண்டிய முயற்சிகளை அரசாங்கம் எடுத்துக்கொள்ளுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: அந்த விஷயத்தை மத்திய அரசாங்கத்து இர்ரிகேஷன் கமிட்டியிலே பரிசீலனை பண்ணுகிறார்கள். அப்படிக் கொண்டுவருவது என்றாலும் அங் கங்கே நாச்சுவரல் ப்ளோ இருக்குமோ அங்கெல்லாம் பார்க்க வேண்டும். இல்லாத இடத்தில் பம்பு பண்ண வேண்டும். இதை யெல்லாம் பரிசீலனை செய்து தான் ஒரு முடிவு எடுக்கப்படும்.

SRI K. ANBAZHAGAN: சென்னை நகரத்திற்கு வழங்கப்படு கின்ற தண்ணீரில் 10 மில்லியன் காலன் மெகானிகல் பில்டர் மூலம் வடிக்கப்பட்டு வழங்கப்படுகிறது. இதை 30 மில்லியன் காலன் அளவிற்கு வடிக்கட்டி வழங்குவதற்கு புதிய இயந்திரம் அமைக்க அரசாங்கத்திடம் அனுமதி கேட்கப்பட்டதா? அதற்கு அரசாங்கம் ஆதரவு அளிக்கிறதா?

DEPUTY SPEAKER: The hon. Member may put a separate question.

Exhibition at Mysore

*440 Q.—SRI M. P. SARATHI: கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப் பாரா—

(அ) இந்த ஆண்டு மைசூரில் நடந்த பொருட்காட்சியில் இந்த அரசாங்கம் பங்கு கொண்டதா?

(ஆ) எந்த அளவில்?

THE HON. SRI C. SUBRAMANIAM: (a) Eight Departments, viz., Highways, Handlooms, Cinchona, Industries, Technical Education, Jails, Forest and Khadi participated in the Bangalore Exhibition.

(b) A sum of Rs. 2,61,250 was sanctioned for all the participating departments. The actual expenditure will be known after reports are received from Heads of Departments.

Idol found near Bhuvanagiri

*441 Q.—SRI A. VEDARATHNAM: கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) சிதம்பரம் தாலூக்கா புவனகிரிக்கு அடுத்த பெரு மாத்தூரில் சமீபத்தில் ஏதேனும் விக்கிரகம் தோண்டியெடுத் துக் கண்டுபிடிக்கப்பட்டதா?

(ஆ) என்ன விக்கிரகம்?

(இ) அதை என்ன செய்ய உத்தேசம்?

[17th March 1960

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Yes, Sir.

(*b*) Idols of Kothandaramar with peedam and Amman with peedam.

(*c*) The idols will be disposed of as per the provisions contained in the Indian Treasure Trove Act.

SRI A. VEDARATHNAM : இந்தமாதிரி பூமியில் இருந்து எடுக்கப்பட்ட விக்கிரகங்கள் அந்தந்த ஊர் மக்களுக்கு கொடுத்துவிட்டு அந்த ஊர் மக்கள் வழிபாடுசெய்வதற்கு ஏற்பாடு செய்ய அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அரசாங்கம் முன் வருவதற்கு முன்னமேயே அங்கு இருக்கக்கூடிய மக்கள் அதை அங்கு வைத்து பூஜை செய்வதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

Second Five-Year Plan

* 442 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the eexcution of various schemes under the Second Five-Year Plan was reviewed during November 1959; and

(*b*) what are the bottlenecks that came in the way of executing the Plan?

THE HON. SRI C. SUBRAMANIAM. (*a*) Yes. The progress of the various schemes under the Second Five-Year Plan for the half-year ended 30th September 1959 was reviewed by the State Development Committee at its meeting held on 24th and 25th November 1959.

(*b*) The main bottlenecks were shortage of steel and difficulties in obtaining foreign exchange but in spite of these difficulties, fair progress is being maintained.

Sri N. K. Palanisami rose.

DEPUTY SPEAKER : During the general discussion on the budget the hon. Member has spoken already about it. There is no use of putting any supplementary question now. Next question.

Extension of the Madras Harbour

* 443 *Q.*—SRI A. A. RASHEED,
SRI N. K. PALANISAMI : } Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether any amount has been offered by the Government of India as compensation for the extension of harbour opposite the Secretariat; and

(*b*) if so, the amount accepted?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI A. A. RASHEED: Is it a fact that Rs. 2 crores were offered by the Government of India for shifting the present Secretariat to some other place? If so, may I know the reason for rejecting the Rs. 2 crores offer?

THE HON. SRI M. A. MANICKAVELU: Not Rs. 2 crores. The Port Trust offered a contribution of Rs. 30 lakhs for the shifting of Secretariat. It was thought then that it was not a feasible proposition.

A certain extent of land opposite to Secretariat was given to the Port Trust for their expansion at the rate of Rs. 6,000 per ground.

SRI N. K. PALANISAMI: May I know whether there is any trouble between this Government and the Central Government regarding acquisition of lands?

THE HON. SRI M. A. MANICKAVELU: Why trouble? I don't understand the question.

SRI P. S. CHINADURAI: செகரெடேரியட் அமைந்திருக்கிற இடத்தில்தான் ஆங்கிலேயர்கள் ஆதிக்கம் செலுத்தி வந்தார்கள். ஆகவே இந்த இடத்தைவிட்டு வேறு நல்ல இடத்தில் செகரெடேரியட்டை அமைக்க அரசாங்கம் முன் வருமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: எப்போதோ ஒரு காலத்தில் யாரோ இருந்தார்கள். இப்போது நாம்தான் வேலை செய்துவருகிறோம்.

SRI A. GOVINDASAMY: நம் செக்ரெடேரியட் எதிரிலேயே ஹார்பர் வேலை நடப்பதால் சத்தம் ஏற்படுமல்லவா. ஆகவே அந்த சத்தத்தை தடுப்பதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: அப்படி சத்தம் வருவதற்கில்லை. யார்டில் சாமான்களை எடுத்துச் செல்லும் போதுதான் சத்தம் ஏற்படும். அப்படி சத்தம் ஏற்படும் காலத்தில் பார்த்துக்கொள்ளலாம்.

Motor Vehicles Insurance Scheme

*444 Q.—SRI M. P. SARATHI: கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவு செய்து கிழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா—

(அ) மோட்டார் வாகன இன்ஸ்யூரன்ஸ் திட்டத்தை அரசாங்கமே ஏற்று நடத்தும் யோசனை பரிசீலிக்கப்படுகிறதா?

(ஆ) அது எந்த நிலையில் உள்ளது.

THE HON. SRI C. SUBRAMANIAM: (a) & (b): There is no such proposal now under consideration of the Government.

[17th March 1960

Basic Schools in Kanyakumari district

*445 Q.—Sri A. VEDARATHNAM: கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) கன்யாகுமரி ஜில்லாவில் எத்தனை ஆதாரக் கல்வி பள்ளிகள் இருக்கின்றன?

(ஆ) அவற்றில் அரசாங்கம் நடத்தும் பள்ளிகள் எத்தனை? உதவி பெறும் பாடசாலைகள் எத்தனை?

The Hon. Sri C. SUBRAMANIAM: (a) 34, Sir.

(b) Government 30.

Aided 4.

Tamil University

*446 Q.—Sri N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Home be pleased to state the steps taken by the Government to start a Tamil University in this State out of the funds from the Hindu Religious Endowments?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: There is no such proposal pending before the Government.

Sri N. K. PALANISAMI: The Hon. Minister has stated in this House during the discussion on Hindu Religious and Charitable Endowments Bill that about 14 or 15 acres have been selected in Palani for this purpose. May I know whether that proposal has been dropped?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: That referred to the location of another institution and not a Tamil University. It referred to the College of Oriental Culture which is proposed to be instituted at Palani under the auspices of Devasthanam.

Complaint against a lecturer in the Arts College, Ootacamund

*447 Q.—Sri A. A. RASHEED: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether a complaint against Sri Appah Pillai, Lecturer in Psychology, Government Arts College, Ootacamund, has been received from the parent of a girl student studying in B.Sc. Class alleging that he has seduced that girl;

(b) whether the matter has been placed in the hands of Police for investigation; and

(c) if so, the present stage of investigation?

The Hon. Sri C. SUBRAMANIAM: (a) A complaint against the former Assistant Lecturer in Psycholagy, Government Arts College, Ootacamund, and another Assistant Lecturer, has been received from the father of a girl who was studying in the I B.Sc. Class of the College.

(b) No, Sir.

(c) The matter is being enquired into departmentally.

17th March 1960]

SRI A. A. RASHEED : May I know the reason for the delay in referring the matter to the Tribunal? May I also know whether it is a fact that the lecturer has been transferred to Mental Hospital?

THE HON. SRI C. SUBRAMANIAM : The hon. Member seems to be posted with facts more thoroughly than I am. The difficulty is we should get the facts and also perhaps the mental condition of the person concerned. Then perhaps we may have to refer it to the Tribunal. If any criminal action is necessary I think it should be left to the parties concerned.

SRI M. KALYANASUNDARAM : If the lecturer concerned is transferred to Mental Hospital, is it for treatment or for teaching?

THE HON. SRI C. SUBRAMANIAM : I do not think there is any teaching programme in the Mental Hospital.

SRI N. R. THIAGARAJAN: நாட்டின் நலம் பற்றிய நல்ல கேள்விகள் அனுமதிக்கப்படாமல் மஞ்சள் பத்திரிகையில் வெளியாகும் செய்திகளைப்பற்றிக் கேட்டால் இங்கு பதில் அளிக்கப்படுகிறது. இது நியாயமா ?

DEPUTY SPEAKER : The hon. Member is casting aspersions against the Chair. He should withdraw them.

SRI N. R. THIAGARAJAN : I withdraw.

THE HON. SRI C. SUBRAMANIAM : He is withdrawing what he has said, Sir.

DEPUTY SPEAKER : Next question.

Pataskar Award

* 448 Q.—SRI N. K. PALANISAMI AND SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether this Government have represented to the Centre to give effect to the transfer of territories under the 'Pataskar Award' from January 1960; and

(b) whether the records and other materials belonging to Madras State have been received from the Andhra Government?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) & (b) Yes, Sir. The Government of India have, however appointed the 1st day of April 1960 as the date on which the Andhra Pradesh and Madras (Alteration of Boundaries) Act, 1959, shall come into force.

Both the State Governments are taking action for the separation of records relating to the areas to be transferred from one State to the other. The actual transmission of records will take place on or after the appointed day.

[17th March 1960

SRI N. K. PALANISAMI : What are the financial losses sustained by our State due to transfer of some of our territories to Andhra State?

THE HON. SRI C. SUBRAMANIAM : I do not think there should be financial loss. Certain areas are going to Andhra and certain areas are coming to Madras. I have not struck the balance-sheet on these things.

SRI M. KALYANASUNDARAM : இந்தச் சட்டம் செல்லத் தக்கது அல்ல என்று ஆந்தரா ஹை கோர்ட்டில் ரிட் மனு போட்டு அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அதன் முடிவு என்ன என்பது ஒரு பக்கம் இருந்தாலும், அட்மிட் ஆகப்பட்டது, ஆனால், அலவ் பண்ணவில்லை; இதனால் குறிப்பிட்ட தேதியில் நமது தமிழ் நாட்டோடு இணைக்கப்படவேண்டிய பகுதிகள் தடை செய்யப்படும். ஆகவே சர்க்கார் தரப்பில் பிரதிநிதியை அங்கு வாதிப்பதற்காக அனுப்புகிறார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதைப் பற்றிய ஒரு குறிப்பு பத்திரிகையில் வநததை நான் பார்த்தேன். அதற்கெல்லாம் தடை உத்தரவுபோடவில்லை. அதுபோன்ற சட்டங்கள் நாம் இயற்றியிருக்கிறோம். இந்தச் சட்ட்டங்களைப் பற்றி எதுவும் எந்தக் கோர்ட்டிலும் கூறவில்லை. இம்மாதிரி கோர்ட்டில் ரிட் போடுவதற்கு எல்லோருக்கும் உரிமை உண்டு. அதைப்பற்றி கவலைப்படுவது நல்லது அல்ல. இதில் என்ன நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதுபற்றி அதிகாரிகளைக் கலந்து ஆலோசித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

SRI C. N. ANNADURAI : What is the nature of the area we are getting? Is it financially deficit or surplus?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதிலே பைனான்ஸ் டெபிஸிட், லாபவரி என்று கணக்கு எடுக்கப்படவில்லை. மக்களைப் பொறுத்தவரையில் அதிக மக்கள் இருக்கிறார்கள். மக்கள் வருவது நல்லதாக இருக்கலாம். வளத்தைப் பொறுத்த வரையில் வளம் உள்ள பகுதி ஆந்திராவுக்குப் போகிறது. கொஞ்சம் வளம் இல்லாத பகுதி இங்கு தமிழ் நாட்டுக்கு வருகிறது.

SRI K. VINAYAKAM : Sir, in the absence of any directions from the High Court of Hyderabad, will this Government proceed with the arrangements to take over the area which is transferred under this award?

THE HON. SRI C. SUBRAMANIAM : The arrangements are proceeding without any interruption whatsoever. Therefore, the hon. Member need not be apprehensive that anything would be stopped simply because of that High Court judgment. Of course, if there is a valid, legal order, we will have to consider the consequences of that order.

17th March 1960]

Infectious Diseases Hospital for South Madras

* 449 Q.—Sri A. A. RASHEED : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether the Government have decided to open an Infectious Diseases Hospital at South Madras; and

(b) if so, when and where?

The Hon. Sri M. A. MANICKAVELU : (a) Yes, Sir.

(b) The matter is under consideration.

Sri A. A. RASHEED : Sir, what is the reason for the delay in opening the hospital?

The Hon. Sri M. A. MANICKAVELU: அடையாறு பக்கத்தில் ஊரூர் என்ற இடத்தில் இடம் பார்த்தார்கள். ஆனல் காந்தி நகர், கஸ்தூர்பா நகர் போன்றயிடங்களில் உள்ளவர்கள் அங்கு வைக்கக்கூடாது என்று சொன்ஞர்கள். இப்பொழுது வேறு இடம் பார்க்கப்பட்டுவருகிறது. இப்பொழுதுள்ள ஆஸ்பத்திரி யிலேயே சில மாறுதல்கள் செய்வதற்காக அரசாங்கம் 2 லட்சம் ரூபாய், வேறு இனத்திற்குக் கொடுக்கப்பட்டதை இதற்கு உபயோகிக்கலாம் என்று கருதியிருக்கிறது.

Sri A. A. RASHEED : Sir, may I know whether the hospital will be run by the Government or by the Corporation?

The Hon. Sri M. A. MANICKAVELU: இப்பொழுது கார்ப்ப ரேஷன்தான் நடத்திவருகிறது. பூமி பார்த்து கட்டிடம் கட்டி அதை ஆரம்பிக்கிறபோது அதைப்பற்றி கவனிக்கலாம்.

Sri M. P. SARATHI: இந்த தொத்துநோய் ஆஸ்பத்திரியை ஜில்லாவாரியாக ஏற்படுத்த சர்க்காருக்கு திட்டம் ஏதாவது இருக்கிறதா ?

The Hon. Sri M. A. MANICKAVELU: இப்பொழுது ஒன்று மில்லே.

Araniar Reservoir

* 450 Q.—Sri N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Works be pleased to state—

(a) whether final agreement has been arrived at between Andhra and Madras regarding the quantity of water to be supplied to the Madras State from the Araniar Reservoir; and

(b) if so, the details thereof?

The Hon. Sri P. KAKKAN : (a) Not yet, Sir.

(b) Does not arise.

[17th March 1960

Sri N. K. PALANISAMI: இந்த ஆரணியார் ப்ராஜெக்ட் கட்ட நான்கு வருடங்களுக்கு மேலாகியும் போதுமான தண்ணீர் நமது ராஜ்யத்திற்கு வரவில்லே. அதற்குக் காரணம், இந்த ஒப்பந்தம் பூர்த்தியாகவில்லே என்பது. அதில் தாமதம் ஏற்படக் காரணமென்ன ?

The Hon. Sri P. KAKKAN: இரு மாகாணங்களும் சேர்ந்து ஒரு முடிவு எடுக்க வேண்டும். அதற்காக ஒரு கமிட்டி போடப் பட்டிருக்கிறது. ஸோனல் கௌன்ஸில்தான் முடிவு எடுக்க வேண்டும்.

Fertilizers

* 451 *Q*.—Sri A. A. RASHEED: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether it is a fact that fertilizers are being taken out of the State soon after allotment; and

(*b*) if so, the steps taken to stop this?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: The Government have been receiving reports regarding movement of fertilizers outside the Madras State and they are under investigation. As there is no ban on the inter-State movement of fertilizers, it is not possible to stop such movement completely. However, with a view to check the movement of stocks outside the State, instructions have been issued to distributors not to sell the stocks allotted to them, to persons outside the State. Manure mixing firms in the approved list have also been instructed not to supply their manure mixtures for indents from areas outside the State.

Sri A. A. RASHEED: Sir, may I know whether the Government have got any information regarding the quantity that has been taken out of the State?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: This Government have no such information.

Sri S. M. ANNAMALAI: ரசாயன உரம் வெளியிலே கடத்திச் சொல்லப்படுவது வட ஆற்காடு மவாட்டத்தில் தான் அதிகம் என்று ஒரு கேள்விக்குப் பதிலளிக்கும் போது அமைச்சர் அவர்கள் கூறினுர்கள். அப்படியானுல் உடனடியாக அதை படுப்பதற்கு சர்க்கார் என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறது ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: அவ்வாறு விடையளித்ததாக எனக்கு நினைவில்லே. அப்படி, பல ஜில்லாக்களிலும் போகிறது. வெளி ராஜ்யங்களிலிருந்தும் வருகிறது. கூடுமான வரையில் அதைத் தடுக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப் பட்டு வருகின்றன. சமீபத்தில் ஒரு முடிவு செய்யப் பட்டிருக் கிறது. கூட்டுறவுச் சங்கங்களுக்கே விநியோகம் செய்ய அளிப்பது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

SRI M. KALYANASUNDARAM: இனி உர வினியோகம் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நடைபெறுமென்று சர்க்கார் முடிவு எடுத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இருப்பினும் சில தனியார்கள் கலப்பு உரம் செய்வதற்காக இந்த உரம் அனுமதிக்கப்பட்டிருப்பதால் அவர்கள் தங்கள் இஷ்டம் போல் வெளிராஜ்யங்களுக்கு அனுப்ப வசதியிருக்கிறது என்பதால் அவர்களை கூட்டுறவு சங்க ஏஜென்டுகளாக நமது ராஜ்யத்தில் நியமிக்க வேண்டுமென்று சர்க்கார் உத்தரவு இடுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: மனியுவர் மிக்ஸிங்க் என்பது தெரிந்து செய்ய வேண்டிய வேலை. கூட்டுறவு ஸ்தாபனங்கள் அவைகளை உற்பத்தி செய்வது என்பது இப்பொழுது எதிர்பார்ப்பதற்கு இல்லை. டிஸ்ட்ரிப்யூஷன் இப்பொழுது கூடுமான வரைக்கும் கூட்டுறவு சங்கங்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது.

SRI K. R. NALLASIVAM: கூட்டுறவுச் சங்கங்களே உரங்களை சரியானபடி விவசாயிகளுக்குக் கொடுக்காமல் வெளியே கடத்தி வருவது சர்க்காருக்குத் தெரியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அப்படியும் இருக்கலாம். ஆனல், இம்மாதிரி புகார்கள் கூட்டுறவுச் சங்கங்களைப் பற்றி வருவது மிகவும் குறைவு. தனி நபர்களைப் பற்றித்தான் அதிகமாக வருகிறது.

SRI A. GOVINDASAMY: வட்டார வளர்ச்சிப் பகுதித் திட்டத்திலுள்ள எல்லாக் கிராமங்களிலும் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தாலும் குறிப்பிட்ட நாலைந்து இடங்களில் மட்டும் இந்த உரத்தை வைத்து விநியோகிப்பதால் விவசாயிகளுக்கு கஷ்டம் ஏற்படுகிறது. அதைத் தவிர்க்க எந்தெந்த கிராமங்களில் கூட்டுறவு இயக்கம் இருக்கிறதோ அங்கெல்லாம் வைத்துக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இதுவும் அரசாங்கத்தின் கருத்தில் இருக்கிறது. இப்பொழுது, கூடுமான வரையில் கிராம ரீதியில் அளிக்க ஏற்பாடு செய்வது என்பது பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்து வருகிறது.

SRI V. K. KOTHANDARAMAN: கூட்டுறவுச் சங்கங்களில் இருந்து பங்கிடப்பட்டவுடனே வெளியே கிடத்திச் செல்ல முயற்சி செய்த 24 மூட்டை உரங்களை குடியாத்தம் தாலூகாவில் மூன்று மாதங்களுக்கு முன்பு பிடிக்கப்பட்டு கொடுக்கப்பட்டது. அந்த கூட்டுறவுச் சங்கத்தின் லைசென்ஸ் கான்ஸல் செய்யப்பட்டது. ஆனல் அதன் பேரில் ப்ராஸிக்யூஷன் நடவடிக்கை எடுத்து அதன் பேரில் கேஸ் போடாத நிலையில் இருக்கிறது. அது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? அதன் பேரில் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இதுபற்றிய தகவல் என்னிடம் இல்லை. ஆனல் ஒன்று கனம் அங்கத்தினர் அவர்களுக்கு சொல்கிறேன். சட்டப்படி என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளக் கூடுமோ அவைகள் எல்லாம் எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது.

[17th March 1960

SRI R. SRINIVASA IYER: மத்திய அரசாங்கத்தில் இந்த உரம் விநியோகிப்பது பற்றி ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது. சென்னை ராஜ்யத்தில் சில ஜில்லாக்களில் அது சுற்றுப்பிரயாணம் செய்து கடைசியாக இங்கு சர்க்கார் அதிகாரிகளுடன் கலந்து பேசினார்கள். அதன் யாதாஸ்து ஏதாவது சர்க்காருக்கு வந்திருக்கிறதா ? அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அந்தக் கமிட்டியார் இந்த அரசாங்கப் பிரதிநிதிகளிடம் கலந்து பேசினார்கள். ஆனால் அவர்கள் என்ன சிபாரிசு செய்திருக்கிறார்கள் என்ற விவரம் இப்பொழுது என்னிடம் இல்லை.

Undetected murders in Virinchipuram

* 452 *Q.*—SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of murders that remain undetected for the years 1958 and 1959 in Virinchipuram, North Arcot district; and

(*b*) the reason for not apprehending the culprits for such a long time?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Nil.

(*b*) Does not arise.

SRI A. A. RASHEED: Sir, is the Hon. Minister aware that in a recent murder case, the accused was let on bail though he was charged with murder, and who later on tampered with the witnesses?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I am sorry that I have no other information except what I have given in my answer.

Menthol yielding plants in Coimbatore

* 453 *Q.*—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether any experiment has been conducted in growing menthol yielding plants in Coimbatore; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) The Cinchona department, has been conducting experiments in the cultivation of menthol yielding plants, in the Government Cinchona Plantations in the Nilgiris and in the Anamalais in Coimbatore district from 1950–51.

(*b*) Experimental trials for the cultivation of menthol yielding plants in the Moyar Division have been conducted in the Government Cinchona Plantations, Nilgiris, where fertile lands and facilities for irrigation almost throughout the year are available and in the Anamalais. The cultivation of *Mentha Piperita* was discontinued a year ago in the Anamalais and its cultivation is however concentrated in the Moyar Division.

SRI N. K. PALANISAMI : Sir, out of the experiments conducted so far, may I know to what extent menthol can be exploited for commercial purposes?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, the experiments are not yet complete.

Arumugam Murder Case

* 454 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Home be pleased to state the reasons for not filing an appeal against the acquittal of accused Sri Natarajan and others, in Arumugham's death case?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Government have been advised that this is not a fit case for filing appeal against acquittal.

SRI A. A. RASHEED : Sir, may I know whether the acquitted persons have been reinstated?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I would like to have notice.

SRI K. VINAYAKAM : Sir, does not the judgment delivered by the judge say that he was acquitted on grounds of 'benefit of doubt'? In these circumstances, do not the Government think that it is a fit case to go in for an appeal?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, the Public Prosecutor has been consulted, and it is in accordance with his opinion that it was decided not to file an appeal. But if the hon. Member, who is himself a lawyer, can give me a note about his own legal opinion, I would consult the Advocate-General on it.

DEPUTY SPEAKER : Questions are over.

[*Note*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—PRIVILEGE MOTION *re.* A RESOLUTION PASSED BY THE MADRAS CORPORATION COUNCIL.

DEPUTY SPEAKER : Sri A. A. Rasheed has given notice of a privilege motion. He says—

"I hereby give notice of the following motion of breach of privilege :—

The Corporation of Madras at its meeting held on the 15th March 1960, has passed a resolution 'regretting the statements made by Messrs. C. Rajam Ramaswamy, K. S. G. Haja Sheriff and K. Vinayakam on the floor of the Legislative Assembly in regard to the administration of the Madras Corporation'. The speeches referred to were made by the Members concerned during the general discussion on the Budget for 1960–61 which is now going on. The mover of the resolution in the Corporation has stated, according to the report published in the *Indian Express*, dated Wednesday, 16th March 1960, that the concerned Members of the Legislative Assembly had 'misused the privileges they had as Members of the Legislature'.

According to Article 194 of the Constitution of India every Member has got freedom of speech in the Legislature and no Member of the Legislature of a State can be questioned even in a court for anything said in the Legislature. Casting aspersions against Members on account of their speeches in the Legislature by the Corporation of Madras, which is a creature of the Legislature, constitutes a breach of privilege. This may, therefore, be referred to the Committee of Privileges. I also enclose herewith the *Indian Express*, dated 16th March 1960."

9-30 a.m. SRI M. KALYANASUNDARAM : Sir, on a point of order. First of all, we are not informed who has given notice of the motion. . .

DEPUTY SPEAKER : Even in the beginning, I have stated that the hon. Member Sri Rasheed has given notice of the motion.

SRI M. KALYANASUNDARAM : All right. That is what I wanted to know by way of information. Now, my point of order is this. For raising a matter of breach of privilege, two ingredients are necessary. One is that it should be one of recent occurrence. No doubt, it is a matter of recent occurrence. Secondly, it should be raised at the earliest possible opportunity. This has happened two or three days ago and it was published yesterday. So, may I know whether the Deputy Speaker is of the view that it has been raised at the earliest possible opportunity.

DEPUTY SPEAKER : Yes. This motion was given to me yesterday itself. This will be taken up on Monday.

III.—NON-PUBLICATION IN THE NEWS PAPERS OF THE WITHDRAWAL OF CERTAIN REMARKS MADE BY A MEMBER.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I would like to bring another matter to the notice of the House with regard to the publication in the newspapers of yesterday's proceedings. You may remember that the Leader of the Dravida Munnetra Kazhagam Legislature Party referred to my conduct in the Assembly. I put this specific question to him whether he was saying that my conduct was in contravention of any of the rules and regulations or the procedures laid down in the Assembly. First, he said, ' Yes '. That is why I raised a point of order and brought to the notice of the Chair that it would amount to casting reflection on the conduct of the Presiding Officer and the Leader of the Dravida Munnetra Kazhagam was good enough to withdraw all those remarks unconditionally. These were his words, ' I unconditionally withdraw all those remarks '. But, the papers have published a garbled version of this. The fact that he has unconditionally withdrawn certain remarks has not been published in the newspapers at all.

DEPUTY SPEAKER : I will look into the matter and give my ruling later.

Sri A. Govindasamy rose . . .

17th March 1960]

DEPUTY SPEAKER: There can be no discussion on this point.

SRI A. GOVINDASAMY: I want some clarification, Sir.

DEPUTY SPEAKER: The hon. Member may resume his seat. He cannot ask for any clarification now. I have already stated that I will look into the matter.

IV.—CALLING ATTENTION TO THE SCARCITY OF SUGAR IN TIRUCHIRAPPALLI TOWN AND SURROUNDING AREAS,

SRI V. K. KOTHANDARAMAN: ரூல் 41-ன் கீழ் சுமார் மூன்று மாதத்திற்கு முன்னுல் சர்க்கரைப் பற்றுக்குறை இருந்ததைப் பற்றி ஒரு தீர்மானம் கொடுக்கப்பட்டது. ஆனுல் பற்றுக்குறை நீங்கிய பிறகு, ஓரளவு நீங்கியிருக்கிறது என்று வேண்டுமானுல் சொல்லலாம், பரிபூரணமாக நீங்கிவிட்டது என்று சொல்ல முடியாது. இப்போதும் ஓரளவு பற்றுக்குறை இருக்கிறது. என்றுதான் சொல்லமுடியும். இருந்தாலும் இந்தப் பிரச்னையைப் பற்றி கவனிக்கும் நேரத்தில், திருச்சிராப்பள்ளி டவுனிலும், பல சுற்று வட்டாரங்களிலும் இப்போதும் சர்க்கரை பற்றுக்குறை இருந்துக்கொண்டிருக்கிறது. இந்த நேரத்தில் ஒரு வீசை இரண்டு ரூபாய் முதல் ஐந்து ரூபாய் வரை விற்றுக் கொண்டிருக் கிறது. இதனுல் ஹோட்டல்காரர்களுக்கு மத்தியதர வகுப் பினரும் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறுர்கள். ஆனுல் இன்றைக்குச் சர்க்கார் அதனுடைய விலேயைக் குறைத்து 1 ரூபாய் 11 அணு என்று கொண்டுவந்தும், வெளியில் பல இடங் களிலும் இரண்டு ரூபாய் வீசை ஒன்றுக்கு என்ற முறையில்தான் இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, இதனுல் விவசாயி களும் பாதிக்கப்படுகிறுர்கள், மத்திய தர வர்க்கத் தினரும் பாதிக்கப்படுகிறுர்கள், இடையில் இருக்கக்கூடிய சர்க்கரை ஆலே முதலாளிகள் தான் இதனுல் லாபம் அடையக் கூடிய நிலேமை . . .

DEPUTY SPEAKER: தயவுசெய்து கனம் அங்கத்தினர் சர்க்கார் கொடுக்கக் கூடிய ஸ்டேட்மென்டை சொல்லக்கூடாது, சாதாரணமாக ரூல் 41-ன் கீழ் சுருக்கமாக விஷயத்தை சர்க்கார் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும்.

SRI V. K. KOTHANDARAMAN: ஆகவே சர்க்காருடைய விலேயை உடனே கட்டுப் படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கனம் அங்கத்தினர் அவர்கள் கொடுத்திருக்கக் கூடிய தீர்மானத்தின் மீது மட்டும்தான் என்னுல் இப்போது அறிக்கை சமர்ப்பிக்க முடியும். அதை சமர்ப்பிக்கிறேன்—

Until September 1959, the entire distribution of sugar in the districts was done by the South Indian Sugar Mills Association through the stockists of the sugar factories themselves and a net-work of retailers selected by them. But this system did not work

properly owing to lack of control over the retail dealers. Many complaints were received about non-availability of sugar and the high prices charged by the dealers. The distribution of sugar was therefore taken over by the Collectors of the districts, the South Indian Sugar Mills Association confining itself to the allotment of the basic quotas allotted by the Government of India every month. On the basis of past consumption in this State, the Government of India have fixed a monthly quota of 10 thousand tons or one lakh bags of sugar for Madras State and Pondicherry State. This quota is being released every month by the Government of India both from the factories in this State and factories in Mysore, Andhra or North India.

For the month of November 1959, the allotment of 10,000 tons made by the Government of India comprised 4,000 tons from Madras factories, 2,000 tons from Mysore, 1,000 tons from Andhra and 3,000 tons from North India. For November 1959, Tiruchirappalli district was allotted 10,020 bags of sugar, 5,400 bags from the factories in this State and 4,620 bags from the North India factories. But no portion of the 3,000 tons of sugar alloted from North Indian factories for November 1959, was actually received in the month, with the result that the district to which North Indian sugar was allotted had to manage with reduced supplies. Thus, Tiruchirappalli district had to manage with the 5,400 bags of sugar released from the Madras factories only as against 10,020 bags allotted to it for the month of November. This was the reason for the non-availability of sugar in Tiruchirappalli in that month. For the month of December 1959, the Tiruchirappalli district got a total allotment of 14,000 bags (including the 4,000 bags of North Indian sugar not moved in November 1959). A quantity of 9,840 bags for January 1960 and 9,990 bags for February 1960 were also allotted to the Tiruchirappalli district. The position has improved.

V.—MINISTER'S REPLIES TO CERTAIN SUPPLEMENTARY QUESTIONS.

SRI M. KALYANASUNDARAM : Sir, with your permission, I wish to raise another matter. Yesterday, during question-time, while answering a supplementary question, the Hon. Leader of the House intervened and explained the attitude of the Government to the remarks of the High Court. In the Proceedings, I find these words. He is stated to have said, 'I am sorry in this case the High Court went out of the way to cast aspersions on the duties performed by the legislators'. He also stated that 'we have to ignore those remarks'. But I do not find these remarks in the Proceedings. I want to know if the Hon. Leader of the House has withdrawn these remarks.

DEPUTY SPEAKER : I do not know how the hon. Member can raise this point now.

SRI M. KALYANASUNDARAM : Sir, I am trying to get clarification from the Deputy Speaker. In the copy of the Proceedings sent to me for correction, I do not find the remarks referred

17th March 1960]

to by me. I have corrected my portion and while going through the portion of the Hon. Leader of the House, I noticed the omission of the remarks mentioned by me.

THE HON. SRI C. SUBRAMANIAM : I have corrected my portion of the answers just as the hon. Member has corrected his portion.

SRI M. KALYANASUNDARAM : May I know whether the Hon. Leader of the House has withdrawn those remarks?

THE HON. SRI C. SUBRAMANIAM : I have not withdrawn any remarks. I have made certain verbal alterations. That is all.

DEPUTY SPEAKER : Hon. Members can make verbal alterations. That is why copies of the Proceedings are sent to all the Members so that Members might make some verbal corrections in their speeches if they want.

SRI K. ANBAZHAGAN : While a Member can make verbal changes in his speech, may I know whether it is in order for him to make such changes as will completely change the meaning?

DEPUTY SPEAKER : No, they cannot make changes which will alter the meaning.

THE HON. SRI C. SUBRAMANIAM : While some Members make many changes in their speeches, I am not doing it. I only make verbal changes and corrections.

DEPUTY SPEAKER : Members could make alterations to a certain extent. That has been the practice also.

SRI K. ANBAZHAGAN : When a Minister replied to a supplementary or made some statement, it meant that he was doing so on behalf of the Government. Now that the Hon. Leader of the House has made these changes in his answer, does it mean . . .

DEPUTY SPEAKER : The hon. Member is mistaken. The Hon. Leader of the House has made certain verbal changes. I know it.

SRI P. U. SHANMUGAM : Can a whole sentence be deleted, Sir?

DEPUTY SPEAKER : There can be no further discussion on this point. Now, we will pass on to the next item on the agenda, viz., General Discussion on the Budget.

VI.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR THE YEAR 1960-61 (*cont.*)

SRI K. ANBAZHAGAN : On a point of information, Sir, to-day we have got four hours for discussion. The hon. Leader of the Opposition is expected to speak for an hour and the Hon. Leader of the House may take at least two hours for reply. So, another hour remains and since many Members want to speak, I went to know whether the Deputy Speaker and the Hon. Leader of the House will allow them to speak. Otherwise, it will be against the democratic spirit that should obtain in this House.

[17th March 1960

DEPUTY SPEAKER : It was decided at the meeting of the Business Advisory Committee that to-day—17th—the Leader of the Opposition and the Leader of the House alone would speak. That was the understanding reached at that meeting. That is why we met yesterday afternoon. If the hon. Member was present here yesterday afternoon, he could have spoken. I know there are many Members who want to speak but when once the Business Advisory Committee has decided that the Leader of the Opposition and the Leader of the House only should speak to-day, I am sorry, I cannot go against its decision. If the Leader of the House and the Leader of the Opposition want to change the order, I have no objection.

SRI C. N. ANNADURAI : May I make one suggestion? Since the Leader of the House is not keeping good health, after the Leader of the Opposition makes his speech, fifteen or twenty minutes may be allowed for other Members to speak.

THE HON. SRI C. SUBRAMANIAM : It does not give me any relief, simply because somebody else is speaking.

SRI C. N. ANNADURAI : He can take rest after the strain of hearing an hour's speech.

THE HON. SRI C. SUBRAMANIAM : I am not prepared to accept that it would be strain to hear the speech of the Hon. Leader of the Opposition. I always listen to him with great pleasure. But I do not know the effect of that speech on the Hon. Gentleman opposite. (Laughter.)

SRI C. N. ANNADURAI : I very cautiously made use of the words ' an hour's speech ', not of the hon. Leader of the Opposition or anybody else. Let not the Hon. Leader of the House create trouble on this side. (Laughter.)

SRI M. P. SUBRAMANIAM : I would only make this appeal to the Chair. As there is one hour left, the Chair can consider whether some of the Members can be asked to speak.

DEPUTY SPEAKER : To-day, we have got Demands for Grants. We have to take a Vote on Account. It will take some time. Once we have decided on a thing, we must stick to it. Of course, as I said, I have no objection if the Leader of the Opposition and the Leader of the House agree to spare some time for others.

Now, the Leader of the Opposition will speak.

* SRI V. K. RAMASWAMY MUDALIYAR: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த சட்ட மன்றத்தின் முன்பு சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் 1960–61-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையானது ஒரு பெரிய ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கிறது என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். முக்கியமாக, இந்த வரவு–செலவுத் திட்டத்தைப் பற்றி நானும், எங்களைச் சார்ந்தவர்களும் அதிகமாக ஆச்சரியப்படக் கூடியது ஒன்றுமில்லை என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

17th March 1960] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

தேர்தல் நெருங்க நெருங்க மக்களுக்கு சகாயம் செய்வது போல நடித்து வரிகள் போடவில்லை என்று நமது அமைச்சர் சொல்வது அவர் கொடுத்த அறிக்கையிலிருந்து தெளிவாகிறது. மக்களிடத்தில் போய்ச் சொல்லுகிறார்கள் ஆளும் கட்சியில் இருப்பவர்கள் "உங்களுக்கு வரி போடவில்லை" என்று. அதே நேரத்தில் முதலாளிகளிடத்தில், "உங்களுக்கு வரி இல்லை, சும்மா விட்டு வைத்திருக்கிறோம், ஆகையால் நீங்கள் கட்சிக்கு நிறைய பணம் கொடுத்து உதவ வேண்டும்" என்று சொல்லு கிறார்கள். முக்கியமாக இது தேர்தலுக்காக நிதி திரட்ட வேண்டுமென்ற கொள்கையோடு ஏற்பட்ட பட்ஜெட் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். இந்த இடத்தில் நமது சர்க்கார் வரி போட இன்னும் என்ன இருக்கிறது என்று எனக்கே புரியவில்லை. போடக்கூடிய வரிகளையெல்லாம் மத்திய சர்க்கார் போட்டு எவ்வளவு போட வேண்டுமோ அவ்வளவு தூரம் போட்டு, அதன் காரணமாக மக்கள் பலவிதத்தில் கஷ்டப்பட்டு வருகிறார்கள். உதாரணமாக இப்போது சில வரிகளை நாங்கள் நீக்கிவிட்டோம் என்று ஆளும் கட்சியில் இருப்பவர்கள் சொல்லுகிறார்கள்—அழுகும் பொருள்களுக்கு இருந்த வரியை நீக்கிவிட்டோம் என்று சொல்கிறார்கள். அப்படிப் பார்க்கும்போது எதற்காக இந்த வரியை எடுத்தார் கள்? எதிர் கட்சிக்காரர்களும் வியாபாரிகளும், எல்லோரும் சேர்ந்து செய்த ஒரு கிளர்ச்சியின் காரணமாகத்தான் இதை எடுத்தார்கள் என்று சொல்ல விரும்புகிறேன். தவிர, இம் மாதிரி வரிகள் போட்டதன் காரணமாக சில சங்கடங்கள் ஏற் பட்டன. முக்கியமாக கார்ப்பொரேஷன் தேர்தலில் காங்கிர சுக்கு ஓட்டுகள் கிடைக்காத காரணத்தினால் இம்மாதிரி வரியை எடுக்க முன் வந்திருக்கிறார்கள் என்று நான் சொல்ல விரும்பு கிறேன். இப்போது அழுகும் பொருள்களுக்கு வரியை எடுத்து விட்டிருந்தாலும் "ரா சில்லீஸ்"-க்கு—மிளகாய்க்கு—வரியை எடுக்கவில்லை என்று எனக்குத் தெரிய வருகிறது. அழுகும் பொருளைச் சேர்ந்த பாலுக்கு வரியை எடுக்காமல் இருப்பது எனக்கு வருத்தத்தைக் கொடுக்கிறது. மத்திய சர்க்கார் போட்ட வரிகளால் மக்கள் எவ்வளவு தூரம் கஷ்டப்படு கிறார்கள் என்பதைப் பற்றி நான் அதிகமாகச் சொல்ல வேண்டிய தில்லை. அதன் காரணமாக "காஸ்ட் ஆப் லிவிங்" (cost of living) உயர்ந்திருக்கிறது. அதே போல இன்ஃப்ளேஷன் (inflation) அதிகரிக்கிறது. இதற்கு மத்திய சர்க்கார்தான் காரணம். இருந்தபோதிலும் நமது மாநில சர்க்கார் இவ்விடத்தில் ஏற்பட்டிருக்கும் கஷ்டங்களை மத்திய சர்க் காருக்கு எடுத்துச் சொல்லி அதற்கு ஒரு விதமான பரிகாரமும் தேடவில்லை என்பதைப் பார்க்க ரொம்பவும் கஷ்டமாக இருக் கிறது. அவர்களுக்கு தைரியம் இல்லாததன் காரணமாக மத்திய சர்க்காரிடம் எடுத்துச் சொல்லவில்லையா? இப்படியே விலைவாசிகள் நாளுக்கு நாள் ஏறிக்கொண்டு போனால் இதற்கு என்ன திட்டம் வகுத்திருக்கிறார்கள்? இப்படி ஏறுவதை ஓரளவாவது தடுக்க ஏதாவது திட்டம் வகுக்கிருக்கிறார்களா என்று பார்த்தால் அதைப்பற்றி ஒன்றும் இல்லை. அதிலும்

முக்கியமாக இது ஒரு பட்ஜெட் உரை இல்லை என்பது எனது அபிப்பிராயம். ஐந்தாண்டுத் திட்ட கொள்கையைப் பற்றி, அதைக் குறித்து அமைச்சர் அவர்கள் பேசி இருக்கிறார்களே தவிர இது ஒரு பட்ஜெட் உரை என்று நான் நினைக்கவில்லை. எங்கு போனாலும் முதல் ஐந்தாண்டுத் திட்டம் முடிந்து விட்டது, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கடைசியில் இருக்கிறோம், அதன் மூலமாக எவ்வளவோ செய்திருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். இதிலே முக்கியமாக ஐந்தாண்டுத் திட்டக் கொள்கையைப் பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏராளமான விரயங்கள் செய்வதின் காரணமாக, இதனுடைய பெயரை வைத்துக் கொண்டு மக்களிடத்தில் போய் வரிகளைக் கேட்பதற்காகப் போடப்பட்டிருக்கக் கூடிய திட்டம். இந்தத் திட்டங்களைப் போட்டு அரசாங்கம் நன்மை செய்கிறது என்று சொல்லி அதன் காரணமாக ஏராளமாக வரி போடுவதற்கு ஒரு சாத்தியமான வழியாக இருக்கிறது என்று நான் இன்னும் அதிகமாகச் சொல்ல வேண்டியதில்லை. அரசியல் சட்டத்தின் காரணமாக யாருக்காவது உத்தியோகம் கொடுக்க வேண்டுமென்று சொன்னால் பப்ளிக் ஸர்விஸ் கமிஷன் (Public Service Commission) தான் செய்யவேண்டும். இந்தத் திட்டத்தின் கீழ் வரக் கூடிய திட்டங்களில், உதாரணமாக கிராம சேவக்குகள் போன்ற இடங்களுக்கு தங்களுக்கு வேண்டியவர்களைப் போட்டு அதன் காரணமாக கட்சிப் பிரசாரம் செய்ய வழி இருக்கிறது இந்த ஐந்தாண்டுத் திட்டக் கொள்கையினால். இம்மாதிரித் திட்டங்களைப் போட்டு "இன்ப்ளேஷன்" (inflation) அதிகமாவதன் காரணமாக அன்னியச் செலாணி குறைவதன் காரணமாக பெரிய வியாபாரிகளுக்கெல்லாம் கஷ்டத்தை உண்டு பண்ணுகிறது. இந்தத் திட்டங்களால் நிறைய பர்மிட்டுகள் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆளும் கட்சியில் இருப்பவர்கள் அதைக் கொண்டு கட்சிக்கு ரூபாய் கேட்க வசதி இருக்கிறது. பர்மிட்டுகள் கொடுப்பதன் மூலம் தங்கள் கட்சிக்கு ரூபாய் பெற ஏதுவாக இருக்கிறது. இந்தக் காரியங்களுக்காகத்தான் இந்த ஐந்தாண்டுத் திட்டம் போடப்பட்டிருக்கிறது என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம். இவைகள் எல்லாம் ஒரு திட்டக் கமிஷனால் போடப்பட்டிருக்கிறது. திட்டக் கமிஷன் அங்கத்தினர்கள் கட்சி அடிப்படையிலோ, பார்லிமெண்ட் அங்கத்தினர்களோ தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அல்ல. கிராம மக்களுடன் தொடர்பில்லாத, உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்ற சில குறிப்பிட்ட நபர்களை அங்கத்தினர்களாகப் போட்டு அமைக்கப்பட்டிருக்கிறது அந்தக் கமிஷன். கிராமங்களில் என்னென்ன செய்ய வேண்டும், அவைகளை எப்படி எப்படிச் செய்ய வேண்டும், அவைகளை எந்தக் காலத்தில் செய்ய வேண்டும், கிராம மக்கள் என்ன நிலைமையில் இருக்கிறார்கள், அவர்களுடைய தேவைகள் என்னென்ன, அவைகளை எவ்வாறு பூர்த்திசெய்ய வேண்டும் என்பதெல்லாம் தெரியாதவர்களும், கிராம மக்களுடன் தொடர்பில்லாதவர்களும் துணை நபர்களைக் கொண்டு திட்டக் கமிஷன் அமைக்கப்பட்டிருக்கிறது. அதன்

17th March 1960] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

காரணமாக நிறைவேற்ற முடியாத திட்டங்களை யெல்லாம் அவர்கள் ஐந்தாண்டுத் திட்டங்களாக வகுத்துத் தந்திருக்கிறார்கள். அவைகளை நிறைவேற்ற வேண்டுமென்ற நோக்கத்துடன் ஒவ்வொரு மாநிலத்திலும் நிறைய வரிகள் போடப்பட்டு, அதன் காரணமாக அதிகமான கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு வேண்டிய "ரிஸோர்ஸெஸ்" (resources) நிதி எங்கிருந்து கிடைக்கும்? நாம் வரும் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை எடுத்துக்கொள்வோம். அது சம்பந்தமாக கனம் நிதி அமைச்சர் ஒரு சர்வ கட்சிக் குழுவை அமைத்திருக்கிறார். நான் அக்குழுவில் ஆரம்பத்திலேயே, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு வேண்டிய "ரிஸோர்ஸெஸ்" (resources) நிதி எங்கிருந்து கிடைக்கும் என்று கேட்டிருக்கிறேன். இதைப் பொறுத்தவரையில், அந்தக் குழு தன் அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு முன் கனம் நிதி அமைச்சர் ஏதாவது ஒரு வழி சொல்வார் என்று நம்புகிறேன். பொருளாதாரத் துறையில் நாடு முன்னேற வேண்டுமானால், அதற்கான திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நமக்கு மக்களின் ஒத்துழைப்பும் தேவை. எனவே அதிகமான வரிகளைப் போட்டு மக்கள் அதிருப்தியடையாதபடி நடந்துகொள்ள வேண்டும். அந்த முறையில் மக்களுடைய ஒத்துழைப்பையும் பெற்று இந்தத் திட்டங்களை நிறைவேற்ற சர்க்கார் முன்வர வேண்டும். இந்த விஷயங்களெல்லாம் கொஞ்சமும் கவனிக்கப்படுவதில்லை. மத்திய சர்க்கார் "திட்டங்களுக்கு நாங்கள் ஓரளவு பங்கு பணம் கொடுக்கிறோம். ஆனால் மேற்கொண்டு பணம் கிடைப்பதற்கு வேண்டிய வழியை மாநில சர்க்காரே கண்டுபிடிக்க வேண்டும். வரியின் மூலமாகவோ, வேறு விதத்திலோ மாநில சர்க்கார் பணம் திரட்டி இந்தத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும்" என்று சொல்கிறார்கள். இது தவிர, மத்திய சர்க்காரும் வருஷம்தோறும் வெளிநாட்டாரிடமிருந்து கடன் உதவி பெறுகிறார்கள். மாநில சர்க்காரும் ஒவ்வொரு வருஷமும் சில பெரிய திட்டங்களுக்காகக் கடன் வாங்குகிறார்கள். இந்த வருஷத்திலும், இந்த அறிக்கையின்படி நமது மாநில சர்க்கார் சுமார் 10 கோடி ரூபாய் கடன் வாங்கப்போகிறார்கள். இந்த வரவு-செலவுத் திட்டத்தைப் பார்த்தால், நாம் வருஷவாரியில் வட்டியாகவும், கடனாகவும் திருப்பிக்கொடுக்க வேண்டிய தொகை சுமார் 6-1/2 கோடி ரூபாய் என்று தெரிகிறது. இந்தப் பணத்திற்கு நாம் வழி கண்டுபிடிக்க வேண்டும். நாம் இம்மாதிரியாகக் கடன் வாங்கிக்கொண்டே போனால் இதன் முடிவு என்ன, வாங்கும் கடன்களை எப்போது திருப்பிக்கொடுப்பது என்பது பற்றியெல்லாம் நன்றாக யோசிக்க வேண்டும். ஒருவிதத்தில், திட்டங்கள் போட வேண்டியது தான். ஆனால் நிறைவேற்ற முடியாத, இம்மாதிரியான திட்டங்களைப் போட்டு மக்களுக்குக் கஷ்டங்களை உண்டுபண்ணலாமா என்று எண்ணிப்பார்க்க வேண்டும். இத்திட்டங்களால் இதுவரையில், அதாவது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் மக்களுக்கு நன்மைகள் ஏற்பட்டுள்ளனவா, நாட்டில் ஏதாவது சுபிட்சம் ஏற்பட்

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [17th March 1960

டிருக்கிறதா, மக்கள் முன்னேறியிருக்கிறார்களா, அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்ந்திருக்கிறதா, நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் குறைந்திருக்கிறதா என்று நாம் யோசித்துப் பார்க்க வேண்டும். ஏதோ சில இடங்களில் சில பேருக்கு நாம் வேலை கொடுத்திருக்கலாம், சில இடங்களில் தொழிற்சாலைகள் அமைந்திருக்கலாம். எது எப்படி இருந்தாலும், பொதுவாக எல்லாத் துறைகளையும் பார்த்தால், இந்தத் திட்டங்களால் மக்களுக்கு எந்த நன்மையும் ஏற்பட்டதாக என்னால் கருத முடிய வில்லை. சில இடங்களில் வீடில்லாத் திண்டாட்டம் இருக்கிறது. உணவு தானியங்களின் விலைவாசி ஏறியிருப்பதாலும், மற்ற பல பொருள்களின் விலைவாசி ஏறியிருப்பதாலும் எல்லா இடங்களி லும் கஷ்டங்கள் இருக்கின்றன. சில பகுதிகளில் குடி தண்ணீர் இல்லாத கஷ்டம் இருக்கிறது. சில இடங்களில் சுகாதார வசதி இல்லை. சில பகுதிகளில் கல்வி வசதி இல்லை. ஆகவே பல துறைகளிலும், நாம் முன்னேறியிருப்பதாகக் கருதுவதற் கில்லை.

அடுத்தபடியாக, இந்த பட்ஜெட் மெமொராண்டத்தில், கெஜட் பதிவில்லாத உத்தியோகஸ்தர்களுக்கு சர்க்கார் என்ன செய்யப்போகிறது என்பதுபற்றி கனம் அமைச்சர் ஒரு குறிப்பும் கொடுக்கவில்லை. சென்ற வருஷம் நமது சர்க்கார் சில பகுதி ஊழியர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 5 ரூபாய் வீதம் சம்பள உயர்வு அளித்ததன் காரணமாக மாநில சர்க்காருக்கு 2-1/2 கோடி ரூபாய் அதிகச் செலவு ஏற்பட்டிருக்கிறது; வருஷவாரி மொத்தச் சம்பளமாக சுமார் 24 (24) கோடி ரூபாய் சம்பளம் நம் சர்க்கார் சிப்பந்திகட்கு வழங்கப்பட்டு வருகிறது. நமது மாநில சர்க்கார் ஒரு சம்பளக் கமிஷனை (குழு) நியமித்திருக் கிறார்கள். இந்தக் கமிஷன் நியமிக்கப்பட்டு சுமார் 1-1/2 வருஷ காலம் ஆகியிருக்கும் என்று நினைக்கிறேன். அந்தக் குழுவினர் இதுவரையில் என்ன வேலை செய்திருக்கிறார்கள், அவர்களுடைய ரிபோர்டு எப்போது இந்த சபையிலோ, சர்க்காரிடத்திலோ, சமர்ப்பிக்கப்படும் என்பதெல்லாம் தெரியவில்லை. இது சம்பந்த மாக கனம் அமைச்சரிடம் முன்பு கேள்வி போட்ட போது அவர் " அக் குழுவினர் தங்கள் ரிபோர்ட்டை கூடிய சீக்கிரம் சமர்ப்பிப்பார்கள், அது ஒரு பொறுப்புள்ள குழு, எனவே அதைப்பற்றி அதிகம் பேச வேண்டியதில்லை " என்று சொன்னார். இதற்கென ஸெக்ரடேரியட்டிலேயே (Secretariat) ஒரு ஸெக்‌ஷனை ஏற்படுத்தி ஒரு ஸெக்ரடரியை அதற்கெனத் தனி யாகப் போட்டு, " நான்-அபிஷியல்ஸையும் " (Non-Official) உத்தியோகத்தில் இல்லாதவர்கள் அபிஷியல்ஸையும் (official) அங்கத்தினர்களாகப் போட்டு ஒரு குழுவை அமைத்து அதனிடம் இந்தக் காரியத்தை ஒப்படைத்திருந்தால், அக்குழு ரிப்போர்டை இரண்டு மாத காலத்தில் சமர்ப்பித்திருக்க முடியும் என்பது என் அபிப்பிராயம். சர்க்கார் நியமித்துள்ள இந்தக் குழு ஏன் இன்னும் தன் ரிப்போர்டை சமர்ப்பிக்க வில்லை? இக்குழுவினர் இம்மாதிரி காலதாமதம் செய்து கொண்டே போனால், பின்னர் எப்போது தான் ரிப்போர்டை

17th March 1960] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

சமர்ப்பிக்கப்போகிருர்கள்? இந்தக் காலதாமதம் காரணமாக இந்த உத்தியோகஸ்தர்கள் படும் கஷ்டத்தை சர்க்கார் கொஞ்சமாவது உணர்ந்திருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன். மத்திய சர்க்கார் ஒரு சம்பளக் கமிஷனை அமைத்தார்கள். அக்குழுவினர் தங்கள் ரிப்போர்ட்டை சமர்ப்பிக்குமுன் சாக்ஷிகளை எவிடென்ஸ்கள் (evidence) கேட்டனர், எல்லா மாநிலங்களிலும் சுற்றுப்பிரயாணம் செய்தனர், பலருக்கும் கேள்வித்தாள்கள் அனுப்பினுர்கள். இந்த மாநில சர்க்காரால் அமைக்கப்பட்டுள்ள சம்பளக் குழுவினர் எவிடென்ஸ்கள் (evidence) (சாக்ஷி) கேட்கவில்லை, கேள்வித் தாள்கள் அனுப்பவில்லை. இந்த 1-1/2 வருஷ காலமாக அவர்கள் என்ன செய்திருக்கிருர்கள் என்பது இங்குள்ளவர்களுக்குத் தெரியவில்லை. கனம் அமைச்சர் இந்தக் குழுவினரின் ரிப்போர்ட்டைக் கூடியசீக்கிரம் வரவழைத்து, கெஜட் பதிவில்லாத உத்தியோகஸ்தர்களுக்கு ஏதாவது சலுகை கொடுக்க வேண்டும் என்று நான் ரொம்பவும் கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே மாதம் ஒன்றுக்கு 5 ரூபாய் வீதம் சம்பள உயர்வு அளித்ததால் 2-1/2 கோடி ரூபாய் அதிகச் செலவு ஏற்பட்டிருக்கிறது. இந்த சம்பளக் குழுவினர் என்ன சொல்லப் போகிருர்கள்? முன்பு போலவே குறைந்த அளவு சம்பள உயர்வாக 5 ரூபாய் கொடுத்தாலும் 2-1/2 கோடி ரூபாய் துண்டு விழும் என்று நினைக்கிறேன். சம்பளக் கமிஷன் இன்னும் அதிகமாக சிபாரிசு செய்யுமோ என்னமோ, அதுபற்றி எங்களால் எதுவும் சொல்ல முடியாது. ஆனுல் துண்டுவிழக்கூடிய தொகையைச் சரிக்கட்டுவதற்கு சர்க்கார் என்ன செய்யும் என்பதை கனம் அமைச்சர் தமது பதிலில் திட்டவட்டமாகச் சொல்வார் என்று நினைக்கிறேன். இந்த வரவு-செலவுத் திட்ட உரையில் 38-வது பக்கத்தில் "மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தை வகுக்கும் இத்தருணத்தில் இரண்டாவது திட்டக் காலத்தில் ஏற்பட்டிருக்கும் இந்த அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு விலைவாசிகளை, அதிலும் முக்கியமாக அவசியமான பொருள்களின் விலைவாசிகளை, ஓரளவுக்கு கட்டுப்படுத்துவதற்கான வழிவகைகளை வகுக்க வேண்டியது மிகவும் அவசியம் என்பதை மறுமுறையும் இங்கு வலியுறுத்த விரும்புகிறேன்" என்று கனம் நிதி அமைச்சர் சொல்லியிருக்கிருர். இதைப்பற்றி என்ன செய்யப் போகிருர்கள் என்பதை அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நிர்வாகச் செலவுகளைக் குறைத்து நிர் 10—00 a.m.
வாகத்தை நடத்த சர்க்கார் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிருர்கள்? என்ன நடவடிக்கை இதுவரை எடுத்திருக்கிருர்கள்? நம்முடைய மாகாணத்திலிருந்து ஆந்திர மாகாணம் பிரிந்த பிறகு சில இலாகாக்களில் அதிகமான உத்தியோகஸ்தர்கள் இருக்கும் காரணத்தினுல் நிர்வாகச் செலவு அதிகமாகிக் கொண்டே வருகிறது. முக்கியமாக, உயர்தர அதிகாரிகள் இவ்விடத்தில்தான் அதிகமாக இருக்கின்றனர். உணவு, விவசாய இலாகாவை (Food and Agriculture Department) -ஐ எடுத்துக் கொண்டால் ஏராளமாக அதிகாரிகள் இருக்கிருர்கள். தொழில்

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [17th March 1960

இலாகாவில் (இண்டஸ்ட்ரீஸ், லேபர் அண்டு கோவாப்ப ரேஷன்) ஏராளமான சிப்பந்திகள் இருக்கிறார்கள். ஏதாவது ஒரு குழு நியமித்து இந்தச் செலவினங்களைக் குறைக்க அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று முன்பே ஒரு தடவை கேட்டிருக்கிறேன். அதைப் பற்றி அமைச்சர்கள் திட்டவட்ட மாக என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள் என்பதைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இதற் காகன ஒரு குழு ஒன்றை ஏற்படுத்தி, இது பற்றிப் பரிசீலித்து அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

ப்ளாக் டெவலப்மெண்ட் (வட்டார வளர்ச்சி) எந்த முறை யில் நடந்து வருகிறது என்பது அமைச்சர்கள் எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். பல அங்கத்தினர்களும் பேசியிருக்கிறார்கள். இதிலே எவ்வளவு தூரம் பணம் விரயமாகிறது என்பதையெல் லாம் யோசிக்கவேண்டும். ஒவ்வொரு வட்டாரத்திலும் இருக் கக்கூடிய உத்தியோகஸ்தர்கள் என்ன செய்கிறார்கள்? அந்த வட்டாரங்களில் உள்ள மக்களுக்கு ஏதாவது திருப்தி ஏற்பட் டிருக்கிறதா? அநேக உத்தியோகஸ்தர்கள் ஜீப் காரில் போய்க் கொண்டு ஸ்திரமாக மக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய வேலை களைச் செய்கிறார்களா என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும்? அமைச்சர்கள் அநேக தடவைகள் சுற்றுப் பிரயாணம் செய்கிறார்கள். சுற்றுப் பிரயாணம் செய்யும்போது மனுக்களை வாங்குகிறார்கள். செகரடேரியட் மூலமாகப் போகிறது. ஆனால், மறுபடியும் 2 அல்லது 3 மாத காலம் பொறுத்து அமைச்சர்கள் அதே இடத்திற்குப் போகும்போது பழைய நிலைமையே நீடித்திருக்கிறது. இந்த மனுக்கள் எல்லாம் சரியானபடி பைசல் செய்யப்படாததால் எங்கு பார்த்தாலும் அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது. ஒவ்வொரு வட்டாரத்திற்கும் அமைச்சர்கள் அடிக்கடி போவதன் காரணமாகவும், அப் பொழுது அவர்களுடன் அநேக உத்தியோகஸ்தர்கள் கூடப் போவதன் காரணமாகவும் வேலைகள் தடைப்படுகின்றன; செல வும் அதிகமாகிறது. ஒவ்வொரு வட்டாரத்திலும் சில கிராமங் களுக்கு மட்டுந்தான் சலுகைகள் கொடுக்கப்பட்டு வருகின்றன. அநேக கிராமங்களுக்கு ரோடு வசதி, குடிதண்ணீர் வசதி எதுவும் கிடைப்பதில்லை. அமைச்சர்கள் வந்து போன பிறகு கலெக்டரோ, சப்-கலெக்டரோ அல்லது பொறுப்புள்ள அதிகாரிகளோ ஒவ்வொரு கிராமத்திற்கும் போய், ஜனத் தொகை எவ்வளவு? அத்தியாவசியமான தேவைகள் என் னென்ன? என்றெல்லாம் விசாரித்து பாரபட்சமின்றி வேண்டி யதை கொடுத்து வருகிறார்களா? கொடுக்காமல் இருந்தால் காரணம் என்ன? கிராம நல ஊழியர்கள் மக்களிடம் சென்று அவர்களுடைய குறைகள் அறிந்து வசதிகளைச் செய்யவேண்டு மென்று சொல்லியிருந்தபோதிலும், அவர்கள் இரண்டொரு கிராமங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து விட்டு மற்றக் கிராமங்களைப் புறக்கணிப்பதன் காரணம் என்ன? கடன் மனுக்கள் அநேக கிராமங்களில் உரிய காலத்தில்

17th March 1960] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

பரிசீலிக்கப்படுவதில்லை. நேற்று ஒரு பிராந்தியத்திலிருந்து ஒருவர் எழுதியிருக்கிறார்—ஒருவர் இறந்த பிறகு கடன் மனு உத்தரவாகி வந்திருக்கிறது என்று. இந்த மாதிரி அநியாயம் உண்டா ? இந்த மனுக்களையெல்லாம் இத்தனை நாட்களுக்குள் பரிசீலிக்க வேண்டுமென்றிருக்கிறதா ? இந்த மாதிரி மனுக்களை யெல்லாம் குறுகிய காலத்தில் நியாயமான முறையில் பரிசீலிக்க வேண்டியது அவசியம். வட்டார வளர்ச்சித் திட்டம் அமுலில் இருக்கக் கூடிய இடங்களிலேயே இந்த மாதிரி நிலைமை இருக்கிறது என்றால் மற்றப் பகுதிகளைப் பற்றி என்ன சொல்லுவது? கட்சியின் சார்பாக வட்டாரங்கள் இந்தத் திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்டிருக்கின்றன. இவைகளுக்கெல்லாம் உடனே பரிகாரம் காணவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அமைச்சர் சுற்றுப் பிரயாணத்தில் இருக்கும்போதும் சரி, அலுவலகத்தில் இருக்கும்போதும் சரி, மனுக்கள் பரிசீலிக்கப் படுவது தாமதமாவதைத் தடுக்க கட்டுப்பாடான உத்தரவைப் போட்டு கூடிய சீக்கிரத்தில் எப்படிப் பைசல் செய்ய வேண்டுமோ, அதாவது சாதகமானாலும், பாதகமானாலும் முடிவான உத்தரவை உடனே கொடுக்க வேண்டுமென்று கேட்டு கொள்ளுகிறேன். முதலமைச்சர் கூட கொஞ்ச நாளைக்கு முன் எங்கள் மாவட்டத்தில் பாகல் மேடு கிராமத்திற்குச் சென்றார்கள். விவசாய அமைச்சரும் வந்திருந்தார்கள். அப்போது பல மனுக்கள் கொடுக்கப்பட்டன. இதுவரையில் எந்த வித வசதி களும் அந்த கிராமத்தவர்களுக்கு செய்துக் கொடுக்கப்பட வில்லையென்று 20 நாட்களுக்கு முன்பு அந்தப் பிராந்திய மக்கள் என்னிடம் சொன்னார்கள். அமைச்சர் அந்த மனுக்களை வாங்கி இலாகாகளுக்கு அனுப்பினர் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால், பரிசீலனை செய்வதில் தாமதம் ஏற்படுகிறது. முடிவு கூறப்படுவதுமில்லை. அவைகளையெல்லாம் உடனுக்குடன் பரிசீலித்து பதில் அனுப்ப வேண்டுமென்று கேட்டுக் கொள்ளு கிறேன்.

அடுத்தபடியாக, சமுதாய நலச் சங்கம், சோஷியல் வெல்பேர் போர்டு ஆகியவைகளுக்காக நிறைய ஜீப்கள் வாங்கப்படுகின்றன. நிறையப் பெண்மணிகள் எல்லாம் மக்களுக்குச் சேவை செய்ய ஜீப்பில் ஏறிப் போகிறார்கள். ஒவ்வொரு கிராமத்திற்கும் போகிறார்கள். இவர்கள் போய் வந்த இடத்திற்கெல்லாம் நான் போய் வந்தேன். அவர்கள் எல்லாம் பொதுச் சேவையில் இருப்பது ரொம்ப சந்தோஷத்தைக் கொடுக்கிறது. ஆனால் அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதைக் கண்ணும் கருத்து மாகக் கவனித்துக் கொண்டு வருகிறோம். (கனம் ஸ்ரீ வெங்கட் ராமன்: பின்னாலேயே போனால் நல்லதுதான்) பின்னால் போவதில் அமைச்சருக்கு அனுபவமோ என்னவோ ? இவர் கள் மூலமாக என்ன நன்மைகள் கிராமங்களுக்குக் கிடைத்திருக் கிறது ? இவர்கள் மக்களுக்கு நன்மை தரக்கூடிய என்ன பணி களைச் செய்கிறார்கள் ? இவைகளையெல்லாம் பற்றி நன்றாகப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இதன்

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [17th March 1960

காரணமாக அநேக விதங்களில் பணம் விரயமாகிறது என்பதைப் பற்றி நான் அதிகம் சொல்ல வேண்டிய அவசியமில்லை. இதைப் பற்றியும் சர்க்கார் சிறிது கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன். இவர்களுக்குப் பதிலாக, இப் பொழுது இருக்கும் மற்ற உத்தியோகஸ்தர்களைக் கொண்டே அம்மாதிரியான நன்மைகளை கிராமங்களுக்குச் செய்த முடியாதா என்பதைப் பற்றியும் சர்க்கார் பரிசீலனை செய்யவேண்டும்.

விவசாய அபிவிருத்தியைப் பற்றி இந்த அறிக்கையில் விவர மாக அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்த இலாகாவைப் பொறுத்த மட்டில் லட்சக் கணக்காகவும், கோடிக்கணக்காகவும் ரூபாய் செலவிட்டு, எப்படி விவசாயி களுக்கு நன்மைகளையெல்லாம் செய்யவேண்டுமோ அந்த முறை யிலே திட்டங்களை வகுத்துச் செய்திருக்கிறார்கள். அப்படிச் செய்திருந்த போதிலும், நம்முடைய target figure திட்டத் தின்படி 12 லட்சத்து 79 ஆயிரம் டன்னாக இருக்க, நடைமுறை யில் 9 லட்சம் சொச்சம் டன்தான் உற்பத்தியாகியிருக்கிறது. எதிர்பார்க்கப்பட்ட அளவுக்கு ரசாயன உரம் வராத காரணத் தால், இம்மாதிரி உற்பத்திக் குறைவு ஏற்பட்டிருக்கிறது என்று விவசாய அமைச்சர் சொல்லியிருக்கிறார். அது தவிர, வரப் போகும் வருஷத்தில், மத்திய சர்க்காரிடமிருந்து எந்த அளவுக்கு ரசாயன உரம் நமக்கு வரப் போகிறது, நமக்குத் தேவையான அளவு உரம் வருமா, அப்படி வராவிட்டால் உணவு உற்பத் தியைப் பெருக்குவதற்கு நாம் என்ன திட்டம் போட்டிருக்கிறோம், ஒருக்கால் நமக்குத் தேவையான அளவு உரம் வராவிட்டால் நாம் என்ன செய்வது என்பதெல்லாம் பற்றி நாம் யோசிக்க வேண்டும். உணவு உற்பத்தியைக் கண்டிப்பாகப் பெருக்க வேண்டும். மக்கள் உற்பத்தி அதிகமாகிக் கொண்டு வருவதன் காரணமாக. . . .

THE HON. SRI K. KAMARAJ: அதைத் தடுக்க வேண்டு மென்று சொல்கிறீர்களா ?

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: வேண்டாம்; வேண்டாம். அன்னியச் செலவாணி குறைவாக இருப்பதன் காரணமாகவும், அதிகமான விலைக்கு நமக்கு உணவு தான்யம் வருவதன் காரணமாகவும், நாம் உணவு உற்பத்தியை பெருக்க வேண்டியது அவசியம். அநேக லட்சம் ஏக்கர் நிலம் சாகு படிக்குக் கொண்டு வரக்கூடிய நிலையில் நம்முடைய பிராந் தியத்தில் இருக்கிறது. அவைகளையெல்லாம் பிரித்து, எந்த எந்த விவசாயி சாகுபடி செய்ய முன்வந்தாலும், அந்த நிலத்தை அந்தந்த சிறிய விவசாயிக்குக் கொடுக்கவேண்டும். நிலம் கொடுப்பது மட்டுமல்லாமல், ஏதாவது பண உதவியும் செய்ய வேண்டும்.

THE HON. SRI C. SUBRAMANIAM: எதைச் செய்தாலும் வோட்டுக்காக என்று சொல்வீர்கள்.

17th March 1960]

* SRI V. K. RAMASWAMY MUDALIYAR: வோட்டுக்காக என்ருல் எதை வேண்டுமானுலும் சொல்வீர்கள். அது இருக்கட்டும். சேலம் ஜில்லாவில் நிலம் ஏழைகளுக்குக் கொடுத்தீர்கள். ஆனுல், அதைப் பண்படுத்துவதற்கு வேண்டிய பணம் கொடுக்கவில்லே. விவசாயிகளுக்கு நிலம் கொடுப்பதோடு அவர்களுக்கு வேண்டிய மற்ற சலுகைகள் கொடுத்து, உணவு உற்பத்தி செய்வதற்கு உதவி செய்ய சர்க்கார் முன்வரவேண்டும்.

சென்ற இரண்டு வருஷங்களாக மின்சார வெட்டு இல்லே. ஆனுல் மினிமம் சார்ஜைக் குறைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளே உடனடியாகச் செய்ய வேண்டும். டீசல் எண்ணெய்க்குப் போட்டிருக்கும் வரியைக் குறைக்க வேண்டுமென்று சில கனம் அங்கத்தினர்கள் கேட்டுக்கொண்டார்கள். ஆனுல், வடாற்காடு ஜில்லாவைச் சேர்ந்த கனம் அங்கத்தினர் திரு. கரிய கவுண்டர் அவர்கள், "டீசல் எண்ணெய்க்கு வரியைக் குறைக்கவேண்டாம், மின்சார வசதி செய்தால் போதும்" என்று சொன்னுர். அவர் பிராந்தியத்தில் டீசல் எண்ணெய் உபயோகித்து விவசாயம் செய்யாமலிருக்கலாம். அவர் பகுதியில் மின்சார விஸ்தரிப்பு ஏற்பட்டிருக்கலாம். இருந்தாலும், மின்சார விஸ்தரிப்பு இல்லாத அனேக இடங்கள் இருக்கின்றன. அங்கே டீசல் எண்ணெய் உபயோகித்துத்தான் விவசாயம் செய்கிருர்கள். டீசல் எண்ணெய்க்கு வரியைக் குறைக்கவேண்டுமென்று முன்பு ஒரு சமயம் நான் கேட்டதற்கு, பின்னிட்டு, நிதானித்து அந்த வரி எடுப்பதுபற்றி யோசிக்கலாம் என்று அமைச்சர் அவர்கள் பதில் சொன்னுர்கள். அதிக விலே கொடுத்து எண்ணெய் வாங்க வேண்டியிருப்பதால் அதிக கஷ்டம் ஏற்படுகிறது. அதற்கு வேண்டிய சலுகைகளேயெல்லாம் கொடுத்து, பர்மிட் முறை வைப்பதோடு, டீசல் எண்ணெய்க்குள்ள வரியைக் குறைப்பதற்கான முயற்சிகளேயும் எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

பூச்சி மருந்துக்கள் (பெஸ்டிஸைட்ஸ்) விவசாயிகளுக்குத் தாராளமாக வழங்கப்படவேண்டும். மொபைல் வான் வைத்து, பூச்சியினுல் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு உடனுக்குடன் மருந்து அனுப்பி, பயிர்களுக்கு பூச்சியினுல் ஏற்படும் சேதத்தைத் தடுப்பதற்கான வழிகளேத் தேடவேண்டும். அதற்கு வேண்டிய கருவிகள் கொடுத்து, ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒரு மொபைல் வேன் வைத்து, பூச்சி மருந்து சப்ளே செய்வதற்கு அரசாங்கம் முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மருந்துக்களேக் குறைந்த விலேயில் கொடுக்கவேண்டும். பெஸ்டி ஸைட்ஸ் போன்ற மருந்துகளே கம்பெனியார் அதிக விலேக்கு விற்கிருர்கள். அதன்காரணமாக, அனேக விவசாயிகள் வாங்கி உபயோகப்படுத்த முடியாமல் இருக்கிருர்கள். அதற்காக பெஸ்டிஸைட்ஸ் ப்ளாண்ட் ஒன்றை மருந்து உற்பத்தி சாலே சிறியதாகவாவது, நம் மாகாணத்தில் வைத்து, நமக்குத் தேவையான பெஸ்டிஸைட்ஸ்களேத் தயாரிக்க முடியுமா என்பதைப் பற்றி சற்று ஆலோசிக்கவேண்டுமென்று கேட்டுகொள்ளுகின்றேன். முககியமாக, கம்போஸ்ட் குழி தோண்டுவதற்கு

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [17th March 1960

சர்க்கார் ஏதாவது மான்யம் கொடுத்து, அதன் மூலமாக எரு உற்பத்தி செய்தால், ரசாயன உரங்களுக்கு அவ்வளவாகத் தேவை இருக்காது என்பது என்னுடைய அபிப்பிராயம். அதற்கு ஏதாவது சலுகை கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் பண்டங்களை விற்பனை செய்வதற்காக சமீபத்தில் ஒரு சட்டம் நிறைவேற்றி யிருக்கிறோம். அதனால், "மார்க்கெட்டிங் பெஸிலிடீஸ்" (Marketing facilities) ஏற்படக்கூடும். அந்தச் சட்டத்தை உடனே அமுலுக்குக் கொண்டுவந்து பொருள்களை "மார்க் கெட்" (market) செய்வதற்கு என்ன வழிகளை கையாள வேண்டும் என்பது பற்றி சர்க்கார் நன்றாக ஆலோசித்து விவ சாயிகளுக்கு வேண்டிய சலுகைகளைச் சர்க்கார் கொடுக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றுதற்கு நிறையப் பணம் செலவழித்து எவ்வளவு தூரம் "முயற்சி" செய்ய வேண்டுமோ அவ்வளவும் செய்திருக்கிறோம். இருந்தா லும் போதாது. Desilting ஏரி, குளம் ஆழம் செய்வதற்காக மத்திய சர்க்காரிடமிருந்து கருவிகளை வரவழிக்க வேண்டும். அன்னிய செலவணி இல்லாவிட்டாலும், உணவு உற்பத்தி யைப் பெருக்க வேண்டியதன் காரணமாக, எப்படியாவது மத்திய சர்க்காருடன் கண்டிப்பாக எடுத்துச்சொல்லி, தேவையான பொருள்கள் வாங்கி, ஒவ்வொரு வட்டாரத்திற்கும் இம்மாதிரி மெஷின்கள் (கருவிகளை) கொடுத்து ஏரிகளை "டீ-ஸில்ட்" செய்ய வேண்டும். ஏரிகளை ஆழப்படுத்துவதற்கு மராமத்து செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளை உடனே செய்ய வேண்டும்.

சிறிய நீர்ப் பாசனம் சம்பந்தமாகச் சொல்ல வேண்டுமானால், அநேக வட்டாரங்களில் வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை.

Food production உணவு உற்பத்தி இலாகாவினர் திறம்பட நன்றாக வேலைசெய்து வருகிறார்கள். இருந்தபோதிலும், முக்கிய மாக மைனர் இர்ரிகேஷன் டிபார்ட்மெண்டை ரெவின்யூ டிபார்ட் மெண்டிலிருந்து எடுத்து, "புட் ப்ரொடக்ஷன் டிபார்ட் மெண்ட்"டின் கீழோ, மராமத்து இலாகாவின் கீழோ கொடுத்து, துரிதமாக நிறைய இதற்காக பொருள் ஒதுக்கி வைத்து, எல்லா கிராமங்களிலுமுள்ள மைனர் இர்ரிகேஷன் வேலைகளை உடனடியாக எடுத்துக் கொண்டு, எவ்வளவு சீக்கிர மாகச் செய்ய முடியுமோ அவ்வளவு சீக்கிரமாகச் செய்வதற்குச் சர்க்காரே முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளு கின்றேன்.

கல்வியைப் பொறுத்தமட்டில் எஸ். எஸ். எல்.ஸி. வரையில் பின் தங்கிய வகுப்பினர்களுக்குச் சலுகை கொடுத்திருப்பது போல பொருளாதாரத் துறையில் பின் தங்கியிருக்கும் எல்லா வகுப்பினர்களுக்கும் கட்டாய இலவசக் கல்வி (compulsory free education) கொடுப்பதற்காக திட்டத்தை வகுக்க வேண்டும். இந்தத் திட்டத்தை உடனடியாக சில வட்டாரங்

17th March 1960] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

களிலாவது ஆரம்பித்து, சிறுக சிறுக, மற்ற எல்லாப் பிராந்தியங்களிலும் விரிஸ்தரிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். பின் தங்கிய வகுப்பினர்களுக்குச் சலுகை கொடுக்க வேண்டியது அவசியம்தான். அதே மாதிரி பொருளாதாரத்தில் பின் தங்கியிருப்பவர்களுக்கும் கொடுக்கவேண்டும். எஸ். எஸ். எல். ஸி. வரையிலும்தான் கொடுக்க வேண்டுமென்று நான் சொல்கிறேன். அவர்களுக்கு எப்படியாவது உடனடியாகக் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுக்காவிட்டால் அவர்கள் எவ்வளவு தூரம் கஷ்டப்படுகிறார்கள் என்பதைப் பற்றி நான் அதிகமாகச் சொல்ல வேண்டியதில்லை.

அதே மாதிரி தான் சுகாதார வசதி, கெஜட் பதிவில்லாதவர்களுக்கும் கெஜட் பதிவுள்ளவர்களுக்கும் கொடுக்கப்பட்டு வருகிறது. முக்கியமாக ஏழை மக்களுக்கு அநேக இடங்களில் சுகாதார வசதி என்பதே கிடையாது. சர்க்கார் சிப்பந்திகளுக்குக் கொடுக்கும் சலுகை மாதிரி மற்றவர்களுக்கும் கொடுக்கப்படவேண்டும். 100 ரூபாய் வருமானம் உள்ளவர்களுக்குத் தான் என்ற அளவு இல்லாமல், பெரும்பாலானவர்களுக்கும் சுகாதார வசதி கண்டிப்பாகக் கொடுக்கப்பட வேண்டும். அதற்காக எவ்வளவு செலவானாலும், சர்க்கார் அதை ஒதுக்கி ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மெடிகல்-எய்டு கொடுப்பதிலே அந்நிய செலவாணி நெருக்கடியைக்கூட நாம் சமாளிக்க வேண்டும். அதற்காக மத்திய சர்க்காரிடம் கேட்டு அல்லது நாமே பணம் செலவழித்து நம்முடைய சில நிபுணர்களை சுகாதார டிபார்ட்மென்டிலிருந்தும் மெடிகல் டிபார்ட்மென்டிலிருந்தும் தேர்ந்து எடுத்து அவர்களை அந்நிய நாட்டுக்கு அனுப்பி, பயிற்சி முடிந்த பிறகு அவர்களைக் கொண்டு நம்மக்கள் பயன் அடையும்படிச் செய்ய வேண்டும். வெளிநாடுகளுக்குப் அவர்கள் போய்வருவதற்கான செலவுத் தொகையை அரசாங்கமே ஏற்றுக்கொள்ளவேண்டும். இப்படிப் பட்ட டாக்டர்களுக்கு ஊதியத்தையும் நாம் அதிகரித்துக் கொடுக்க ஏற்பாடு செய்யும்படி நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இப்பொழுது ஜில்லா போர்டுகளெல்லாம் சிறுகச் சிறுக எடுக்கப்பட்டு வருகின்றன. அபிவிருத்திக் கவுன்சில்கள் அந்த இடங்களில் ஏற்படுத்தப் போகிறோம். அநேக இடங்களில் இப்போழுதுதான் தேருதல் நடைபெற்றது. கலெக்டர்கள் நிர்வாகத்தில் இருக்கக்கூடிய ஜில்லா போர்டுகளுக்கு போதுமான பண உதவி கொடுக்காததன் காரணமாக அநேக வேலைகள் தாமதமாகின்றன. எங்களுடைய ஜில்லா போர்டை எடுத்துக் கொண்டால் இன்று வரையில் அநேக கண்டிராக்டர்களுக்கு பணம் கொடுபடவில்லை. பள்ளிகளுக்கு செய்யப்பட வேண்டிய வசதிகள் செய்யப்படவில்லை. பொருள் நிலை சரியாக இல்லாத காரணத்தினால், ரோடுகள் போட்ட அநேகம் கண்டிராக்டர்களுக்கு பணம் கொடுக்க முடியாமல் பணம் துண்டு விழுந்திருக்கிறது. சர்க்கார் உடனடியாக ஜில்லா போர்டுகளுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய முன்வரவேண்டும்.

அதனால் பல வேலைகள் "டிலே" ஆகிக் கொண்டிருக்கின்றன. அதை முக்கியமாக அரசாங்கம் கவனிக்க வேண்டும்.

கிராமங்களில் ரோடுகள் பாழாகிக் கொண்டு வருகின்றன. அந்த ரோடுகளை பராமரிப்பதற்கு ஏதாவது நிதி ஒதுக்க வேண்டும். அது பற்றி சென்னை அரசாங்கம் பிளானிங் கமிட்டி கூட யோசித்து வந்திருக்கிறார்கள். சில இடங்களில் புதியதாக மண் ரோடுகளாவது போட்டு வசதி செய்துக் கொடுக்க வேண்டும். அநேக கிராமங்களில் ஜீப்கள் கூட போக முடியாத நிலைமையில் ரோடுகள் இருக்கின்றன. ஆகவே, அங்கே மண் ரோடுகளையாவது போட்டுக் கொடுப்பதற்கும், போட்டிருக்கும் ரோடுகளை பழுதடையாமல் நல்ல நிலைமையில் வைத்துக் கொள்ளுவதற்கும் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டு மென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கைத்தறி நெசவாளர்களைப் பற்றி தொழிலமைச்சர் அவர்கள் இரண்டு தினங்களுக்கு முன்பாக அவர்கள் பிரசங்கத்தில் குறிப் பிட்டுப் பேசினார்கள். அவர்களுக்குப் பல சலுகைகள் கொடுத் திருப்பதாகச் சொன்னார்கள். இருந்த போதிலும்கூட, இன்னும் அவர்களுக்கு மார்கெட்டு வசதி இல்லை. தேக்கம் அதிகமாக இருக்கிறது. சில பிராந்தியங்களில் அவர்களுக்கு வேண்டிய மார்கெட்டு வசதிகளை முக்கியமாக ஏற்பாடு செய்ய வேண்டும். நம்முடைய பிளீடிங் வெரைடி Bleeding variety போன்ற துணிகள் மற்ற தேசங்களிலிருந்தும் அதே மாதிரி செய்வதால் அதன் காரணமாக நமக்கு சில கஷ்டங்களெல்லாம் விளைவிக்கக் கூடும் என்று சொல்லுகிறார்கள். அதற்காக ஏதாவது ஒரு பரிகாரம் தேடவேண்டும். இந்தத் தேக்கத்தைத் தடுப்பதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கவேண்டும். அவர்களுக்கு மார் கெடிங் வசதிகள் செய்துக் கொடுப்பதற்கு சில முக்கியமான நட வடிக்கைகளை உடனடியாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

குடி தண்ணீர் சப்ளை ஒரு "நேஷனல் பிராப்ளம்" (National (problem). "அர்பன் , ஏரியா (Urban area) கிராமாந்தரம், இரண்டு இடங்களிலும் இதை உடனடியாகக் கவனிக்க வேண்டும். முக்கியமாக சென்னை நகரத்தை எடுத்துக் கொள்ளுவோம். மழை இல்லாவிட்டால் நமக்கு அதிகமாக தண்ணீர் கஷ்டம் இருக்கும். "வாடர் கட்" Water cut) இருக்கும். இதற்கு என்ன செய்வது என்பதைப் பற்றி யோசிக்க வேண்டும். மேல் நாடுகளில் அநேக பிராந் தியங்களில் 100, 150 மைல் தொலைவிலிருந்து டவுன் ஏரியாக் களுக்கு குடி தண்ணீர் கொண்டு வருகிறார்கள். நான் சமீபத்தில் ஆஸ்திரேலியா போயிருந்தேன். அங்கு ஒரு நகரத்திற்கு 350 மைல்களுக்கு அப்பால் இருந்து குழாய்கள் மூலம் ஜலம் கொண்டு வந்திருக்கிறார்கள். 100 மைல் தொலைவிலிருக்கும் பெண்ணை யாற்றிலிருந்தாவது சென்னை நகரத்திற்கு ஜலம் கொண்டுவர முடியுமா என்பதைப் பற்றி அமைச்சர் அவர்கள் நன்றாக யோசிக்க வேண்டும். அதே மாதிரிதான் ஒவ்வொரு முனிசி பாலிடியிலு-ம் ஜலம் இல்லாத குறை. அவர்களுக்கு போதிய

17th March 1960] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

ஜல வசதி முக்கியமாகக் கிடையாது. தயாரித்த எஸ்டிமேட் உடனடியாக நிறைவேற்றப்படுதில்லை. சாமான்கள் இல்லாத காரணத்தினலோ அல்லது எஸ்டிமேட் சரிவர தயாரிக்கப்படாத தன் காரணமாகவோ இம்மாதிரி பல விதமான கஷ்டங்கள் ஏற்படுகின்றன. முனிசிபாலிடிகளுக்கு போதுமான ஜல வசதி இல்லை. அதை உடனுக்குடன் கவனித்து அவர்களுக்கு ஏதாவது நிவாரணம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கைத்தொழில்கள், கனரகத் தொழில்கள் இவைகளையெல்லாம் பற்றி அமைச்சர் அவர்களுடைய உரையில் விஸ்தாரமாகச் சொன்னுர்கள். முக்கியமாக பிரைவேட் ஸெக்டாரை (Private Sector) ஆதரிக்க செய்யவேண்டுமென்று அபிப்பிரா யப்படுபவர்களில் நானும் ஒருவன். அம்மாதிரி செய்வதன் காரணமாக ஆயிரக்கணக்கான மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்பது பற்றி சந்தேகம் இல்லை. ஆஸ்திரிரேலியாவில் (Sydney Tasmania) ஸிட்னி, டாஸ்மேனியா என்ற இரண்டு தேசங்களில் லேபர் கவர்மெண்டு. அங்கு முதலமைச்சர் தான் உரையில் சொன்னதைச் சொல்லுகிறேன். தொழிலை தேசீய மயமாக்குவது ஒரு பக்கம் இருந்த போதிலும், தனியார் துறைக்கு (Private Sector) நாம் எவ்வளவு சலுகை கொடுக்க வேண்டுமோ அவ்வளவு சலுகைகள் கொடுப்பதன் காரணமாகத் தான் அநேகம் பேர்கள் இதில் மூலதனத்தைப் போட்டு பெரிய தொழில்கள் தனியார் துறையில் ஆரம்பித்து வைத்திருக்கிருர்கள். இதன் காரணமாக லட்சக்கணக்கான மக்களுக்கு அந்த இடத்தில் வேலை கிடைக்கிறது என்றெல்லாம் சொன்னுர்கள். நாம் தனியார் துறை முழுவதும் மூட வேண்டும் என்ற அபிப்பிராயம் இல்லாமல் பிரைவேட் ஸெக்டாருக்கு எவ்வளவு தூரம் நாம் நிதி வசதியோ அல்லது மற்ற உதவியோ செய்து கொடுக்க முடியுமோ அவ்வளவு தூரம் செய்து கொடுக்க வேண்டும். சர்க்கார் துறைக்கும், தனியார் துறைக்கும் துடநந் தாற்போல் வேண்டிய உதவிகளையெல்லாம் கொடுத்து, ஆதரவு செய்தால் தான், அதன் காரணமாக அநேகம் பேர்களுக்கு வேலை அளிக்கக்கூடிய திட்டங்களையெல்லாம் நாம் வகுக்க முடியும் என்று நான் அபிப்பிராயப்படுகிறேன். ஆனுல், இப்பொழுது சில பிராந்தியங்களிலே சில நபர்களுக்கு மாத்திரம் சில சலுகைகள் கொடுக்கப்பட்டிருக்கிறது. சில நபர்களுக்கு மாத்திரம் சலுகைகள் கொடுப்பதில்லை என்ற புகார் வந்திருக் கின்றன. சமீபத்தில் தொழில் அமைச்சர் அவர்கள் கூடச் சொன்னுர்கள் பேபர் தொழிற்சாலை முக்கியமாக நம்முடைய பிராந்தியத்தில் வர வேண்டுமென்று. அதை நான் ஆட்சேபிக்க வில்லை. அது முக்கியம் என்பதுதான் என்னுடைய அபிப்பிரா யமும். ஆனுல் சேஷசாயி கம்பெனிக்கு இவ்வளவு கோடி ரூபாய் கொடுத்திருக்கிருர்கள். இந்தக் கம்பெனியைப் பற்றி எனக்கு சரிவர தெரியாத போதிலும், ஆடிட் ரிபோர்ட்டில் ஆல்வாயில் அவர்கள் நடத்தும் தொழிலைப்பற்றி சில கோளாறுகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவர்களைப் பற்றி சில

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [17th March 1960

ரிபோர்ட்டுகள் ஆடிட் ரிபோர்ட்டில் வந்து அதுபற்றி பரிசீலனை யும் நடந்திருக்கிறது. இவைகளையெல்லாம் தீர்க்க ஆலோசனை செய்ய வேண்டும்.

THE HON. SRI R. VENKATARAMAN: நாங்கள் இன்னும் பணம் கொடுக்கவில்லை. எந்த அங்கத்தினரிடமிருந்தாவது இவர்கள் சரியாக நடக்கக்கூடாதவர்கள் என்று இன்பர்மேஷன் சர்காருக்கு வந்தால் அதை சர்க்கார் பரிசீலனை செய்யும். இந்தத் தொழிலை எடுத்து நடத்துவதற்கு ஒருவரும் முன்வரவில்லை. பெரிய அளவுக்கு முதன் முதலில் இந்தக் கொள்கையை ஆரம் பித்திருக்கிறும். அங்கத்தினரிடம் எதாவது இன்பர் மேஷன் இருந்தால், அதை அவர்கள் எழுதி அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: ஆடிட் ரிபோர்ட்டில் வந்திருக்கிறது.

THE HON. SRI K. KAMARAJ: இருந்தால் கொடுங்கள்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: சர்க்கார் தான் இதை பிரசுரம் செய்திருக்கிறுர்கள். அவர்களுக்கும் தெரியும். நான் எடுத்துக் காட்டுகிறேன். நான் கொடுக்கக்கூடாது என்று சொல்லவில்லை, நன்ருக பரிசீலனை செய்து கொடுக்கவேண்டு மென்று சொல்லுகிறேன். உத்திரவாதம் (guarantee) நாம் கொடுக்கும் போது சரிவர பரிசீலனை செய்து, நம்முடைய பொருளுக்கு ஒருவித நஷ்டமும் வராமல் பார்த்துக் கொண்டு, கொடுக்க வேண்டும். அதைத் தவிர நான் ஒருவருக்கும் கொடுக்கக்கூடாது என்று சொல்லவில்லை. முக்கியமாக காகிதத் தொழிற்சாலை நம்முடைய பிராந்தியத்தில் வர வேண்டும், அதற்கு வேண்டிய சலுகைகள், உதவிகள் எல்லாம் நாம் கொடுத்துதான் ஆகவேண்டும். ஒருவருக்கு பிரத்தியேகமான சலுகைகள் கொடுக்கும்பொழுது நன்ருக பரிசீலனை செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

"ஸடிலைட் டவுன் (Satellite town) டவுன் அருகா மையில் உள்ள இன்டஸ்டிரியல் ஏரியா என்பதையெல்லாம் பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள். "ஸாடிலைட் டவுன்" எல்லாம் சில இடங்களில் கொஞ்சம் தள்ளிப் போடுவது நலம் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். அதன் காரணமாக நகரத்தில் பலவித கஷ்டங்கள் ஏற்படுகின்றன. ஒரு விதத்தில் அவர்களுக்கு வீடுகட்டிக் கொடுக்கும் வசதிகள் ஏற்பட்டபோதிலும்கூட, அதனுல் இன்னும் அநேக விதமான கஷ்டங்களெல்லாம் ஏற்படுகிறது. ஆகவே, அவைகளை ரூரல் ஏரியாக்களில் இன்னும் கொஞ்சம் தள்ளிப்போடுவதற்கு ஏதாவது முடியுமா என்பதைப் பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

17th March 1960] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

நம்முடைய பிராந்தியத்தில் முக்கியமாக விழுப்புரம் வரை மின்சார ரயில் விஸ்தரிக்கப்படவில்லே. அதேமாதிரி அரக்கோணம் வரையில் மின்சார ரயில் போடவேண்டும். மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது இவைகளெல்லாம் எடுத்து நடத்தப்படுமா என்பது பற்றி அமைச்சர் அவர்கள் விளக்கம் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். உடனடியாக மத்திய சர்க்காரிடம் வற்புறுத்தி விழுப்புரம், அரக்கோணம் வரையில் மின்சார ரயில் வசதி செய்துக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளே செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். (Atomic energy) ஆடோமிக் எனர்ஜ்ஜி நம் பிராந்தியத்தில் வரும்படி செய்து மின்சாரத்தையும் விருத்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். சேது சமுத்திரம் பிராக்ஜக்டைப் பற்றி அது வராது என்று மத்திய சர்க்கார் மந்திரி கனம் சுப்பராயன் அவர்கள் சொல்லியிருக்கிருர்கள். என்ன காரணத்திற்காக அது வராது என்று தெரியவில்லே. அதேமாதிரி, தூத்துக்குடி துறைமுகத்தில் ஏராளமான பணம் வருகிறது. அது ஒரு முக்கியமான துறைமுகம். நாம் அதற்காக வேண்டிய உதவிகளெல்லாம் செய்ய போகிருேமா என்று தெரிய வேண்டும். இவைகளேயெல்லாம்பற்றி மத்திய சர்க்காருக்கு எழுதி, ஏதாவது உடனடியாக செய்ய முடியுமா என்று பார்க்க வேண்டும். அதோடுகூட, நாஷனல் டெவலப்மெண்ட் கவுன்சில் மீட்டிங்குக்குப் போகும்போது அமைச்சர்கள் இதைப்பற்றி பரிசீலனே செய்து, அதன் பிறகு முடிவை இந்தச் சட்ட மன்றத்திற்கு முன்ஞல் சொன்ஞல், நலமாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 10-30 a.m.

கூட்டுறவுப் பண்ணேயைப் பற்றி என்னேப் பொறுத்த மட்டில், அது நன்ருக நடக்காது என்பது என் நம்பிக்கை. சில வட்டாரங்களில் வேண்டுமானுல் சர்க்கார் மூலமாக செய்து பார்க்கலாம். எங்கள் பிராந்தியத்தில் ஒரு கூட்டுறவு பண்ணே ஆரம்பித்து அது சரிவர நடைபெறவில்லே. அது மூடிவிடும் நிலேயில் இருக்கிறது. அதேமாதிரித்தான் சர்க்கார் துறை தான்யம் வியாபாரம் (State trading in foodgrains). இதில் கண்டிப்பாக விலே உயராமல் இருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டும். உற்பத்தியாளர்களுக்கும், சாப்பிடுகிறவர்களுக்கும், நியாயமான விலே ஏற்படுத்த வேண்டும். உணவுப் பொருள்கள் கிடைக்காவிட்டால், நியாயவிலேக் கடைகள் வைக்க வேண்டும். ஆனுல், சர்க்கார் இம்மாதிரியான வேலேகளேச் செய்ய முன்வருவதால் ஏராளமான, கோடிக்கணக்கான ரூபாய்கள் நஷ்டமாகி விடுகிறது தவிர, வேருென்றும் இல்லே என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இப்பொழுது சென்னே கார்ப்பரேஷனேப் பற்றி சில அங்கத்தினர்கள் சொன்ஞர்கள்; திராவிட முன்னேற்ற கட்சித் தலேவர் அவர்கள் அதற்குப் பதில் சொன்ஞர்கள். கார்ப்பொரேஷன் நிர்வாகம் சரியில்லே, ஊழல் நிறைந்திருக்கிறது. அவர்களெல்லாம் அமச்சூர் பாலிடீஷன் (Amature Politician) என்றெல்லாம் சொன்ஞர்கள். மற்ற காங்கிரஸ்காரர்கள்

இருக்கும், நடத்தும் முனிசிபாலிடிகளைப் பார்த்தாலும், ஊழல் கள் நிறைய இருக்கின்றன. உதாரணமாக திருச்சி முனிசி பாலிடியைச் சொல்லுகிறேன். மற்ற முனிசிபாலிடிகளைப் பற்றிப் பேர் சொல்ல வேண்டியதில்லை. அங்கெல்லாம் காங்கிரஸ்காரர் கள் தான் இருக்கிறார்கள். ஆகையால் கார்ப்பரேஷனை மட்டும் குறை சொல்ல வேண்டியதில்லை. இப்பொழுது தான் ஊழலா ? முன்பு காங்கிரஸ்காரர்கள் இந்த ஸ்தாபனத்தில் இருந்தபோதும்தான் ஊழல்கள் இருந்தன. அது எப்படி இருந்தபோதிலும் ஊழல்கள் இருக்கவேண்டுமென்று கருது பவன் நானல்ல. (சிரிப்பு). ஆனல், இதற்கு ஒரு பிரசாரம் செய்யவேண்டியதில்லை. இந்த ஸ்தாபனம் நம்மை விட்டுப் போய்விட்டதே என்பதற்காக அவதூறு சொல்ல வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்ட மன்றக் கட்டடத்தைப் பற்றி கேள்வி நேரத்தில் பேசப் பட்டது. நமது சட்ட மன்றம், இங்கு இருப்பதைவிட, கவர் மெண்டு ஹௌசிலோ அல்லது வேறு இடம் பீச்சிலோ ஒரு நல்ல கட்டிடத்தை அமைத்து அதில் நிறுவவேண்டும். அங்கத் தினர்களுக்கு ஒரு சலுகையும் கிடையாது. அங்கத்தினர்கள் ஏதாவது லைப்ரரியில் கேட்க வேண்டுமானல் தகவல் ஒன்றும் கிடைப்பதில்லை. ஒரு லௌஞ்ஜ் (Lounge) கிடையாது. கமிட்டி ரூம் ஒரு சாலை பக்கத்தில் நடத்த வேண்டியிருக்கிறது. சந்தடி அதிகமாக இருக்கிறது. அதற்கு ஏதோ, துறைமுகம் விஸ்தரிப்பு காலத்தில் சந்தடிகளைத் தடுத்து, மரங்களை வைத்து சரி செய்யப் போகிறார்கள் என்று சொல்கிறார்கள். அதெல்லாம் பல கஷ்டங்கள் இருக்கின்றன. அப்படிக்கு இல்லாமல் இதற்காக ஒரு தனி இடம் போட்டு, அங்கத்தினர்களுக் கெல்லாம் சலுகைகள் கொடுத்து, சட்ட மன்றமும் ஒரு நல்ல இடத்தில் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முடிவாக, ரூ. 1,000 கோடிக்கு வரி போட்டும், மக்களுக்கு இருக்கும் கஷ்டம் தீரவில்லை. பொருளாதார நிலைமை சரியாக இல்லை. வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக இருக்கிறது. இந்த கஷ்டங்களுக்கு உட்பட்டு மக்கள் வாழ்க்கை நடத்து கிறார்கள். ஆகவே, இது ஒரு எலக்ஷன் பட்ஜெட்டே ஒழிய நிரந்தரமாக மக்களுக்கு நன்மை செய்யக்கூடிய வரவு செலவு திட்டம் அல்ல என்பது என்னுடைய தாழ்மையான அபிப் பிராயம். அதிலே முக்கியமாகக் கொடுத்திருப்பது, எல்லாம் பிகர்ஸே தவிர வேறொன்றும் இல்லை.

'Figures are not facts; but they are only figures.

அமெரிக்க தலைவரான அப்பிரஹாம் லிங்கன் அவர்களின் வார்த்தையைச் சொல்லி, என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

'You cannot bring about prosperity by discouraging thrift; you cannot strengthen the weak by weakening the strong; you cannot help the poor by destroying the rich; you cannot establish sound security on borrowed money; you cannot keep out of trouble by

17th March 1960] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

spending more than you earn; you cannot build character and courage by taking away men's initiative; you cannot help men permanently by doing for them what they can do for themselves.' This is also my submission.

SRI P. S. CHINNADURAI: கனம் உதவி சபா நாயகர் அவர்களே தங்கள் அனுமதி இருக்குமானல் அவர்கள் சொன்ன ஒரு கருத்தின் மீது நான் விளக்கம் கூற விரும்புகிறேன்.

DEPUTY SPEAKER: I am sorry. I cannot allow the hon. Member now.

(கனம் நிதியமைச்சர் அவர்கள் தன் இடத்தில் நின்ருர்.)

SRI R. CHIDAMBARA BHARATHI: தலைவர் அவர்களே, கனம் எதிர் கட்சித் தலைவர் அவர்கள் பேசிய காலத்தில், அநேக இலாகாக்களில் ஆட்கள் அதிகமாக இருக்கிருர்கள், ஆட்களை வேலையிலிருந்து நீக்க வேண்டும் என்கிருர்களே

DEPUTY SPEAKER: கனம் அங்கத்தினர் இப்பொழுது பேசமுடியாது. தயவுசெய்து உட்கார வேண்டும். கனம் நிதி யமைச்சர் பதில் சொல்லுவார்கள்.

THE HON. SRI C. SUBRAMANIAM: உதவி சபாநாயகர் அவர்களே, இந்த விவாதத்திலே 100 அங்கத்தினர்கள் இது வரை பேசியிருக்கிருர்கள். (குறுக்கீடு) நான் 101-ஆவது. நான் நேற்று இரவு, நேற்று வரை பேசியவர்களின் குறிப்புகளை முதலிலிருந்து பதில் சொல்வதற்காகப் பார்த்தேன். பல அங்கத்தினர்கள், பல கருத்துக்களை, குறைகூறும் முறையில் சொல்லியிருந்தாலும் கூட, பொதுவாக இந்த வரவு செலவு திட்டம் வரவேற்கப் பட்டிருக்கிறது என்ற உணர்ச்சிதான் எனக்கு ஏற்பட்டது. அதன் காரணத்தால், இந்த பட்ஜெட் குறையே இல்லாத பட்ஜெட் என்று நான் சொல்வதற்கு முன் வரவில்லை. எதிலும் குறைகள் இருக்கத்தான் இருக்கும் என் பதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனல், பொதுவாகப் பார்க்கும்போது, இந்த வரவு செலவு திட்டம் இங்கும் வரவேற் கப்பட்டிருக்கிறது, வெளியில் இருப்பவர்களாலும் வரவேற்கப் பட்டிருக்கிறது என்பதைக் கண்டு ஓரளவு அதற்காகத் திருப்திப் படுகிறேன் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

எனது பட்ஜெட் பேச்சு அமைப்பைப்பற்றி திராவிடக் கட்சித் தலைவரவர்கள் குறிப்பிட்டார்கள். "வருடத்திற்கு வருடம் மாறுபட்டு வருகிறது, ஒரு வருஷத்தில் குறிப்பிட்டுச் சொன்னதை, அடுத்த வருஷத்தில், தொடர்ந்து அதே துறை யைப் பற்றி விரிவாகக் குறிப்பிட்டுச் சொல்வதில்லை; கவனத்தை வேறுபக்கத்தில் இழுக்க இது செய்யப்படுகிறதோ" என்று சொன்னர்கள். இப்பொழுது கொடுத்திருக்கும் புள்ளி விவரங் கள் ஒவ்வொரு வருடமும் கொடுக்கப்படுகிறது. இந்த பட்ஜெட் உரையில் அல்ல, மற்ற வேறு வெளியீடுகளாக, புத்தகங்களாக அச்சிட்டு அங்கத்தினர்களுக்கு வழங்கப் படுகிறது. எல்லாப் புள்ளி விவரங்களும், வருட வாரியாக,

ஒவ்வொரு வருடமும் ஏற்படும் முன்னேற்றம், வளர்ச்சி இவைகளுடன் அச்சிட்டு அங்கத்தினர்களுக்கு வழங்கப்படுகிறது. எந்தத் துறையை எடுத்துக்கொண்டாலும் சரி, வருடாவருடம் ஏற்பட்டு வருகின்ற வளர்ச்சி என்ன என்பதைப்பற்றி அதில் பார்த்தாலும் தெரியும். ஆனால் என்னுடைய கருத்து பட்ஜெட் உரையின் மூலமாக அங்கத்தினர்களுடைய மனதிலே சில வற்றைப் பதிய வைத்து, அதன் மூலமாக அந்த விஷயத்தைப் பற்றி ஆராய்வதற்கு, அதைப்பற்றிய புள்ளிவிவரங்களைப் பார்ப்பதற்கான வாய்ப்பை கனம் அங்கத்தினர்களுக்கு உண்டாக்கிக் கொடுக்கவேண்டும் என்பதுதான். அதன் காரணமாகத்தான் ஒவ்வொரு வருடமும் சில சில துறைகளை எடுத்துக்கொண்டு அதில் இருக்கக்கூடிய முக்கியமான அம்சங்களை விரிவாக அமைத்து ஒவ்வொரு வருடமும் அங்கத்தினர்களுக்குக் கொடுத்துக்கொண்டு வருகிறேன். அதுதான் சரி என்பது என்னுடைய கருத்து. கனம் அங்கத்தினர் அண்ணாதுரை அவர்களுடைய உரையைக் கேட்ட பிற்பாடும் இதை மாற்றுவதற்கு அவசியம் இல்லை என்று கருதுகிறேன்.

Sri A. V. P. ASAITHAMBI: முதலில் பட்ஜெட் ரகசியம் வெளியானது எப்படி என்கிற குற்றச்சாட்டுக்குப் பதில் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM: எந்தமாதிரியாகத்தான் பேசவேண்டும் என்பதை திரு. ஆசைத்தம்பி அவர்களைக் கேட்டுக்கொண்டு பேசவேண்டும் என்று சொன்னால் நான் வெளியில் போய்விடலாம். அங்கத்தினருக்கு நான் ராஜீநாமாச் செய்வதில் எத்தனை அக்கறை இருக்கிறது என்று எனக்குத் தெரியும். எந்த எந்த விஷயத்தை எந்த எந்தச் சமயத்தில் சொல்லவேண்டும் என்கிறது எனக்குத் தெரிந்துதான் பேசுகிறேன். எந்த விஷயத்தையும் குறிப்பிட்ட காலத்தில் நான் குறிப்பிடுகிறேன்.

ஆகையால்தான் இன்றைக்கு இதுமாதிரி பட்ஜெட் உரையை அமைக்கும்போது சில துறைகளை விரிவாக எடுத்துச் சொல்லி அதன் மூலமாக இங்கே இருக்கக்கூடிய அங்கத்தினர்கள் மட்டும் அல்ல, நம் நாட்டில் இருக்கக்கூடிய மக்களும் இங்கே நடந்துகொண்டிருக்கக்கூடிய பல்வேறு விஷயங்களைப் புரிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும் என்பது என் அவா. அது நிறைவேறுகிறதோ இல்லையோ, அது வேறு விஷயம்.

கனம் அங்கத்தினர்களும் எல்லா விஷயங்களையும்—நடந்து கொண்டிருக்கக்கூடியவை மட்டும் அல்ல, நடக்காமல் இருப்பது, நடத்தி வைப்பதில் இருக்கக்கூடிய குறைகள், இவைகளை எல்லாம்—உணர வேண்டும். பொதுமக்களும் உணர வேண்டும் என்ற காரணத்தினால்தான் நான் இதுமாதிரி புதிய புதிய அம்சங்களை ஒவ்வொரு பட்ஜெட் உரையிலும் விரிவாகக் கொடுக்க வேண்டும் என்று விரும்பி நான் கொடுத்துக்கொண்டு வருகிறேன். அவர்கள் சொன்ன பிற்பாடும் இந்த முறைதான் சரியானது என்பது என்னுடைய கருத்து.

17th March 1960] [Sri C. Subramaniam]

அடுத்தாற்போல இந்த ஆண்டில் இரண்டு புதிய வெளியீடுகள் கனம் அங்கத்தினர்களுக்கு முன்னல் வைக்கப்பட்டிருக்கிறது. ஒரு வெளியீடு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றிய முழு புள்ளிவிவரங்களும் அடங்கியது. ஒவ்வொரு துறையையும் எடுத்துக்கொண்டு அந்த அந்தத் துறைகளில் இருக்கக்கூடிய ஒவ்வொரு பிரச்னையையும் எடுத்துக்கொண்டு அது எந்த அளவுக்கு வருடா வருடம் நிறைவேற்றப்பட்டு வருகிறது, அடுத்த ஆண்டில் எந்த முறைக்கு நிறைவேற்றப்பட வேண்டும் என்கிற புள்ளிவிவரங்கள் எல்லாவற்றையும் தெளிவாக, விவரமாக அச்சிட்டு, ஆங்கிலத்திலும், தமிழிலும் வழங்கப்பட்டிருக்கிறது.

அதோடு மிகவும் முக்கியமான "Economic Classification" என்று சொல்லக்கூடிய புதிய வெளியீடு. அது கொஞ்சம் ஆர அமர இருந்து ஆழ்ந்து படித்து ஆலோசிக்கவேண்டிய ஒரு விஷயம். ஏனென்று சொன்னல் பொதுவாக எல்லாப் பணமும் நிர்வாகச் செலவிலேயே செலவழிந்து போய்விடுகிறது, ஜனங்களுக்கு அதிக அளவு பயன்படவில்லை என்பதாக மேலெழுந்தவாரியாகப் பார்க்கின்றவர்கள் எல்லோரும் சொல்லிவிட்டுப் போகிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே எந்த அளவுக்கு நிர்வாகத்தில் செலவு செய்யப்படுகிறது, எந்த அளவுக்கு மக்களுக்கு சௌகர்யங்களையும், வசதிகளையும் செய்து கொடுப்பதற்காகச் செலவழிக்கப்படுகிறது, எந்த அளவுக்கு முதலீட்டு இனத்தில் அபிவிருத்தித் திட்டங்களுக்காக முதலீடு செய்யப்படுகிறது என்கிற குறிப்புகளை எல்லாம் இனவாரியாகப் பிரித்து அதிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. இவற்றையெல்லாம் தயாரித்து அளித்திருக்கக்கூடிய அதிகாரிகளுக்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். கனம் அங்கத்தினர்களுடைய பாராட்டுதலும் இருக்கும் என்று நம்புகிறேன். இது ஒரு புதிய முயற்சி.

இந்த முயற்சி இனி வருடாவருடம் நல்ல முறையில் அமைந்து நமக்கு வேண்டிய எல்லாம் புள்ளிவிவரங்களையும் உடனடியாக பார்த்துக்கொள்வதற்கு வசதியை ஏற்படுத்தும். இந்த வருடம் இது புதிய முயற்சி ஆதலால் கனம் அங்கத்தினர்கள் பலர் அதைப் படித்துப்பார்த்தால் சில குறைபாடுகளை எடுத்துச் சொல்ல முடியும் என்று நம்புகிறேன். அடுத்த ஆண்டிலிருந்து இந்த சிறு குறைபாடுகளும் கூட விலக்கப்பட்டு இது நல்ல முறையில் அமையும். எல்லா அங்கத்தினர்களும் அவ்வப்போது புள்ளிவிவரங்களைப் பார்த்துத் தெரிந்து கொள்ளும்படி செய்வதற்கு முயற்சி செய்வோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் பொதுவாக பட்ஜெட்டிலே இருக்கக்கூடிய புள்ளி விவரங்களைப்பற்றியும் சில பேர் குறை கூறினர்கள். அதிலும் எதிர்க்கட்சியில் இருக்கக்கூடிய அம்மையார் அவர்கள் அரக்கு மாளிகையை அப்படியே உருக்கிவிடுவதாகச் சொன்னர்கள். அதில் சில புள்ளிவிவரங்களை எடுத்துக் காட்டி வருடாவருடம்

மாறி இருக்கிறதே என்று சொன்னார்கள். அதைப்பற்றி சென்ற பட்ஜெட் உரையின் மீது எழுந்த விவாதத்திற்கு நான் பதில் அளிக்கும்போது கூட எடுத்து விளக்கியிருக்கிறேன். இருந்தாலும் இந்த விஷயங்களை அடிக்கடி திருப்பிச் சொல்ல வேண்டியது அவசியம்தான் என்கிற காரணத்தினால் சொல்ல விரும்புகிறேன்.

முக்கியமாக விவசாய வளர்ச்சி—உற்பத்தி இவற்றைப் பொறுத்தவரையில் நாம் கொடுத்திருக்கக்கூடிய புள்ளிவிவரங்களைப் பற்றிச் சொன்னார்கள். விவசாய உற்பத்தியைப் பற்றிய புள்ளிவிவரங்களை நாம் நமக்கு இருக்கக்கூடிய முறைகளை அனுசரித்து—அதில் குறைகள் இருந்தாலுங் கூட அந்த முறைகள் மூலமாகத்தான் எடுத்துச் செல்ல வேண்டியிருக்கிறது. விவசாய விளைச்சலைப்பற்றி இரண்டு மூன்று கட்டங்களில் மதிப்பிட வேண்டியதாக இருக்கிறது.

ஆகவே முதலில் எந்த அளவுக்கு ஆரம்ப காலத்தில், விதை விதைக்கக்கூடிய காலத்தில் விளைச்சல் இருக்கலாம் என்று அந்தச் சமயத்தில் இருக்கக்கூடிய பருவ மழை போன்றவற்றை வைத்துக் கொண்டு மதிப்பிடப்படுகிறது. பருவ மழை காலத்தில் இருக்கிறது. காலத்தில் கிடைக்கவில்லை; இப்படி இருக்கக்கூடிய இயற்கை நிலையைக் கொண்டு விளைச்சல் இவ்வளவு உயர்ந்து இருக்கலாம் அல்லது குறைந்து போகலாம் என்று கணக்கிடப்படுகிறது.

அதற்குப் பிற்பாடு விதைக்கிற காலத்தில் மழை இருந்தால் போதாது. பின்னும் தக்க சமயத்தில் மழை பெய்ய வேண்டும். ஆகவே இடைக்காலங்களில் இருக்கக்கூடிய கால நிலை விவரங்களை வைத்துக்கொண்டு மறுபடியும் அவர்கள் முன்பு போட்ட மதிப்பைப் பரிசீலனை செய்து அது இன்னும் இவ்வளவு அதிகரிக்கலாம் அல்லது குறைந்து போகலாம் என்று மதிப்பிடுகிறார்கள். முன்பு போட்ட மதிப்பையே திரும்பவும் மதிப்பிடுகிறார்கள். கடைசி அறுவடைக்கு கொஞ்சம் முன்பு பைனல் எஸ்டிமேட் என்று சொல்லுவார்களே அதுமாதிரி இவ்வளவு விளைச்சல் இருக்கும் என்று உத்தேசமாக மதிப்பிடுகிறார்கள். அதாவது, முன்பு போட்ட மதிப்பீடுகள் எல்லாம் இப்போது திருப்பி அமைக்கப்படுகிறது. விளைந்து, அறுவடை செய்த பிற்பாடு ஜமாபந்தி கணக்கு எல்லாம் தெரிந்த பிற்பாடு அந்த வருஷத்திற்குத் திட்டமாக இவ்வளவு என்று சொல்ல முடியும். ஆகையால்தான், 1958-59, 1959-60 ஆகிய இரண்டு வருஷங்களையும் பற்றி முடிவாகச் சொல்லக்கூடிய நிலைமை இல்லை.

நாம் எப்படி பட்ஜெட் எஸ்டிமேட், பட்ஜெட் ரிவைஸ்ட் எஸ்டிமேட், பட்ஜெட் அக்கவுண்ட் என்று போடுகிறோமோ அப்படித்தான் செய்ய வேண்டியிருக்கிறது. அவ்வப்போது கணக்குகள் மாறுபடுகின்றன. இந்தப் புள்ளி விவரங்கள் தவறு என்று சொல்ல முடியாது. இது தவிர்க்க முடியாதது ஆகும். அதனால் புள்ளிவிவரங்கள் மாறுகிறதே தவிர தெரியாத முறையிலோ, அல்லது ஏமாற்றுகிற முறையிலோ ஒன்றுக்

17th March 1960] [Sri C. Subramaniam]

கொன்று தொடர்பு இல்லாமல் இந்தப் புள்ளி விவரங்கள் கொடுக்கிறார்கள் என்று சொல்வது தவறான கருத்து என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Sri K. ANBAZHAGAN: இந்தப் புள்ளிவிரங்களைப் பற்றி அமைச்சர் அவர்கள் ஒருவாறு விளக்கம் தந்திருக்கிறார்கள். ஆனால் புள்ளிவிவரங்களைப் பற்றி எழுந்த பிரச்னைகள் 1960–61-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் 1959–60-ம் ஆண்டு முடிவான புள்ளிவிவரங்களையும், 1959–60-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் 1958–59-ம் ஆண்டு முடிவான புள்ளி விவரங்களையும் கொடுத்திருக்கலாம். அப்படி இல்லாது 1958-59 முடிவான புள்ளி விவரங்களை 1959–60 ஆண்டு குறிப்பிடாமல் விட்டுவிட்டு 1960–61-ம் ஆண்டு இடையே இரண்டாண்டு தள்ளி மாற்றிக் கொடுப்பதற்குக் காரணம் என்ன ? 1958–59 புள்ளிவிவரங்களை மாற்றுவதாக இருந்தால் 1959–60-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் மாற்றித் தந்திருக்கலாம் அல்லவா ? அவ்வாறு இல்லாமல் 1960–61-ம் ஆண்டு இவ்வறிக்கையில் மாற்றி அளித்திருப்பதற்குக் காரணம் என்ன ? கடந்த மூன்று ஆண்டு நிதி நிலை அறிக்கையும் இதோ இருக்கிறது.

The Hon. Sri C. SUBRAMANIAM: ரொம்ப சந்தோஷம். 1958–59-ம் ஆண்டு புள்ளிவிவரத்தைப் பற்றிச் சொல்லுகிற போது நம்முடைய விவசாய வருஷத்தைப் பசலி என்று சொல்வார்கள். ஜூலை 1-ந் தேதியிலிருந்து ஆரம்பிக்க வேண்டியது. 1958-ம் ஆண்டு ஜூலையிலிருந்து பசலி ஆரம்பித்தால் 1959-ம் ஆண்டு ஜூன் 30-ம் தேதியோடு அந்தப் பசலி முடிகிறது. அதற்குப் பிற்பாடு திட்டவட்டமாகக் கணக்கைச் சேகரித்து பார்ப்பதற்குள் 1959–60-ம் வருஷத்திய பட்ஜெட் தயாராகிவிடுகிறது. 1959–60-ம் வருஷத்திய பட்ஜெட் 1960-ம் ஆண்டு மார்ச், எப்ரல் மாதத்தில்தான் சபையில் வைக்கப்படுகிறது. என்றாலும் 59-ம் ஆண்டு நவம்பர், டிசம்பருக்குள்ளே புள்ளிவிவரங்களெல்லாம் தயாரிக்கப்பட்டு அச்சிடப்பட்டு விடுகிறது. கடைசிவரைக்கும் காத்திருந்து புள்ளி விவரங்களையெல்லாம் அச்சிட்டுக் கொடுப்பது என்பது முடியாத காரியம். அதனால்தான் இப்போது இருக்கக்கூடிய முறையில் எவ்வளவு சீக்கரம் கொடுக்கலாம் என்பதைப்பற்றி ஸ்டாடிஸ்டிகல் டைரக்டருடன் ஆலோசித்த பிற்பாடு இப்போது இருக்கக்கூடிய முறையில் இந்த அளவுக்குத்தான் முடியும் என்ற அளவிற்கு வந்திருக்கிறோம். இதில் ஏமாற்றுவது என்று சொல்வதற்கு இடம் இல்லை என்று சொல்ல விரும்புகிறேன். ஸ்டாடிஸ்டிக்ஸ் டைரக்டரை எந்த விதமான கணக்கு எழுதச் சொல்லுகிறோமோ அந்த விதமாக அவர்கள் எழுதிவிடலாம், இதிலே ஒன்றும் கஷ்டம் இல்லை. ஆனால் புள்ளி விவரங்கள் உண்மையாக இருக்க வேண்டும் என்ற காரணத்தால்தான் அப்படி செய்திருக்கிறோம். அங்கத்தினர் குறை சொன்னால் சொல்லட்டும். உண்மையான கணக்குகளைக் கொடுப்போம் என்பது இதிலிருந்துகூட நன்றாகத் தெரிகிறது.

அடுத்தப்படியாக இந்தச் சபையிலே இந்த பட்ஜட்டைப் பற்றி குறை கூறக்கூடிய முறையிலே பல கருத்துக்களை வெளி யிட்டிருக்கின்றனர். அவைகளை நாம் இனவாரியாகப் பிரித்துப் பார்க்கும்போது ஒன்று கொள்கை அடிப்படையில் இருக்கும் கருத்து வேற்றுமைகள் காரணமாக ஏற்பட்ட ஒரு குறைபாடு. அதற்குப் பிறகு நிர்வாகத்திலே இருக்கும் குறைகளை எடுத்துச் சொல்லும் முறையிலே பல பேர் குறை கூறினர்கள். மூன்ருவ தாவது பல பொது விஷயங்களைப்பற்றி சொல்லக்கூடிய முறையிலே இங்கு விவாதங்கள் செய்யப்பட்டன. ஆகவே இன வாரியாக எடுத்துக்கொண்டு பேசலாம் என்று இருக்கிறேன். தனித்தனியாக ஒவ்வொருவருக்கும் பதில் சொல்லக்கூடிய முறையில் பேசப் போவதில்லை. அதற்குத் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்கள் என்னை மன்னிப்பார்கள் என்று நம்பு கிறேன். ஆனல் அவர்கள் சொன்ன ஒவ்வொரு விஷயத்திற்கும் இம்மாதிரி இனங்களிலே நான் அதற்குப் பதில் சொல்லுவதற்கு என்னல் இயன்ற அளவு முயற்சி செய்கிறேன்.

இன்றைக்குக் கொள்கை அளவிலே குற்றம் குறைகள் இருப்ப தாக கனம் அங்கத்தினர் சின்னதுரை அவர்கள் பேச ஆரம்பித்தார்கள். சுதந்திரா கட்சி பட்ஜெட்டாக இருக்கிறது. என்று அவர்களுடைய சோஷலிச மனப்பான்மையை வைத்துக் கொண்டு இந்த பட்ஜெட்டிலே குறைகூறினர்கள். இதற்கு அடுத்தப் படியாக பேசினர் திரு. கல்யாணசுந்தரம் அவர்கள். "நன்ருகத்தான் நடந்திருக்கிறது, இருந்தாலும் விலை நிர்ணயம் பற்றிய உங்களுடைய கொள்கை என்ன ? என்னமோ இதைப் பற்றி விவாதிக்கிருர்களே தவிர, சர்க்காருடைய கொள்கை என்ன என்பதைப் பற்றி இதிலே விளக்கவில்லை. ஆகையால் இது ஒரு பெரியகுறை" என்பதைப் பற்றி அவர்கள் அந்த அடிப் படையிலே ஆற்றிய உரையைப் பற்றியும், பட்ஜெட்டிலே இருக் கும் பல்வேறு விஷயங்களைப் பற்றியும் குறைகளை எடுத்துச் சொன்னர்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தலைவர் ஸ்ரீ அண்ணதுரை அவர்கள் பேசும்போது இதிலே முக்கியமாக தொழில் துறையில் இருக்கும் கொள்கைப் பற்றி, இது தவருன கொள்கை என்று அவர்கள் எடுத்துக்கூறி அதற்கு இன்னும் ஒரு படி மேலாகச் சென்று இதுதான சொஷலிசத்தை வளர்க்கும் முறை, இது காங்கிரஸ் சோஷியலிசத்துக்கு பக்கத்திலே வருவதற்கு இல்லாமல் இருக்கிறது. காங்கிரஸ் கொள்கை எல்லாம் சோஷியலிசக் கொள்கை அல்லது அதற்கு வேறு பெயர் வேண்டு மானல் வைத்துக்கொள்ளுங்கள் என்ற முறையிலே அவர்கள் கொள்கை அடிப்படையாக இருப்பது பற்றி குறைகளைக் கூறினர்.

நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், இந்தச் சர்க்கா ரைப் பொறுத்தவரையில் பொதுவாக காங்கிரசினுடைய கொள்கைகளை இந்த நிர்வாகத்திலே கொண்டுவந்து அபிவிருத்தித் திட்டங்கள் மூலமாக அதை நடைமுறைக்குக்

17th March 1960] [Sri C. Subramaniam]

கொண்டுவரவேண்டுமென்று முயற்சி செய்து வருகிறோம். அந்த அளவு வெற்றி பெறுகிறோம் என்பது இப்போது நாம் நினைத்தாலுங்கூட இதிலே தீர்ப்புச் சொல்ல முடியாது என்று நினைக்கிறேன். பின்னாலே வரக்கூடியவர்கள்தான் இரண்டு மூன்று வருஷத்திற்கு பிற்பாடு வரக்கூடியவர்கள் நாம் இன்றைக்கு எடுத்துக்கொண்டுவரும் முயற்சிகளின் பலனை வரப்போகும் காலத்திலே அந்தப் பலன் எந்த அளவுக்கு இருக்கிறது என்பதை ஓரளவிற்கு சீர்தூக்கிப் பார்த்து முடிவு சொல்ல முடியும் என்பதுதான் என் கருத்து. இருந்தாலும்கூட, இப்போது செய்திருக்கும் முயற்சிகள் எந்த அளவிற்கு வருகின்றன என்பதைப் பற்றித்தான் நாம் இன்றைக்கு அதை அலசிப் பார்க்கவேண்டியதாயிருக்கிறது. இதிலே காங்கிரசினுடைய கொள்கை என்ன என்பதைப் பற்றியும் கூட இன்றைக்கு சில பேர்கள் ஸ்ரீ சின்னதுரை அவர்களும் மற்றவர்களும் சந்தேகம் கொள்ளக்கூடிய முறையில் பேசியிருக்கிறார்கள். ஆகவே அதை ஓரளவு விளக்குவது அவசியம். எந்த அடிப்படையில் நாங்கள் எப்படி நடவடிக்கை எடுத்துவருகிறோம், என்ன காரணத்தால் அந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று முடிவிற்கு வந்தோம் என்பதைப் பற்றி ஆராய்வதன் மூலமாகத்தான் ஸ்ரீ சின்னதுரை அவர்கள் எழுப்பிய கொள்கை விவாதத்திற்கும் மற்றவர்கள் எழுப்பிய கொள்கை விவதத்திற்கும் நான் பதில் சொல்ல முடியும் என்று நான் நினைக்கிறேன்.

காங்கிரஸ் திட்டவட்டமாக சொல்லி இருக்கக்கூடியது சோஷியலிசத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமுதாயத்தை அமைக்க வேண்டுமென்று முடிவிற்கு வந்திருக்கிறோம். அந்த முடிவு எடுக்கும்போது சில முக்கியமான கருத்துக்களை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டியது மிகவும் அவசியம். எந்த சமுதாய அமைப்பாக இருந்தாலும் சரி, எந்த சமுதாயமும் நல் வாழ்வு வாழவேண்டுமானால் பொருளாதார வளம் ஏற்படவேண்டும். சோஷியலிச சமுதாயமாக இருந்தாலும்சரி முதலாளித்துவ சமுதாயமாக இருந்தாலும்சரி அல்லது கம்யூனிஸ சமுதாயமாக இருந்தாலும் சரி பொருளாதார வளத்தை அடிப்படையாகக் கொண்டுதான் மக்களுடைய நல்வாழ்வு அமையவேண்டியதாயிருக்கிறது. ஆகையால் சோஷலிச சமுதாயம் என்று சொல்லும் போது சோஷலிச சமுதாயம் அமைவதற்கு பொருளாதார வளம் எந்த அளவிற்கு ஏற்படுகிறதோ அந்த அளவிற்குத்தான் சோஷலிச சமுதாயத்தை அமைக்கமுடியும். வெறும் வறுமை அடிப்படையிலே சோஷலிசம் அமையவேண்டும் என்று நினைப்பது, இருப்பதைப் பங்கு போட்டுக்கொள்ள வேண்டுமென்றால் வறுமையைத்தான் பங்கு போட்டுக்கொள்வதாகும். ஆகவே இன்றைக்கு பொருளாதார வளம் எந்த அளவிற்கு ஏற்படுத்தவேண்டும் என்பதைப்பற்றியும், அதை அமைப்பதற்கு என்ன முயற்சிகள் செய்யவேண்டும் என்பதைப் பற்றியும் நாம் அதற்கான முடிவுகளை எடுக்கக் கடமைப் பட்டிருக்கிறோம்.

[Sri C. Subramaniam] [17th March 1960

புதிதாக பொருளாதார வளத்தை நாம் பெருக்கப்போவதில்லை. இன்றைக்கு இருக்கும் நிலையில் உலகத்திலே பல நாடுகள் பொருளாதாரத்தில் அபிவிருத்தி அடைந்திருக்கின்றன. அவர்கள் எப்படி எந்த வழியிலே சென்று பொருளாதார அபிவிருத்தி அடைந்திருக்கின்றனர் என்பதை நாம் முதலில் ஆராய்ந்து பார்க்கவேண்டும். அவை இரண்டு பகுதிகளாக இருக்கின்றன. ஒரு பக்கத்திலே முதலாளித்துவ அடிப்படையிலே முன்னேற்றம் அடைந்த நாடுகள், இன்னொரு பக்கத்திலே கம்யூனிஸ்ட் அடிப்படையிலே முன்னேற்றம் அடைந்த நாடுகள். இரண்டு நாடுகளும் அவர்களுடைய முன்னேற்றத்தையும் நாம் தெரிந்துகொள்ளும் முறையில் நம் முன்னால் இருக்கின்றன. இன்றைக்கு அமெரிக்காவை எடுத்துக்கொண்டால் அவர்கள் முதலாளித்துவ அடிப்படையிலே பெரும் தொழில்களை வளர்த்திருக்கிறார்கள். இன்றைக்கு அந்த வளர்ச்சியின் காரணமாக எல்லா மக்களுக்கும்—தொழிளாலர்கள் உட்பட—நன்மை செய்திருக்கிறார்கள். இன்றைக்கு ரஷ்யத் தலைவர்களும் ஒப்புக்கொள்ளுகிறார்கள், அமெரிக்காவில் இருக்கும் தொழிலாளர்களுக்கு கொடுத்திருக்கும் அளவிற்கு நன்மைகள் இன்னும் ரஷ்யாவிலே ஏற்படவில்லை, எனினும் அதையும் இங்கு இனி கொடுக்கப்போகிறோம், இதற்கான வளர்ச்சி ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது என்று சொல்லுகிறார்கள், இன்றைக்கு ஏற்பட்டிருக்கும் வாழ்க்கைத் தரஉயர்வு அமெரிக்காவில் ஏற்பட்டிருக்கும் அளவிற்கு வேறு எந்த நாட்டிலும் ஏற்படவில்லை என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். அதோடு மட்டும் அல்ல, ரொம்ப குறைவாக வாங்கிக் கொண்டு கீழ் தளத்திலே இருப்பவர்களில் வருவாய்க்கும், மேல்தளத்திலே இருப்பவர்களின் வருவாய்க்கும் வித்தியாசம் எந்த அளவிற்குக் குறைந்திருக்கிறது என்பதைப்பார்க்கும்போது, ரஷ்யாவிலே இருப்பதைவிட அமெரிக்காவிலே அந்த நிலையை எய்தியிருக்கிறார்கள், முதலாளித்துவ அடிப்படையிலே என்பதை புள்ளி விவரங்களிலிருந்து நான் கூறுகிறேன். நான் இரண்டு நாட்டிற்கும் போனது கிடையாது. எனக்குக் கிடைத்திருக்கும் புள்ளிவிவரங்களை வைத்துக்கொண்டு இந்தக் கருத்தை வெளியிடுகிறேன். ஆகவே இன்றைக்கு இந்த வளர்ச்சி அமெரிக்காவிலே முதலாளித்துவ அடிப்படையிலே ஏற்பட்டிருக்கிறது. ஆனால் அது எந்த முறையில் எந்த கால அளவிற்குள்ளாக ஏற்பட்டது என்பதைப்பற்றியும் நாம் யோசித்துப்பார்க்க வேண்டும். 100, 150 வருஷ காலமாக இதற்கான நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதை மனதிலே கொள்ள வேண்டும். இன்றைக்குத் தொழிலாளர்களுடைய நிலைமை இவ்வளவு நல்லமுறையில் இருக்கிறது என்றால் 25, 30 வருஷங்களுக்கு முன்னால்கூட அல்லது 20 வருஷங்களுக்குள்ளேயேகூட அவர்களுடைய நிலமை எப்படி இருந்தது என்பதைப் பார்க்கும் போது, அமெரிக்காவிலே தொழில் வளர்ச்சி பெரும் அளவிலே ஒரு பக்கம் ஏற்பட்டுக் கொண்டிருந்து, அந்த அடிப்படையில் கோடீஸ்வர பிரபுக்களாக இருப்பவர்கள் 10, 20 பேர்கள் முதலிலும், பிறகு மேலும் மேலும் பல கோடீஸ்வரர்கள்

17th March 1960] [Sri C. Subramaniam]

பெருகிக்கொண்டிருந்த நேரத்திலே தொழிலாளர்களின் வாழ்க்கை சிதைந்து அவர்கள் சுரண்டப்பட்டுக் கொண்டிருந் தார்கள் என்பதை பார்க்கிறோம். இந்த அடிப்படையிலேதான் முதலாளித்துவ நாட்டிலே தொழிலாளர்களைச் சுரண்டி மேலும் முதலீடு செய்வதற்கான வசதிகளைப்பெற்றார்கள். இந்த அடிப் படையில்தான் அவர்களின் தொழில் வளர்ந்தது என்று பார்க் கிறோம். அதேமாதிரி இன்னொரு பகுதியிலே பார்ப்போமானால் ரஷ்யாவில் 150 வருடம்கூட ஆகவில்லை. அங்கே ஏற்பட்ட புரட்சிக்குப் பிற்பாடு 30, 35 வருஷங்களுக்குள்ளாக இப்போது இருக்கும் நிலைமையை அடைந்திருக்கிறார்கள். அவர்களும் நாம் எல்லோரும் பார்த்து புகழக்கூடிய முறையில் பெருமைப்படக் கூடிய முறையில், பாராட்டக்கூடிய முறையில் முன்னேற்றம் அடைந்திருப்பதைப் பார்க்கிறோம். எப்படி முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது, அமெரிக் காவில் ஒரு முறையில் தொழிலாளர்கள் சுரண்டப்பட்டார்கள் என்றால் ரஷ்யாவிலே பொதுவாக மக்களுடைய சுதந்திரம் பாதிக்கப்படக்கூடிய முறையில், எல்லோரும் இதைத்தான் சாப்பிட்டாக வேண்டும், இந்த வேலையைச் செய்துதான் ஆக வேண்டுமென்று ஒரு நிர்பந்தத்தின் அடிப்படையில்தான் அவர்கள் ஒரு சமுதாய அமைப்பை வகுத்துக் கொண்டு இப்போது நாம் கஷ்டப்பட்டாலும் பரவாயில்லை பிற்காலம் நன்றாக இருக்கவேண்டும் என்பதற்காக இதையெல்லாம் அனுபவித்துத்தான் ஆகவேண்டும் மென்று நினைத்தார்கள்—இதை மக்கள் ஒத்துக் கொண்டார்களோ, இல்லையோ அதை நான் சொல்லத் தயாரா யில்லை. ஸ்டாலின் ஆட்சி காலத்தில் பெரிய சர்வாதிகார பலாத் கார அடிப்படையிலே அந்த திசையிலே நடந்துவந்தது. அங்கு என்ன நடந்தது என்று சொல்ல நான் தயாரில்லை. மக்களே ஒப்புக்கொண்டு பளுவை ஏற்றுக் கொண்டார்களா? அவர்கள் சுதந்திரத்தை விட்டுக் கொடுத்தார்களா என்பது பற்றிய ஆராய்ச்சி இப்பொழுது வேண்டியதில்லை. அந்த அடிப்படை யில்தான் வளர்ச்சி அடைந்தது என்பதில் சந்தேகமில்லை. இன்றைக்கு புதிதாக நம் நாட்டிலே பொருளாதார வளர்ச்சி ஏற்படவேண்டுமென்று சொல்லும்போது நாம் ஒரு முடிவு செய்ய கடமைப் பட்டிருக்கிறோம். உலகத்திலே இன்று இரண்டு வழிகள் மூலமாகத்தான் பொருளாதார முன்னேற் றத்தை அடைந்திருக்கிறோம். அவைகளை கடைப்பிடிப்பதா? அல்லது அந்த இரண்டுமே இல்லாமல் ஒரு புதிய வழியைக் கடைப்பிடிக்க முயற்சி செய்யலாமா என்பதைப் பற்றி நாம் ஆராய்ச்சி செய்ய கடமைப்பட்டிருக்கிறோம். காந்திஜி காட்டிய வழியை அடிப்படையாக வைத்துக் கொண்டு பரிசீலனை செய்து பார்த்த பிறகு அமெரிக்காவில் நடந்ததைப் போன்று, பல நூற்றாண்டுகளாக தொழிலாளர்களைச் சுரண்டி, ஸ்லம்மினும் கீழ்தாமான வாழ்க்கையை நடத்தி அந்த அடிப்படையில் நாம் முன்னேற்றம் அடைய வேண்டுமென்ற அவசியம் கிடையாது; அல்லது ரஷ்யாவைப் போல் ஒரு டோட்டலிட்டேரியன் ஸ்டேட் என்ற அடிப்படையில், மக்களின் சுதந்திரம், உரிமைகள்

11-00 a.m

[Sri C. Subramaniam] [17th March 1960

எல்லாவற்றையும் தாற்காலீகமாக ஒதுக்கி வைத்து விட்டு தொழில் முன்னேற்றத்திற்குத்தான், பொருளாதார முன்னேற்றந்தான் முதலிடம் பெற வேண்டும் என்ற முறையில் நாம் முன்னேற வேண்டிய அவசியமும் இல்லை, இந்த இரண்டிற்கும் இடையில், இரண்டிலும் உள்ள குறைகளை ஓரளவு நீக்கிவிட்டு நாம் முன்னேறிச் செல்ல முடியும் என்று, அதற்கு வழியிருக்கிறது, என்ற முறையில் நம் நாட்டுத் தலைவர்கள் ஒரு முடிவுக்கு வந்து அந்த அடிப்படையில்தான் இன்று நமது பொருளாதார முன்னேற்றத்திற்கு ஒரு வழி அமைத்திருக்கிறார்கள். அதைத்தான் டெமோக்ராட்டிக் ப்ளானிங் என்று சொல்வது. ஜனநாயக அடிப்படையில் மக்களின் சுதந்திரம் பாதிக்கப்படாமல் ஆட்சி நடத்தப் படவேண்டுமென்ற முறையில் இன்றைக்கு திட்டமிட்ட முறையில், டெமோக்ராட்டிக் ப்ரின்ஸிபிள்ஸ் உடைந்து போகாமல் அந்த அடிப்படையில் முன்னேற்றம் அடைய முடியும் என்பதினால் டெமோக்ராட்டிக் ப்ளானிங்கை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். சில பேர்களுக்கு என்ன தோன்றுகிறது என்றால், இந்த ப்ளானிங் எங்கே நடந்தது? ரஷ்யாவில் நடந்தது. ஆகவே, இது ரஷ்யாவைப் பின்பற்றுவதாகும், என்று நினைக்கிறார்கள். உலன் கோட் போட்டிருக்கலாம், ஆனால் அதற்கு உள்ளே இருக்கிறவர் கம்யூனிஸ்ட் என்ற உணர்ச்சி தோன்றுகிறது. அதேபோல் தனியார் துறைக்கு இங்கு இடம் இருக்கிறது. தனியார் துறை எங்கே இருந்தது? அமெரிக்காவில் இருந்தது. ஆகவே, இது முதலாளித்துவ அடிப்படையில் நடக்கிறதே தவிர அதற்கும் இதற்கும் ஒரு வித்தியாசமும் இல்லை என்று நினைக்கிறார்கள். ஒரு சிலர், தனியார் துறைக்கு இடம் இருக்கிறது, ஆகவே இது முதலாளித்துவம் என்று சொல்கிறார்கள், ஒரு சிலர் இங்கு பப்ளிக் செக்டர் இருக்கிறது, ப்ளானிங் இருக்கிறது ஆகவே இது கம்யூனிஸம் என்று சொல்கிறார்கள். ஆகவேதான், அந்தப் பக்கத்தில் இருக்கும் சின்னதுரை அவர்கள் ஒரு விதத்திலும், இந்தக் கோடியில் இருக்கும் ராமசுவாமி முதலியார் அவர்கள் ஒரு விதத்திலும் பேசுகிறார்கள். இந்த இரண்டிற்கும் மத்தியில் அண்ணதுரை அவர்கள் போய்க் கொண்டிருக்கிறார்கள். திட்டமிட்ட அடிப்படையில் நாம் முன்னேறுவதின் மூலம்தான் நாம் வேகமாக முன்னேற முடியும். அவரவர்கள் இஷ்டம் போல் அவர் அவர்கள் எந்தத் தொழிலை வேண்டுமானாலும் வைத்து நடத்திக் கொள்ளட்டும், எதை எதை எப்படி நடத்துவது என்று அவர்களுக்குத் தெரியாதா என்று இஷ்டம்போல் விட்டுவிட்டால் இன்னும் ஒரு 150 ஆண்டுகள் கழிந்த பின்தான் இப்பொழுதுள்ள நிலை மாறி மற்ற நாடுகளைப் போல் முன்னேற்றம் அடைய முடியும். ஆனால் அவ்வளவுதூரம் காத்திருக்க நாம் தயாராயில்லை என்ற காரணத்தினால்தான் இந்த இரண்டிலும் தீமையாக இருக்கக்கூடிய பகுதிகளை நீக்கி முன்னேற்றம் அடைய வேண்டும் என்ற அடிப்படையில் ப்ளானிங் என்பதை ஏற்றுக்கொண்டு திட்ட அடிப்படையில் முன்னேற வேண்டும் என்ற கொள்கையை நாம் வகுத்துக் கொண்டிருக்கிறோம்.

17th March 1960]

Sri C. N. ANNADURAI: அமைச்சர் அவர்கள் சுவையுள்ள முறையில் தத்துவங்களை விளக்கிக் கொண்டிருப்பதால் இடையில் குறுக்கிட்டு ஒரு விளக்கம் கூறக் கேட்கிறேன். காங்கிரஸ் கட்சியின் கொள்கைகளை இங்கு நிறைவேற்றிக்கொண்டிருக் கிறார்கள். அதற்கு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள், எந்தளவிற்கு அதில் நாங்கள் வெற்றி பெறப்போகிறோம் என்பது பின்னால் தெரியும் என்று சொன்னார்கள் சோஷிய லிஸம் அல்லது முதலாளித்துவம் என்ற இரண்டும் இல்லாமல் அவைகளுக்கு இடையில் நாங்கள் போய்க் கொண்டிருக்கிறோம் என்று குறிப்பிட்டார்கள். இடையில் இருப்பவன் நான் என்று தெரிவித்தார்கள். சென்ற தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு மொத்தம் கிடைத்த வாக்குகள் 44 சத விகித மாகும். இந்தக் கொள்கையை ஏற்றுக் கொள்ளாமல் இந்தப் பக்கத்திலும், அந்தப் பக்கத்திலும், வேறு பக்கங்களிலும் இருக் கிறவர்களுக்கு கிடைத்த வாக்குகள் காங்கிரஸ் கட்சிக்கு கிடைத்த வாக்குகளைவிட அதிகமாகும். ஆகவே முதலில் மக்களை உங்கள் பக்கத்திற்கு திருப்பிக் கொண்டு பிறகு உங்கள் கொள்கைபடி செல்ல வேண்டியதுதான் ஜனநாயக முறையே தவிர, 44 சத விகித மக்கள் எங்கள் பகுதியில் இருக்கிறார்கள், ஆகவே நாங்கள் எங்கள் கொள்கைபடி நடப்போம் என்று சொல்வது ஜனநாயகமா? சுத்த ஜனநாயகமா? என்று தெரிந்துக்கொள்ள விரும்புகிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM: அது, பட்ஜெட் விவாதத் திற்கு மேலே போகக்கூடியது. இன்றைக்கு ஒரு அரசியல் சட்டம் அமைக்கப்பட்டிருக்கிறது. அரசியல் சட்டம் அவர்களுக்கு பிடித்திருக்கிறதா இல்லையா என்று எனக்குத் தெரியாது. ஏனென்றால் அவர்களுக்கும் இதற்கும் சம்மந்தமே கிடையாது. அது, எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட சட்டமாகும். அதுபற்றி ப்ரிவிலேஜ் மோஷன் வந்த பிற்பாடு ஒரு விளக்கம் கொடுத்தார்கள், அண்ணாதுரை அவர்கள். அரசியல் சட்டத்தை ஏற்றுக் கொண்டு அதன் அடிப்படையில் பணியாற்றுவோம் என்று கருத்து தெரிவித்தார்கள்.

Sri C. N. ANNADURAI: அரசியல் சட்டத்தை ஏற்றுக் கொள்வது என்றால், அதில் திருத்தம் செய்வதற்கான எனது உரிமையை மறுக்காமல்

The Hon. Sri C. SUBRAMANIAM: அது இருக்கிற வரையில் அதைப் பின்பற்ற அவர்கள் தயாராயிருக்கிறார்கள். அதை மாற்றும்போது, அதை எப்பொழுது மாற்றுகிறார்களோ அப் பொழுது பார்த்துக் கொள்ளலாம். அது இப்பொழுது எப்படி இருக்கிறதோ அப்படி நடக்க வேண்டுமே தவிர, அண்ணாதுரை அதை மாற்ற விரும்புகிறார், ஆகவே, அரசியல் சட்டபடி நாம் நடக்க வேண்டியதில்லை என்று ஒவ்வொருவரும் ஆரம்பித்தால் அரசாங்கத்தை நடத்தவும் முடியாது, ஒழுங்கை நிலை நாட்டவும் முடியாது. இன்றுள்ள அரசியல் சட்டப்படி தேர்தல் எந்த

முறையில் நடக்க வேண்டும், எந்த முறையில் சர்க்கார் அமைய வேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த முறையில் சர்க்கார், மக்கள் பிரதிநிதிகளின் சபை இவைகளெல்லாம் வகுக்கப்பட்டிருக்கிறது. இந்த அடிப்படையில்தான் நாம் ஜனநாயகத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். ஒரு புதிய ஜனநாயகத்தை அவர்கள் கொண்டு வரும் போது அப்பொழுது அதைப் பற்றி ஆலோசித்துக் கொள்ளலாம். ஆகவே, இன்றுள்ள முறையில் இதுதான் சரியான ஜனநாயகம். சட்ட அடிப்படையில், நியாயத்தின் அடிப்படையில், ஒழுங்கின் அடிப்படையில் இதை நிறைவேற்ற முன்வந்திருக்கிறோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆக, திட்ட அடிப்படையில் நாம் முன்னேறிச் செல்லும்போது கொள்கை முடிவு எடுக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம். ஒன்று, பெரிய தொழில்கள் ஆரம்பிக்க வேண்டியிருக்கிறது, இந்தப் பெரிய தொழில்கள் சிறிய தொழில்கள் எல்லாவற்றையும் சர்க்காரே ஏற்றெடுத்து நடத்துவதா? அல்லது தனிப்பட்டவர்கள் துறைக்கு இவைகளை விட்டு விடுவதா என்பது பற்றி ஒரு முடிவு எடுக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அப்படிப் பார்க்கும் போது இன்றுள்ள சோஷலிஸ தத்துவம், சின்னதுரை அவர்களின் கட்சி சொல்லும் கருத்தாயிருந்தாலும் சரி அல்லது நல்லசிவம் இருக்கக்கூடிய சோஷலிஸ கட்சிச் சொல்லும் கருத்தாயிருந்தாலும் சரி, பிரட்டனிலுள்ள சோஷலிஸ கட்சித் தலைவர்கள் கருத்தாக இருந்தாலும் சரி, சோஷலிஸ அடிப்படையில் ஒரு சமுதாயம் அமையவேண்டுமென்று சொல்லும்போது எல்லாத் தொழில்களையும் சர்க்காரே ஏற்றெடுத்து நடத்துவதினால்தான் சோஷலிஸம் ஏற்படும் என்று சொல்வது பழங்கால கொள்கை. இப்பொழுது ஏற்பட்டிருக்கக் கூடிய பரட்சிகரமான மாறுதல்களுக்கு முன்பிருந்த கொள்கைகளுக்கும் பெரிய முரண்பாடு இருக்கிறது. இன்று ஏற்பட்டிருக்கக்கூய தொழில் புரட்சியின் அடிப்படையில், இன்று ஏற்பட்டிருக்கக் கூடிய மாறுதல்களின் அடிப்படியில் தனியார் துறையும், பொதுத் துறையில் இரண்டுமே இருக்கக் கூடிய முறையில் ஒரு சோஷலிஸ சமுதாயத்தை அமைக்க முடியும் என்பதுதான் இன்று நிலவும் சோஷலிஸ கருத்து. இரண்டு துறைகளும் இருக்க வேண்டும். அப்படி இருப்பது சோஷலிஸக் கருத்துக்கு முறண்பட்டதல்ல. இரண்டும் எவ்வளவு வேகமாக முன்னேற வேண்டுமோ அந்தளவு வேகமாக முன்னேற வேண்டிய அவசியமாகயிருக்கிறது. வேகம் அதிகரிக்க அதிகரிக்க முன்னேற்றம் அதிகரிக்கும். அப்படி முன்னேற்றம் என்று சொல்லும்போது நாட்டிலுள்ள பல்வேறு சக்திகளையும் அதற்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அப்படியானால்தான் வேகம் வர முடியும். தனிப்பட்டவர்கள் இதற்குள்ளே வரக் கூடாது என்று ஒதுக்கி வைக்கும்போது நமக்குள்ள சக்தி அந்தளவு குறைகிறது, அப்பொழுது வேகம் குறைகிறது. ஆனால் வேகம் குறையக் கூடாது. ஆகவேதான் இந்த இரண்டு துறைகளும் இருக்க வேண்டுமென்று முடிவு செய்திருக்கிறோம்.

17th March 1960] [Sri C. Subramaniam]

இதைப்பற்றித்தான் சுவாரஸ்யமாக திரு. அண்ணுத்துரை அவர்கள் எங்களது கொள்கை அர்த்தநாரீசுவரர் போன்று இருக்கிறது என்று முன்பு சொன்னுர். வாஸ்தவம்தான்—உண்மையில் அதனுடைய அர்த்தம் அர்த்தநாரீசுவரர் என்பத்தில் இருக்கின்ற தத்துவத்தை அவர்கள் உணராமல்—அவர்களுக்கு மதத்தின்பேரில் இருக்கின்ற வெறுப்பின் காரணமாக பேசினுர்கள் என்று நினைக்கிறேன். (ஆரவாரம்-குறுக்கீடு) அவர்கள் வெளிப்படையாக வெறுப்பு என்று காட்டிக்கொள்வதாக இருந்தாலும், இங்கே சில சமயங்களில் பேசும்போது அவர்களுடைய உள்ளுணர்வு என்ன என்பது தெரிந்துவிடுகின்றது. அர்த்த நாரீசுவரர் என்பதில் இருக்கக்கூடிய பொருள்—அதில் இருக்கின்ற கற்பனை—இயற்கையிலேயே இரண்டு பொருள் ஒன்ருகச் சேர்ந்துதான் இருக்க முடியும், இரண்டும் கலந்திருப்பது தான் இயற்கை, அதன் அடிப்படையில் தான் வாழ்க்கைமுறை அமைய முடியும் என்பதை நமக்கு முன்னேர்கள் அனுபவ பூர்வமாக காட்டியிருக்கிருர்கள். மதக் கோட்பாட்டை விட்டு விட்டாலும் கூட—ஏனென்ருல் மதக்கோட்பாட்டைப் பற்றி சொன்னுல், அவர்களுக்குப் பிடிக்காமல் இருக்கலாம்—அது மூட நம்பிக்கை என்று வேண்டுமானுல் சொல்லலாம். அதையெல்லாம் விட்டுவிட்டு, விஞ்ஞான அடிப்படையில் பார்த்தாலுங்கூட, "மாட்டர்" (matter) அதாவது அணு என்பது பாஸிடிவ்-நெகடிவ் என்ற இரண்டும் கலந்துதான் இருக்கிறது. என்பதை அதை ஆராய்ந்த நிபுணர்கள் நமக்கு எடுத்துக்காட்டியிருப்பதை நாம் பார்க்கின்ருேம். ஆகவே, கலந்து இருப்பது தான் இயற்கை, அதன் மூலமாகத்தான் வாழ்க்கை அமைய முடியும், இதுதான் வாழ்க்கையின் முக்கிய அம்சம் என்று நாம் காண்கின்ருேம். வாழ்க்கையைப் பற்றி கவலை கொள்ளாதவர்களுக்கோ, அல்லது வாழ்க்கையை மீறுகிறவர்களுக்கோ இதைப் பற்றி வேண்டுமானுல் கவலை யில்லாமல் இருக்கலாம். இது விஞ்ஞானத்தின் மூலமாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே தனியார் துறையும் இருக்கிறது, பொதுத்துறையும் இருக்கிறது. இந்த இரண்டையும் வைத்துக்கொண்டிருக்கின்ற இவர்கள் அர்த்த நாரீசுவரர் போன்று இருக்கிருர்கள் என்று சொன்னுல், இவர்கள் வாழ்க்கையின் ரகசியத்தை அறியாதவர்கள் என்று தான் நான் நம்புகிறேன்.

Sri C. N. ANNADURAI: அமைச்சர் அவர்கள், நாங்கள், அவர்களை அர்த்தநாரீசுவர்கள் என்று சொன்னதை மறுக்காமல் இருந்ததற்கு நான் மகிழ்ச்சி அடைகிறேன். நாங்கள் மதத்தைப்பற்றி வெறுப்பு அடைந்திருக்கிருேம் என்று சொன்னுர்கள், மதங்களெல்லாம் இப்படிப் பட்டவர்களின் கையில் சிக்கி யிருப்பதனுல்தான் வெறுப்பு ஏற்படுகிறது. அர்த்த நாரீசுவரக் கொள்கை தான் அரசாங்கத்தின் கொள்கை என்று கருதுகிருர்களா? வாழ்க்கை ரகசியங்களை தெரிந்து இருப்பதினுல்தான், இரண்டும் சேர்ந்து ஒன்ருக இருந்தும் எதிலும் பலன் இல்லை என்பதை எடுத்துக் காட்டுகிருர்களா?

[17th March 1960

THE HON. SRI C. SUBRAMANIAM: மதம் எங்களுடைய கையில் சிக்கிக் கொண்டிருப்பதாக சொன்னார்கள். வேண்டுமென்றால் அவர்களே கூடிய சீக்கிரத்தில் மதாச்சாரியார்களாக வந்து மதத்தைக் காப்பாற்றுவார்கள் என்று எண்ணுகிறேன். (பலத்த சிரிப்பு). ஆகவே, இன்றைக்கு இரண்டையும் எடுத்துக் கொள்வது தவறான கொள்கை அல்ல என்பதை நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். அப்படி எடுத்துப் பார்க்கும்போது, பொதுத் துறையில் இருக்கக் கூடிய குறைகளையும், தனியார் துறையில் இருக்கக்கூடிய குறைகளையும் நீக்குவதற்காக நாம் நடவடிக்கை எடுக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அதற்காக நாம் பல கட்டுப்பாடுகளை ஏற்படுத்தவேண்டியிருக்கிறது. தனியார் துறைகளை எடுத்துக் கொண்டால் அதில் நடக்கிற தவறுகளையும் பொதுத் துறையை எடுத்துக்கொண்டால் அதில் நடக்கிற தவறுகளையும் நீக்குவதற்காக கட்டுப்பாடுகளை ஏற்படுத்தி இவை இரண்டையும் ஒன்றாக இணைத்து வைத்திருப்பதுதான் நம்முடைய தொழில் கொள்கை என்பதை மிகவும் வலியுறுத்திக் கூறிக்கொள்கிறேன். ஆகவே, இதற்கு அடிப்படையாக பெரும் தொழில்களை எல்லாம் தனியார்களிடம் விடாமல், அடிப்படையாக பெரும் தொழில்களுக்கு வேண்டிய பொருள்களை உற்பத்திச் செய்யக்கூடிய பெரும் தொழில்களை—தொழில் வளர்ச்சிக்கு தடையாக இருக்கக்கூடாது என்பதற்காக—ஆதாரமாக இருக்கக்கூடிய தொழில்களை எல்லாம் சர்க்காரே எடுத்து நடத்த வேண்டும் என்ற முடிவுக்கு வந்திருக்கிறோம். பாக்கியிருக்கக்கூடிய தொழில்களை எல்லாம்—எல்லாமே தனியார்களுக்கு விட்டுக்கொடுக்க வேண்டும் என்பது மட்டும் சர்க்காருடைய கொள்கையாக இல்லாவிட்டாலும் கூட—நாட்டில் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்ற மாறுதல்களுக்கு ஏற்ப தனியார்களுக்கு விட்டுவிடுவது என்பதை நாம் அனுசரித்து வருகிறோம். அதனால் பல சிக்கல்கள் ஏற்படும். ஆகவே எல்லாத் தொழில்களையும் பொதுத் துறையில் தான் எடுத்து நடத்த வேண்டுமென்று முடிவு செய்வோமானால் அப்போது, அதற்கும் தடையில்லாத முறையில் நம்முடைய தொழில் கொள்கையை வகுத்திருக்கிறோம். இது இன்று நேற்று வகுத்த கொள்கையல்ல, அதைப்பற்றி நன்றாக ஆராய்ந்து பார்த்து, 1948-ம் வருஷத்திலேயே முடிவு செய்யப்பட்ட கொள்கையாகும். அதன் பின்னால் அனுபவத்தின் காரணமாக சில மாறுதல்கள் செய்யப்பட்டிருந்தாலும் அடிப்படையான கொள்கை இதுதான் என்பதை நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

இந்தக் கொள்கையை வகுத்துக் கொண்டதன் பின்னால், நம்முடைய ராஜ்யத்தில் என்ன நடந்துக் கொண்டிருக்கிறது என்பதை நாம் பார்க்க வேண்டும். கொள்கையை வகுத்துக் கொள்வது சுலபம், ஆனால் அவற்றின்படி நடந்துக் கொள்வதில் தான் பல வித கஷ்டங்களும் ஏற்படுகின்றன. நாம் வகுத்துள்ள கொள்கையின்படி நடந்துக் கொண்டிருக்கிறோமா என்பதை பற்றி கனம் சின்னதுரை அவர்கள் கவலைப்பட்டார்கள். ஆனால் பலர் இந்த நாட்டில் பொதுத் துறையில் ஒன்றுமே நடைபெற

17th March 1960] [Sri C. Subramaniam]

வில்லைபோல் இருக்கின்றது என்று நினைக்கிறார்கள். மத்திய அரசாங்கத்தின் கீழ்தான் எல்லாம்—அதிலும் பொதுத்துறையில் நடந்துக் கொண்டிருக்கின்ற தொழில்கள் நடந்துக்கொண்டிருக்கின்றன—என்று சிலர் நினைத்துக் கொண்டிருக்கின்றார்கள். அது தவறான கருத்து என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

Srimathi Dr. SATHIAVANIMUTHU: Sir, on a point of order மன்றத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தொழில் கொள்கையைப் பற்றி விளக்கும் போது, சமதர்மத்துக்கும் முதலாளித்துவத்திற்கும் இடையிலே இருக்கின்ற ஒரு பாதையில் செல்வதுதான் இப்போதுள்ள அரசாங்கத்தின் தொழில் கொள்கை என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். நான் அமைச்சர் அவர்களை கேட்க விரும்புவது எல்லாம், சமதர்மத்திற்கு பொருள் கூறியிருக்கின்ற ஜி.டி.எச். கோல் (G.D.H. Cole) அவர்கள் பெரும் தொழில்களை எல்லாம் எடுத்து நடத்துவது தான். . . .

DEPUTY SPEAKER: It is not a point of order, and the hon. Member cannot expect a reply from the Chair. Let the hon. Member resume her seat.

The Hon. Sri C. SUBRAMANIAM: கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்வது சி.ஒ.எ.எல் கோல் அல்ல, சி.ஒ.எல்.இ. கோல் அவர்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார்கள். அந்தக் கொள்கை எல்லாம் பழங்கால கருத்துக்கள். அவைகளை எல்லாம் விட இப்போது எவ்வளவோ புதிய கருத்துக்கள் எல்லாம் வந்திருக்கின்றன. 1940-ல் ஒரு கருத்து சொல்லப்பட்டிருந்தால், அதை வைத்துக்கொண்டு அதுதான் நவீன கருத்து, அதை விட இப்போ புதிய கருத்துக்கள் ஒன்றும் இல்லை என்று சொல்லிக் கொண்டிருந்தால் அது பிரயோசனமில்லை. நாம் இதன் பின்னால் 20 வருடங்களாக முன்னேறியிருக்கிறோம் என்பதை நாம் மறந்து விடுகிறோம். இன்றைக்கு இருக்கின்ற வேகமான விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாகவும், தொழில் வளர்ச்சியின் காரணமாகவும் எவ்வளவோ ஆண்டுக்கு ஆண்டு மாறிக் கொண்டிருக்கிறது. சென்ற ஆண்டிலிருந்து இந்த ஆண்டுக்கு எவ்வளவோ மாறியிருக்கிறது. ஆகவே, ஒரு கோளத்திலிருந்து இன்னொரு கோளத்திற்கு போகலாம் என்பதைப் பற்றி ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கின்ற இந்த காலத்தில் நாமும் நம்முடைய கொள்கையையும் சிறிதளவு மாற்றிக் கொள்ளத்தான்வேண்டும். அதல்லாமல் ஒரு கொள்கையை "கோல்" சொல்லியிருந்தாலும் சரி, நிலக்கரி சொல்லியிருந்தாலும் சரி, அதை நாட்டிலுள்ள நிலைமைக்குத் தகுந்தவாறு மாற்றிக் கொள்ளத்தான் வேண்டும். அதல்லாமல் "கோல்" அவர்களையேதான் கடைபிடித்துக் கொண்டிருக்கவேண்டுமென்றால், அவர்கள் அவ்விதமே செய்துக் கொண்டிருக்கட்டும் அதை மாற்றச் சொல்ல நான் தயாராக இல்லை. அதற்கு அவர்கள் தலைவர்கள் இருக்கிறார்கள். நான் சொல்லுவது, இதுதான் காங்கிரஸின் கொள்கை, இந்த அடிப்

[Sri C. Subramaniam] [17th March 1960

படையில்தான் இப்போது சர்க்காரின் தொழில் கொள்கை அமைந்திருக்கிறது என்பதைதான். நான் விவரித்துக்கொண்டிருந்தது, பொதுத் துறையில் ஒன்றுமே இந்த சர்க்கார் நடத்தவில்லை என்று சிலர் நினைத்துக் கொண்டிருப்பதைப் பற்றி இன்றைக்கு மின்சாரத் துறையை எடுத்துக் கொண்டால் பொதுத்துறையில் நாம் எதிலும் போட்டிராத பெரிய அளவில்—அதாவது சுமார் 100 கோடிக்கு மேல்—முதலீடு செய்திருக்கிறோம். இதில் வேண்டுமென்றால் சுமார், 50, 60 லட்சத்திற்கு தனியார் துறையில் இருக்கலாம், இவைகளும் இரண்டு மூன்று வருடங்களில் நம் கைக்கு வந்துவிடும். அது மட்டுமல்ல மின்சாரத் தொழிலுக்கு வேண்டிய சாமான்களையும் நாம் தயாரித்துக்கொண்டிருக்கிறோம். பப்ளிக் வொர்க்ஸ் தொழிற்சாலையில் நாம் பலவிதமான சாமான்களை தயாரித்துக்கொண்டிருக்கிறோம். இந்தப் பண்டங்கள் எல்லாம் வெளியில் கொண்டு போய் விற்பதில்லை. இதனால்தான் பொதுமக்களுக்கு தெரிவதில்லை. இன்றைக்கு பல்வேறு கருவிகளையும், சாதனங்களையும் நம்முடைய தொழிற்சாலை மூலமாக செய்து கொண்டிருக்கிறோம் என்பதைத்தான் நாம் நன்றாகத் தெரிந்து கொள்ளவேண்டும். இவைகளில் நாம் எவ்வளவு மூலதனம் போட்டிருக்கிறோம் என்று பார்க்கும்போது, அவர்கள் சொன்னதுபோல் எல்லாமே—தொழில்கள் எல்லாவற்றையுமே—தனிப்பட்ட முதலாளிகள் எடுத்துக் கொண்டார்கள்—என்ற அளவுக்குச் சொல்வதை நாம் கவனிக்கவேண்டும். இன்றைக்கு பெரும்பகுதி தொழில்கள் பொதுத்துறையில்தான் இருக்கின்றன.

அடுத்தபடியாக அவர்கள் குறிப்பிட்டார்கள், டிரான்ஸ்போர்ட்–பஸ்போக்குவரத்தைப்பற்றி. அதாவது சென்னையிலும் கன்னியாகுமரியில் மட்டும்தான், நடத்தப்படுகிறது என்று குறிப்பிட்டார்கள். அதோடு நெய்வேலியில் நடப்பதையும், பேரம்பூர் தொழிற்சாலையைப்பற்றியும் குறிப்பிட்டு, இவைகள் எல்லாம் மத்திய சர்க்கார் தானே எடுத்துக்கொண்டு நடத்துகிறது. ஏன் நாமே எடுத்துக்கொள்ள முயற்சி செய்திருக்கக்கூடாது? அதோடு இந்த கருத்தையும் தெரிவித்து, தமிழ் நாட்டில் அதற்குள்ள அறிவுத்திறன் போதவில்லையென்றால் அதற்கான ஆற்றல் உள்ள அமைச்சர்கள் இல்லையென்றால், நம் அண்டை மாகாணமாகிய ஆந்திராவில் இருக்கக்கூடியவர்களையாவது—அங்கிருக்கின்றவர்களும் காங்கிரஸ்காரர்கள்தான்—பின்பற்றி, இந்தத் தொழில்களை எல்லாம் நாம் கைப்பற்றி வாங்குவதற்கு முயற்சி எடுக்கவேண்டும் என்றுள்ள கருத்தை அவர்கள் நமக்கு இடித்துரைத்தார்கள். அதை வரவேற்கிறேன். ஆனால் ஆந்திராவில் பேசுகின்றவர்கள் என்ன பேசுகிறார்கள்? இன்றைக்கு தென்னிந்திய வளர்ச்சி என்று சொன்னால் அது சென்னை வளர்ச்சியாகத்தான் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். ஆனால் அதையும் அவர்கள் ஒப்புக்கொள்ளத்தயாராக இருப்பார்களோ என்னவோ. ஆக பேசும் அளவுக்குப் போதும், மேடைகளில் நின்று கொண்டு, கையைத் தூக்கி கத்தி இல்லாமல், ரத்தம் இல்லாமல் சண்டை போட

17th March 1960] [Sri C. Subramaniam]

வேண்டும், பேச்சளவில் இருக்கவேண்டும் என்று சொன்னால் அதற்கு நானும் தயார். ஆனால் இன்றைக்கு நடக்கக் கூடிய காரியங்களைப் பார்க்கவேண்டுமே தவிர பேச்சளவில் போராட்டம் நடத்துவதால் மட்டும் எந்தக் காரியத்தையும் நிறைவேற்ற முடியாது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இன்றைய தினம் யோசித்துப் பாருங்கள். நெய்வேலியையும், கோச் பாக்டரியையும் மத்திய சர்க்கார் எடுத்துக் கொள்ளக் கூடாது என்று எந்த அடிப்படையில் சொல்லுகிறார்கள். அவர்கள் சொல்வது பொது அடிப்படையிலா—அல்ல. அவர்களுக்கு இருக்கக்கூடிய தனி நாட்டுக் கொள்கை என்ற அடிப்படையில் தான், மத்திய சர்க்கார் என்பது அங்கு தனித்து இருக்கக் கூடிய ஒரு ஸ்தாபனம் என்ற அடிப்படையில்தான் (ஒரு குரல்: கனம் கரியா கௌண்டர் அவர்கள்தான் சொன்னார்கள்) கனம் கரியா கௌண்டர் சொன்னாலும், இன்னொரு "கோல்" சொன்னாலும் அதுதான். (பலத்த சிரிப்பு) ஆக, இந்த திராவிட நாட்டுப் பிரிவினை அடிப்படையில் சொல்லுகிறார்களே தவிர வேறு அல்ல. அந்த அடிப்படையை நாங்கள் ஒப்புக் கொள்ளவில்லை. நாம் ஒன்றுபட்டு இயங்க வேண்டும் என்று சொல்லும்போது, ஒன்றுபட்டு இயங்க வேண்டும் என்ற கொள்கையைக் கொண்டிருப்பதன் காரணமாக, அவைகள் இங்கு வந்து விட வேண்டும் என்று சொல்வதால், அம்மாதிரி வந்து விடுகிறது என்று வைத்துக்கொண்டாலும், அதனால் நல்லது ஏற்படுமா என்று யோசித்துப் பார்க்கவேண்டும். இங்கே ஒரு அறிஞர் இருப்பது போல மீதிப் பகுதியிலும் அறிஞர்கள் இல்லாதிருந்தாலும், அறிஞர் சொன்ன பிறகு அதே மாதிரி நடக்க வேண்டும் என்று பின் பற்றக் கூடியவர்கள் இருப்பார்கள் என்பதில் சந்தேகம் கிடையாது. இங்கு இருக்கக் கூடியது நெய்வேலி ஒன்று, மற்றொன்று பெரம்பூர் கோச் பாக்டரி. பெரம்பூர் கோச் பாக்டரி ரெயில்வேயாக இருந்தாலும் ராஜ்ய சர்க்காரிடம் இருந்தால், அவர்கள் இஷ்டம் போல நல்ல லாபம் வரக் கூடிய வகையில் நடத்தக் கூடாதா என்று கேட்கிறார்கள். நெய்வேலியை விட்டு விடலாம் அங்கே இன்னும் உற்பத்தி ஆரம்பிக்கவில்லை, செலவுதான் ஆகிக் கொண்டிருக்கிறது. கோச் பாக்டரியை எடுத்துக் கொள்கிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். மற்ற ராஜ்ய சர்க்கார்கள் சும்மா இருப்பார்களா? சித்தரஞ்சன் தொழிற்சாலை இருக்கிறது, பிலாய் ஸ்டீல் பாக்டரி இருக்கிறது, ரூர்க்கேலா இருக்கிறது, நாங்கல் பர்ட்டிலைஸர்ஸ் இருக்கிறது. இப்படி எங்கெங்கு இப்போது பொதுத் துறையில் ஏற்பட்டிருந்தாலும் அவைகளையெல்லாம் அந்தந்த ராஜ்யங்கள் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று, அங்கு கேட்பதற்கு அவர்களுக்குத் தெரியாமல் இருந்தாலும், அறிஞர்கள் காட்டிய வழியையாவது பின்பற்றுவார்கள். அப்போது கொஞ்சம் யோசித்துப் பார்க்க வேண்டும். அம்மாதிரி ஏற்பட்டால், அதனால் தமிழ் நாட்டுக்கு நன்மை ஏற்படுமா, அல்லது அதனால் தீமை ஏற்படுமா என்று யோசித்துப் பார்க்கவேண்டும். ஒவ்வொரு ராஜ்யமும் தங்கள் இஷ்டம்போல் வரி விதித்துக் கொள்ளலாம், தொழிற்சாலைகளில் உற்பத்தியாகக் கூடிய பொருள்களின் விலையை நிர்ணயித்

[Sri C. Subramaniam] [17th March 1960

துக் கொள்ளலாம் என்ற முறையை ஏற்படுத்திக் கொள்கிறோம் என்று வைத்துக் கொள்வோம். நமக்கு இரும்பு வேண்டியிருக் கிறது. நமக்கு வேண்டிய இரும்பு அங்கிருந்துதான் வரவேண்டி யிருக்கிறது. இப்படி இரும்பு விலையை வங்காளம்தான் நிர்ண யிக்கவேண்டும் என்று போய்க் கொண்டிருந்தால், பொதுவாக எல்லாத் தொழிற்சாலைகளையும் அந்தந்த ராஜ்ய சர்க்கார் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று சொன்னால், இன்றைக்கல்ல, இன்னும் இரண்டு தலைமுறைகளுக்கு முன்னேற்றம் ஏதும் ஏற்படாது. இன்றைக்கு இருக்கக் கூடிய சிந்திரியை பீகார் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று சொன்னால், அதிலே உற்பத்தியாகக் கூடிய உரத்தை அவர்கள்தான் உபயோகப் படுத்துவார்களே தவிர நமக்கு வராது. பின்னால் ஒரு சமயம் வரலாம். நெய்வேலி தொழிற்சாலை ஏற்பட்ட பிறகுதான் நமக்கு உரம் கிடைக்கும். இப்படிச் செய்தால் தாற்காலிகமாக வாவது இது நன்மை பயக்குமா என்று பார்த்தால் இதனால் பெரும் தீமைதான் விளையுமே தவிர, அவர்களுடைய கருத்தைக் கேட்டு நடப்பதன் மூலமாக, அவர்களுடைய கொள்கையை ஒப்புக்கொள்வதன் மூலமாக நன்மை ஏற்படும் என்றால் அவர் களுடைய கருத்தை ஏற்று நடத்தலாம். ஆனால் எனக்கு எட்டிய வரையில் இதனால் தமிழ் நாட்டுக்கு தீமை ஏற்படுமே தவிர நன்மை ஏற்படாது.

Sri C. N. Annadurai: தனி நாட்டுக் கொள்கையை வலியுறுத்த நான் இந்தப் பிரச்னையைப் பற்றி பேசியதாக அமைச்சர் அவர்கள் கருத்தைச் சொன்னார்கள். இதனால் தனி நாட்டுப் பிரச்னையை விட்டுவிட்டதாகவோ அல்லது இணைத்துப் பேசுவதாகவோ கொள்ள வேண்டாம். இந்த தனி நாட்டுக் கொள்கையை ஏற்றுக் கொள்ளாத மற்ற மாநிலங்களுள் ஒரு மாநிலத்தில் ஒரு திட்டமானது மத்திய சர்க்காரினால் துவக்கப் பட்ட பிறகு, அந்த மாநில சர்க்காரினாலேயே ஏற்றுக் கொள்ளப் பட்டிருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

The Hon. Sri C. Subramaniam: அது ஏது ?

Sri C. N. Annadurai: ஹீராகுட் திட்டத்தைக் குறிப் பிடுகிறேன்.

The Hon. Sri C. Subramaniam: ஹீராகுட் திட்டம் என்பது ஒரு எலெக்ட்ரிஸிடி திட்டம். அது இரண்டு, மூன்று மாநிலங்களுக்கு பொதுவாக இருக்கக்கூடிய திட்டம். தனிப்பட்ட ஒரு மாகாணம் அதை எடுத்துச் செய்ய முடியாது என்று பொதுவாகச் செய்து, பிறகு பிரித்துக் கொடுக்கப் பட்டிருக்கிறது. நம் ராஜ்யத்திலே எடுத்துக் கொள்ளுங்கள், குந்தாத் திட்டம். குந்தாத் திட்டம் நம்மிடம்தான் இருக் கிறது. இன்றைய தினம் எல்லா நீர்ப்பாசனத் திட்டங்களும் எல்லா எலெக்ட்ரிஸிட்டி திட்டங்களும் மத்திய சர்க்காருடைய கையில் வைத்துக் கொள்ளப்படவில்லை. கொள்கை அடிப்படை யில் அந்தந்த ராஜ்யத்தின் கையில்தான் ஒப்படைக்கப்பட்டிருக்

17th March 1960] [Sri C. Subramaniam]

கிறது. ஹிராகுட்டை உதாரணமாகக் காட்டுவது ஒரு பொறுத்தமற்ற உதாரணம் என்று சொல்ல விரும்புகிறேன். (ஆரவாரம்).

இன்றைக்கு ஒரு விஷயத்தைப் பற்றித்தான் எல்லா அங்கத்தினர்களும் ஒன்றுபட்ட கருத்தைத் தெரிவித்தார்கள். அதாவது இங்கு நம்முடைய தமிழ்நாட்டுக்கு இரும்புத் தொழிற்சாலே வரவேண்டுமென்பதைப் பற்றி. அதிலே கருத்து வேறுபாடு இருக்க இடமில்லே. சில பேர்கள் வேண்டுமாளுல், ஏதோ சொல்லி வைப்போம், வரவில்லே என்ருல், இருப்பவர்கள் எல்லாம் கையால் ஆகாதவர்கள் என்று குற்றம் சாட்டலாம் என்று சொல்லலாம். இப்படி ஒரு சாரார் இருக்கிருர்கள். இம்மாதிரி மனதில் வைத்துக்கொண்டுப் பேசுவதைப் பற்றித் தான் முதல் கூட்டத்திலேயே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களுக்கு எச்சரிக்கை செய்தேன். உங்கள் கொள்கை காரணமாக இன்றைக்கு ஒன்றுபட்ட நாடாக இருக்கிற காரணத்திளுல் தொழில் வளர்ச்சி ஏற்பட்டால் உங்களுடைய கொள்கைக்கு மாருக இருக்கும் என்று ஏற்படக் கூடிய தொழில் வளர்ச்சிக்கு உங்களே அறியாமலேயே தடையாக இருக்கக் கூடிய மனப்பான்மை வளர்ந்துவிடும், ஆகையால் உங்கள் பிரிவினேக் கொள்கையை கொஞ்சம் ஒத்திப்போட்டு வையுங்கள் என்று நான் சொன்னேன். ஆகையால்தான், இன்றைக்குப் பார்த்தால் அவர்கள் உண்மையிலேயே இங்கே இரும்புத் தொழிற்சாலே வரவேண்டுமென்று விரும்புவதில்லே. அவர்கள் நாம் ஒன்ருக இருக்கின்ற வரையில் முன்னேற முடியாது என்ற கருத்தைக் கொண்டிருப்பதால், இப்போது இரும்புத் தொழிற்சாலே வந்து விட்டால் அது முன்னேற்றம் ஆகிவிடும், ஆகையால் அது வரக் கூடாது என்று எண்ணிக் கொண்டிருக்கிருர்கள். அவர்களுடைய மனதில் இப்போது வர முடியாது : வராது என்று திரும்பத் திரும்ப இருக்கிறதே தவிர, உண்மையில் வரவேண்டும், அதற்கான முயற்சிகள் செய்யவேண்டும் என்று அவர்கள் யோசனே செய்வதாக அவர்கள் பேசுவதிலிருந்து, எழுதுவதிலிருந்து பாடுவதிலிருந்து தெரியவில்லே. இன்றைக்கு நம்முடைய தமிழ் நாட்டில் இரும்புத் தொழிற்சாலே ஏற்பட வேண்டுமென்று சொல்லும் போது சேலத்தில் இருக்கக் கூடிய இரும்புக் கனியை வைத்துக் கொண்டுதான் இங்கு இரும்புத் தொழிற்சாலே ஏற்பட முடியும் என்று எல்லோரும் உணர்ந்திருக்கிருேம். இரும்புத் தொழிற்சாலே ஏற்பட வேண்டுமென்று சொன்னுல் நெய்வேலியில் இருக்கக்கூடிய லிக்னேட் எந்த அளவுக்கு உபயோகப்படுகிறதோ அதைப் பொறுத்து, அதை வைத்துக் கொண்டுதான், அதை உபயோகப் படுத்தித்தான் தொழிற்சாலே ஏற்படுத்த முடியுமே தவிர வேறு வழியில் ஏற்பட முடியாது. காரணம் இப்போது தெரிந்திருக்கக் கூடிய முறையின்படி அதை வைத்துக் கொண்டுதான் செய்ய வேண்டும். ஆகையால்தான் இன்றைக்கு அதைப்பற்றி பரீட்சை செய்ய வேண்டியதாக இருக்கிறது. சிறிய அளவில் பரீட்சை செய்து பார்த்திருக்கிருேம். பெரிய அளவு பரீட்சை

[Sri C. Subramaniam] [17th March 1960

செய்து, லிக்னேட்டை உபயோகித்து, சேலத்தில் இருக்கக் கூடிய இரும்புக் கனியை இரும்பாக ஆக்க முடியுமா என்று பரிட்சை செய்து பார்த்து, சோதனை செய்து பார்த்து, அந்தச் சோதனை களில் வெற்றி பெற்ருலொழிய இங்கே இரும்புத் தொழிற்சாலே ஏற்படுத்தும் திட்டம் ஒன்றும் வராது என்று நான் திட்டவட்ட மாகச் சொல்லிக்கொள்ளவிரும்புகிறேன். நான் இதைச் சொன்ன வுடனே "பார்த்தாயா? கண்டிஷன் போட்டுத்தானே சொல்லு கிருர்" என்று கேட்கலாம். இதிலே கண்டிஷன் இல்லாமல் முடியாது: இப்போது அதை உபயோகப்படுத்த முடியுமா என்று பரிசீலனே செய்துக் கொண்டிருக்கிருேம். இதுவரையில் செய்யப் பட்டுள்ள சோதனைகள் நம்பிக்கையூட்டுவதாக இருக்கிறதா என்று சொன்னல், நடத்தப்பட்டிருக்கிற சோதனைகள் நம்பிக்கை யூட்டக் கூடியதாக இருக்கிறது. 100-க்கு 90 சதவிகிதம் வந்தே தீரும். பின்னல் சோதனையில்—வட நாட்டுச் சோதனையில் அல்ல—வெளிநாட்டு நிபுணர்கள் செய்யக் கூடிய சோதனையில் முடியாது என்று சொன்னல் என்ன செய்ய முடியும்? ஆனல் வளர்ச்சி நின்றுவிட போவதில்லே. விஞ்ஞான வளர்ச்சி/தொழில் நுணுக்க வளர்ச்சி நின்றுவிடப் போவதில்லே. இங்கேயே கூட புதிய முறையைக் கையாளக் கூடிய அளவு முன்னேற முடியும். இப்போது வேண்டுமானல் முடியாது என்று சொன்னலும் ஏதாவது இப்போதுள்ள முறைப்படி தடை பட்டாலும், எனக்கு இருக்கக்கூடிய நம்பிக்கை, உலகத்தில் ஏற்பட்டு வரக் கூடிய விஞ்ஞான அறிவு வளர்ச்சி காரணமாக, தொழில் நுணுக்க வளர்ச்சி காரணமாக, எப்படியும் சேலத்திலிருக்கக்கூடிய இரும்புக் கனியை இரும்பாக ஆக்க முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. ஆக இது இப்போது நடக்கின்ற சோதனையைப் பொறுத்திருக்கிறது. இதற்கு இப்போது பெருமளவில் லிக்னேட் வேண்டியிருக்கிறது. முதலில் ஒரு சிறிய குழிதான்—சோதனைக் குழி போட்டோம். இப்போது 86 கோடி ரூபாய் அளவில் நிர்ணயிக்கப்பட்ட திட்டம் நிறைவேறிக்கொண்டிருக் கிறது. அங்கே இப்போது உடனடியாக லிக்னேட் கிடைக்கக் கூடிய நிலேமை இல்லே. ஆகையால், இந்த ஆண்டு முடிவதற் குள்ளோ அடுத்த ஆண்டு ஆரம்பத்திலோ சோதனைக்கு வேண்டிய லிக்னேட் கிடைக்கும். அது கொடுக்கப்பட்டவுடன் முடிவுகள் தெரிந்துவிடும். அந்த முடிவுகள் தெரிந்தவுடன் இது பற்றி முடிவான தீர்மானத்தைச் சொல்ல முடியும். அந்த லிக்னேட்டைக் கொண்டு சேலத்து இரும்பைப் பயன்படுத்த முடியும் என்று சொல்லக்கூடிய அளவுக்கு அந்தச் சோதனைகள் வெற்றிபெறுமானல், இங்கே இரும்புத் தொழில் வருவதை யாராலும் தடுக்க முடியாது. எனவே, "லிக்னேட் சோதனை வெற்றிகரமாக இருந்தால்தான் சேலத்து இரும்பைப் பயன் படுத்தித் தொழில் ஆரம்பிக்கலாம்" என்று மந்திரி ஸ்ரீ. ஸ்வரன் ஸிங் சொல்லிவிட்டாரே என்று பேசுவதோ எழுதுவதோ, நிலேமையைத் தெரிந்துக் கொள்ளாது செய்யும் காரியமாகும். இன்றைக்கே லிக்னேட் வர வேண்டுமென்று சொல்பவர்கள் விஷயமரியாதவர்கள். எனவே எங்களே ஒருவரும் ஏமாற்ற முடியாது. எங்களே ஏமாற்ற யாரும் பிரயத்தனம் செய்ய

17th March 1960] [Sri C. Subramaniam]

வேண்டிய அவசியம் இல்லை. நான் குறிப்பிட்ட இந்தச் சோதனைகள் வெற்றிப் பெற்ருல் நமது ராஜ்யத்தில் பெரிய தொழில்கள் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. இந்த ராஜ்யத்திலேயே இத்தகைய சில திட்டங்கள் நிறைவேற்றக்கூடிய வாய்ப்பு இருக்குமாளுல், இத்தகைய தொழில்கள் ஏற்படக் கூடிய வாய்ப்பு இருக்குமாளுல் அவை இங்கே எற்படுவதை யாராலும் தடுக்க முடியாது.

Sri N. K. PALANISAMI: திட்டக் கமிஷன் கூட்டத்தில், மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில், அங்கே உருக்குத் தொழிற்சாலை ஏற்படுத்தப்படும் என்று சொன்ஞர்கள். கனம் தொழில் மந்திரி கிழக்குச் ஜெர்மனிக்குச் சென்று அங்குள்ள நிபுணர்களுடன் இத்தொழில் பற்றிப் பேசிஞர். அவர்களும் இங்கே வந்து இங்கிருக்கும் இரும்புக் கனியை பரிசீலித்துவிட்டு, இங்குள்ள பழுப்பு நிலக்கரியின் உதவியுடன் இந்த இரும்புக் கனியைக் கொண்டு உருக்குத் தொழிற்சாலை நடத்த முடியும் என்று சொன்ஞர்கள். ஆளுல் அதற்குப் பிறகு யாருக்கும் தெரியாமல் மேற்கு ஜெர்மனி நிபுணர் இங்கே வந்து அந்த இரும்புக் கனியைப் பரிசீலனை செய்துவிட்டுப் போஞர். கிழக்கு ஜெர்மனி நிபுணர் வந்து பார்த்து இங்கே உருக்குத் தொழிற்சாலை ஏற்படுத்த முடியும் என்று சொன்ன பிறகு ஏன் இவர் வந்தார்? இதில் என்ன தகராறு என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM: கிழக்குச் ஜெர்மனியர் தம் சொந்தக்காரர்கள் என்று கனம் அங்கத்தினர் ஸ்ரீ பழனிசாமி நினைக்கிருர். எனவே கிழக்கு ஜெர்மனி நிபுணர் இங்கே வந்துபோயிருக்கும்போது ஏன் மேற்கு ஜெர்மனி நிபுணர் இங்கே வரவேண்டுமென்று அவர் கேட்கலாம். (சிரிப்பு.) கிழக்கு ஜெர்மனி-மேற்கு ஜெர்மனித் தகராறை அவருக்கு விட்டு விடுவோம். இதுவரை கிழக்கு ஜெர்மனியிலிருந்து நிபுணர் யாரும் இங்கே வரவில்லை. இங்கே தொழிலை ஆரம்பிப்பதற்கான ஆலோசனைகள் சொல்லக் கூடிய நிபுணர்கள் யாராயிருந்தாலும் அவர்களை நாங்கள் ஏற்றுக் கொள்கிருேம். இங்கே தொழிற்சாலை உருவாக்குவதற்கான ஆலோசனைகள் சொல்லும் நிபுணராக ஸ்ரீ பழனிசாமியே வந்தாலும், அவர் கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்தவராக இருந்தாலும், நாங்கள் அவரை வரவேற்கத் தயாராயிருக்கிருேம். இனிமேல்தான் நிபுணர்கள் வரப்போகிருர்கள். இதுவரை வந்து போனவர்கள் மந்திரிகள். அவர்கள் என்ன சொல்ல முடியும்? அந்த இரும்புக் கனியை நான் பார்த்து சரியான அபிப்பிராயம் ஏதாவது சொல்ல முடியுமா? முடியாது. பல அரசியல்வாதிகள் இந்த விஷயங்களை தாங்களே முடிவு செய்துவிடலாம் என்று நினைக்கிருர்கள். தொழில் நிபுணர்கள் செய்ய வேண்டிய வேலை இது. இந்தச் சோதனையைப் பொறுத்தவரையில் நிபுணர்கள் போட்டி போட்டுக் கொண்டு, இந்த " இரும்புக் கனியைப் பயன்படுத்தித்

[Sri C. Subramaniam] [17th March 1960

தொழிற்சாலே ஆரம்பிக்க முடியும் என்பதை சோதனையில் நிருபித்துக் காட்டுகிறேம்" என்று முன்வந்தால், நமக்கு நல்லதுதான் இரண்டு பேர்களும் சோதனை செய்யட்டும்.

Sri M. KALYANASUNDARAM: இரண்டு பேர்களும் சோதனை பண்ணுவதில் ஆட்சேபணே இல்லே.

The Hon. Sri C. SUBRAMANIAM: ஆமாம் நமக்கு ஆட்சேபணே இல்லே. பொதுவாக பொதுத் துறை இப்படி இருக்கிறது. அடிப்படையான தொழில்கள் இரும்புத் தொழிலே அடிப்படையாகக் கொண்டு அமையவேண்டி இருக்கின்றன. அதற்கு முன்பு, பல தொழில்களைத் தனியார் துறையில் ஏற்படுத்த வேண்டிய அவசியமாகிறது.

Sri C. N. ANNADURAI: இந்த இரும்புத் தொழிற்சாலே மூன்ருவது திட்டத்தில் வந்துவிடுமா?

The Hon. Sri C. SUBRAMANIAM: இந்த லிக்னேட்டைக் கொண்டு அந்த இரும்பைப் பயன்படுத்த முடியுமா என்ற சோதனை வெற்றி பெற்ருல் இரும்புத் தொழிற்சாலே மூன்ருவது திட்டத்தில் வந்துவிடும்.

மற்றத் தொழில்கள் தனியார் துறையில் தான் ஏற்பட வேண்டியிருக்கின்றன. அதுதான் காங்கிரஸ் எடுத்திருக்கும் முடிவு. அந்தத் தொழில்களைப் பற்றி கனம் தொழில் அமைச்சர் விரிவாக எடுத்துச் சொன்னர். வெள்ளையர்கள் ஆட்சி இந்த நாட்டில் இருந்த வரையில் தனிப்பட்டவர்களின் தொழில்களும் வளர முடியவில்லே. பொதுத் துறைத் தொழில்களும் வளர முடியவில்லே. ஆனல் அவர்கள் ஆட்சியிலே, பம்பாயிலும் வங்காளத்திலும் தனிப்பட்டவர்கள் சில தொழில்களை ஏற்படுத்தினர்கள். எனவே, அந்த இரண்டு ராஜ்யங்களிலும் தொழில் துறையில் அதிகமான முன்னேற்றம் ஏற்பட்டது. அதற்குப் பொருப்பாளிகளாக இருக்கக்கூடியவர்களைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி விசாரிக்க வேண்டுமானல், வெள்ளையர்களைத் தான் அவ்வாறு நிறுத்தி விசாரிக்க வேண்டும். அதற்கான தைரியம் யாருக்கு இருக்குமோ எனக்குத் தெரியாது. நமது ராஜ்யத்திலும் தனியார் துறையில் முன்னேற்றம் ஏற்பட வேண்டும் என்று நாம் சொல்லும் போது ஒரு விஷயத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். வட நாட்டில் அதிலும் பம்பாயிலும் வங்காளத்திலும் இருக்கும் தனி முதலாளிக்கு இருக்கும் பொருளாதார சக்தியும் தொழில் ஆரம்பிக்க முன்வரும் தைரியமும் இங்குள்ள தனி முதலாளிக்கு இல்லே. காரணம் அவர்கள் தொழில் துறையில் நம்மைவிட முன்னேறியிருக்கிருர்கள். நமது ராஜ்யத்தையே எடுத்துக்கொள்வோம். கோயமுத்தூரிலுள்ள தனி முதலாளிக்கு இருக்கும் தைரியம் மற்றப் பகுதிகளில் உள்ள தனி முதலாளிகளுக்கு இல்லே. காரணம், வெள்ளையர் ஆட்சிக் காலத்திலேயே அங்கே தொழில் வளர்ச்சி ஏற்பட்டது. இது வட நாட்டு ஆதிக்கம் அல்ல. தென்னட்டில் தொழில்கள்

17th March 1960] [Sri C. Subramaniam]

ஏற்படுவதற்குத் தடையாக இருப்பது வடநாட்டு முதலாளிகள் தான் என்று பலர் நினைக்கின்றனர். அதுசரியல்ல. முக்கியமாக நாம் தனிப்பட்ட முதலாளிகளுக்கு இருக்கும் இயற்கையான சுபாவத்தை கவனிக்க வேண்டும். ஒரு தனி முதலாளி, இன்னொரு தொழில் இங்கே வந்துவிடும் என்று தெரிந்தால், அந்தத்தொழில் தன் தொழிலை பாதித்து விடுமோ என்று எண்ணி அந்தத் தொழில் வருவதற்குத் தடை போட முயற்சிக்கிறார். இதைக் கட்டுப்படுத்துவதற்கு நாங்கள் முயற்சி செய்கிறோம். அவர்களுக்குள்ள சுயநல எண்ணத்தின் காரணமாக அவர்கள் பிற தொழில் வளர்ச்சியை தடுக்க முயல்வதைக் கட்டுப் படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன், லைசென்ஸ் பெற்றுத்தான், பெர்மிட் பெற்றுத்தான் தொழில்கள் ஏற்படுத்த வேண்டும், பர்மிட் பெற்றவர்கள் பல வசதிகளைத் தொழிலாளர்களுக்குச் செய்து கொடுக்க வேண்டும் என்ற முறையில் எங்கள் கொள்கையை வகுத்துக் கொண்டிருக்கிறோம். இங்கே பல தொழில்கள் ஏற்பட வேண்டுமானால், தனியாருக்கு சர்க்காரே ஓரளவு ஊக்கமளித்தால் தான், உதவியளித்தால் தான, அவைகள் இங்கே உருவாகும். கனம் தொழில் அமைச்சர் விளக்கியது போல, அந்த உதவிகளை எந்தத் தொழில்களுக்கு அளிக்க வேண்டுமோ அந்தத் தொழில்களுக்கும், எந்த அளவுக்கு அளிக்க வேண்டுமோ அந்த அளவுக்கும் அளிக்கக்கூடிய முறையிலே சர்க்காரின் கொள்கை வகுக்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக, ஏற்கெனவே வெகு காலமாக நடந்துவரும் தொழிலாகிய நூல் நூற்கும் தொழிலைப் போன்ற தொழில்களுக்கும் சர்க்கார் உதவி அளிக்கப்படவேண்டியதில்லை. அதே போல, லைட் எஞ்சினியரிங் தொழில்களுக்கும் சர்க்கார் உதவ வேண்டாம். ஆனால், புதிய, அனுபவமில்லாத தொழில்கள் இங்கே வரவேண்டுமானால், அதற்கு தனிப்பட்டவர்களுக்கு ஊக்கமளித்துத் தான் ஆகவேண்டும். இந்த அடிப்படையில் சர்க்காரின் கொள்கை வகுக்கப்பட்டிருக்கிறது. இக் கொள்கையை, கனம் தொழில் அமைச்சர் கொடுத்துள்ள விளக்கத்திற்குப் பிறகு கனம் அங்கத்தினர்கள் பூரணமாக ஏற்றுக் கொள்வார்கள் என்று நமபுகிறேன். ஸ்ரீ அண்ணாதுரை, இங்கே சுதந்திரம் வருவதற்கு முன்பு வெள்ளையர்களுக்கு 200 கோடி ரூபாய் மூலதனம் இருந்தது என்றும் இப்போது அது 400 கோடி ரூபாயாக வளர்ந்திருக்கிறது என்றும் குறிப்பிட்டார். இன்று அவர்களுக்கு இங்கு இருக்கும் அந்த 400 கோடி ரூபாயை, இங்குள்ள நமது பொருளாதார நிலைமையுடனும், நமது நாட்டுத் தொழில்களின் நிலைமையுடனும் ஒப்பிட்டுப் பார்த்தால், அது ஒரு சிறு பகுதிதான் என்பது தெரியும். எனவே, அவர்களுடைய தொழில்கள், அவர்களுடைய மூலதனம் நம் நாட்டுப் பொருளாதாரத்தையோ நம் தொழில்களையோ பாதிக்காது. அவர்களும் இங்கு அவர்களுடைய தொழில்களை, நமது சட்டங்களையும், நாம் விதிக்கும் கட்டுப்பாடுகளையும் அனுசரித்துத்தான் நடத்த முடியும். இந்த நாட்டில் அன்று வெள்ளையர்களே ராஜாக்களாக இருந்தார்கள், அவர்களே, சட்டங்கள் போட்டுக் கொண்டிருந்தார்கள். இன்று நிலைமை அப்படி இல்லை. எனவே

வெள்ளையர் ஆட்சி இந்த நாட்டை விட்டுப்போன பிறகு நாம் இப்போது வெள்ளையர்களுக்கு இங்கே ஆதிக்கம் கொடுத்திருக்கிறோம் என்று சொல்வது சரியல்ல. தொழில்துறையில் ஒரு சிறு பகுதியை அவர்களுக்கு ஒதுக்குவதால் இந்த நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டு விடாது. வெள்ளையர்களே இந்த நாட்டில் ஆட்சி நடத்தியபோது நமது நாட்டுக்குப் பாதகம் ஏற்படவில்லை என்று நினைத்தவர்கள், இன்று அவர்களுக்கு தொழில் துறையில் சிறிதளவு இடம் கொடுப்பதால் நமது நாடு பாதிக்கப்படுகிறது என்று நினைப்பது எனக்கு ஆச்சரியத்தை உண்டு பண்ணுகிறது.

இன்றைக்கு இது மாதிரி பொதுத் துறை, தனியார் துறை இந்த இரண்டும் வளர வேண்டும் என்று நினைக்கும் போது எப்படி வளர முடியும் என்பதைப் பற்றியும் யோசனை செய்து பார்க்கவேண்டும். இன்று தொழில் வளரவேண்டுமென்று சொன்னால் அதிலே இன்றைக்கு நிலத்திலே கிடைப்பது போல் அறுவடையான உடன் பலன் கையில் கிடைப்பது போல உடனே கிடைத்து விடாது. 100 ரூபாய் போட்டால் விளைச்சலில் 200 ரூபாய் லாபம் கிடைக்கிறது என்ற காரியமல்ல. ஆனால் இன்றைக்குத் தொழிலில் மூலதனத்தைப் போட்டால் உடனே லாபத்தைப் பார்த்துவிட முடியாது. இன்றைக்கு நாம் இரும்புத் தொழிலை ஆரம்பித்துவிட வேண்டுமென்று சொன்னாலும் முதலில் 3, 4 வருஷங்களுக்குக் கோடிக் கணக்கான ரூபாயைச் செலவழித்துக் கொண்டே இருக்க வேண்டும். ஆகவே, இன்றைய தினம் பணவீக்கம் ஏற்படுகிறது என்பதற்கு காரணம் நாம் இன்றைய தினம் தொழில் வளத்தைப் பெருக்க செலவழித்துக் கொண்டே இருக்கிறோம். உற்பத்தி கிடையாது. இடைக் காலத்தில் இந்தப் பண வீக்கம் ஏற்பட்டு விடுகிறது. இந்தப் பண வீக்கம் ஏற்படுகிறது என்ற காரணத்திற்காக ஒன்றுமே வேண்டாம் என்று விட்டு விடலாமா என்று கேட்டால், அதன் காரணமாக நாம் தரித்திர நிலையிலேயே இருந்து கொண்டிருக்க வேண்டிய நிலைமைதான் ஏற்படும். பெரும் தொழில்களைத் தவிர்க்க முடியாது. பண வீக்கத்தின் வேகத்தைக் குறைப்பது பற்றி "ப்ரைஸ் பாலிஸி" பற்றிப் பேசும் போது குறிப்பிடுகிறேன். ஆனால் இன்றைக்கு இந்த அடிப்படையில்தான் தொழில் வளர்ச்சி ஏற்பட வேண்டும். அப்படி தொழில் இயந்திரங்களை வைத்து தொழிலைத் துவக்க வேண்டுமென்று சொன்னால் எத்தனை கோடிக்கணக்கான ரூபாய் கையில் இருந்தாலும் கூட தொழிலை உடனடியாக துவக்க முடியாது. இயந்திரங்கள் செய்யும் சக்தி நம்மிடம் இல்லை. பல தொழில்களுக்கு வேண்டிய இயந்திரங்களை அவர்களுக்குப் பிடித்திருக்கக் கூடிய ரஷ்யாவிலிருந்தும், இன்னும் பல தொழில்களுக்கு மற்றவர்களுக்குப் பிடித்திருக்கக் கூடிய அமெரிக்காவிலிருந்தும் வரவழைக்க வேண்டியிருக்கிறது. வெளியிலிருந்துதான் வந்தாக வேண்டும். இன்றைக்கு வெளி நாட்டு உதவி இயந்திரங்களைப் பெற அவசியமாக இருக்கிறது. எப்படி பெறுவது ? நாம் ரூபாய் கொடுத்து சரி செய்ய முடியாது.

17th March 1960] [Sri C. Subramaniam]

ஏதோ சில பொருள்களுக்கு உதவி செய்ய முன்வரலாம். இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமையில் நம்முடைய பொருளாதார வளர்ச்சி அந்நிய உதவியை அடிப்படையாகக் கொண்டுதான் வளர வேண்டியிருக்கிறது. நாம் அதை விரும்புகிற காரணத்தால் அல்ல, இது தவிர்க்க முடியாததாக இருக்கிறது. பணத்தைக் கொடுத்தோ பொருள்களைக் கொடுத்தோ வாங்குவது என்று சொன்னாலும் அந்த அளவுக்கு உற்பத்தியில்லை. அவர்களும் வாங்க நினைத்த சாமான்கள் எல்லாவற்றையும் வாங்கிவிடமாட்டார்கள். எந்த சாமானும் கையில் இல்லை. ஆகவே, இன்றைக்கு இந்த இயந்திர மூலதனங்களைக் கடனாகத் தர வேண்டுமென்ற ஒரு நேரடியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இவைகளை வாங்க சர்க்காருக்குச் சர்க்கார் உதவி செய்யக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதைச் சர்க்கார் ஏற்படுத்துகிற துறைகளுக்குப் பயன்படுத்துகிறோம். அமெரிக்காவிலிருந்து சர்க்காருக்குச் சர்க்கார் கடன் கொடுப்பதற்கு மேலாக தனிப்பட்டவர்களுக்குக் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். பல தனிப்பட்ட ஸ்தாபனங்களுக்குக் கொடுக்க முன்வருகிறார்கள். அமெரிக்காவிலிருந்து ஏதோ கயிறு கட்டி இழுக்கப் பார்க்கிறார்களோ என்று சொல்லப்படுவதையெல்லாம் கூட பரிசீலித்துப் பார்க்கவேண்டியதுதான். தனியார் துறையில் புதிய தொழில்களை ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லும்போது தனிப்பட்ட ஸ்தாபனங்களுக்கு வேறு நாடுகள் உதவி செய்யும்போது மறுக்க வேண்டிய அவசியம் இல்லை. இதில் ஏதாவது சூதுவாது இருக்குமா என்பது நமக்குத் தெரிந்த வரையில் நன்றாக ஆராய்ந்து பார்த்துவிட்டு அப்படி இல்லையென்றால் தனியார் துறையில் தொழில்களை ஆரம்பிக்க ஊக்குவிப்பதில் தவறு ஒன்றுமில்லை. இன்று அமெரிக்க உதவி கிடைக்கும்போது பின்னால் பார்த்துக் கொள்ளலாம் என்று இருந்துவிட்டால் அந்த உதவியை வேறு பக்கம் எடுத்துக் கொண்டுபோக தயாராக இருக்கிறார்கள். உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சொன்னால் மூலதனம் தேவையாக இருக்கிறது. நீங்களே பார்த்து மூலதனம் வரும்போது ஏற்பாடு செய்யுங்கள் என்று சொன்னால் அந்தச் சமயத்திலே நமக்கு உதவி கிடைக்காது. இது தொழில் மந்திரி தனியாக செய்த முடிவல்ல. சில பத்திரிகைகள் வரம்பை மீறி கற்பனை செய்து கொண்டு "வேண்டியவர்களுக்குக் கொடுக்கிறார்கள்" என்று எழுதுவது பத்திரிகா தர்மத்திற்கு ஏற்றதல்ல. அதிலே இவர்களுக்கு இருக்கும் பொறுப்பை விட எங்களுக்கு அதிகமாக இருக்கிறது. இந்த முடிவு நாட்டின் நலத்தை மனதில் கொண்டு எடுத்த முடிவு என்று சொல்ல விரும்புகிறேன். அது குற்றம் என்று சொன்னால் எந்த மன்றத்திலே வேண்டுமானாலும் கூண்டில் நின்று பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன். அதிலும் பொறுப்புள்ள அங்கத்தினர்கள் தயவு செய்து யாரோ வேண்டியவர்களுக்குச் செய்கிறோம் என்ற உணர்ச்சியை ஒதுக்கி வைத்துவிட வேண்டும். நமது நாடு முன்னேற்றமடைய தொழில்கள் பெருக வேண்டும். இன்றைக்கு இருக்கக் கூடிய தடைகள் என்னென்ன? புதிய தொழில்களை எப்படி ஆரம்பிப்பது என்ற அடிப்படையில்

[Sri C. Subramaniam] [17th March 1960

பரிசீலனை செய்து முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கும்போது கல்லை தூக்கிப் போட்டுக்கொண்டேயிருந்தால் கொஞ்ச காலத்தில் அவர்கள் கூட மனம் நொந்துவிடுவார்கள். இன்றைக்கு நாடு முன்னேற வேண்டுமென்றால் இந்த அடிப் படையில்தான் தொழில் வளர்ச்சி ஏற்பட முடியும் என்பதை நன்கு தெரிந்து கொள்ள வேண்டும். இன்றைக்கு உண்மையாக இருக்கக்கூடிய குற்றங்களை நேராகக் கேட்டால் எதற்கும் பதில் சொல்லத் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இன்றைக்கு நாட்டிலே தொழில் வளம் ஏற்பட வேண்டு மென்று சொன்னால் அதே சமயத்தில் விவசாய வளமும் ஏற்பட வேண்டும். தொழிலை மட்டும் வளர்ச்சி செய்துவிட முடியாது. மூலப் பொருள்களை மட்டும் உற்பத்தி செய்துவிட்டால் போதாது. வாங்குவதற்கு ஆள் இருந்தால்தான் தொழில் உற்பத்தியும் அதிகமாகும். வாங்கக்கூடிய சக்தி பரவலாக மக்களிடத்திலே ஏற்பட வேண்டும். இன்றைக்கு நம்முடைய நாட்டிலே இருக்கக்கூடிய மக்களின் பெரும்பான்மையான மக்கள் விவசாய மக்கள். அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர வேண்டும். அப்படியானால்தான் தொழில் நிலைத்திருக்க முடியும். மூலப் பொருள் உற்பத்தி ஒரு புறமிருக்க உணவு உற்பத்தி ஒரு புறம் வளர வேண்டும். அதற்காக எல்லாவித முயற்சிகளையும் செய்து வருகிறோம். பட்ஜெட் உரையில் 10 பக்கத்திற்கு மேலாக விவசாயத் துறைக்கு முதலிடம் கொடுத்த தற்குக் காரணம் இதுதான். விவசாயம் வளம் தொழிலில் வளம் பெருக அவசியமா ? என்று பலர் மேலாகப் பார்க்கும் போது நினைக்கிறார்கள். அதை வலியுறுத்தத்தான் விரிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்கள், " மலத்திற்குப் பெரிய இடம் கொடுத்திருக்கிறேன் " என்று சொன்னார்கள். நான் இரண்டு இடங்களில்தான் சொல்லி யிருக்கிறேன். கிராமப் புறங்களிலும் நகரப் புறங்களிலும் மல உரம் தயாரிப்பதைப் பற்றி இரண்டு இடங்களில் கூறியிருக் கிறேன். அவர்களுக்கு எப்படி 4 பக்கங்களில் காட்சி யளித்ததோ தெரியவில்லை. அவர்களுக்கிருக்கும் மொழித் திறமை காரணமாக இரண்டு பொருள் தரக்கூடிய விதத்தில் "மலத்திற்குள்ளேயே இறங்கி விட்டார்" என்று கூறினார். நானும் அவருடைய நிலைமைக்கும் கீழே இறங்கிச் சென்று இதை விடக் காரமாகப் பதில் சொல்ல முடியும். ஆனால் காரமாகப் பதில் சொல்ல விரும்பவில்லை. இன்றைக்கு இது மாதிரி விவசாய வளர்ச்சி ஏற்படுவது மட்டுமல்ல; நாட்டிலே இன்றைக்கு சமுதாய சக்திகள் எப்படி வளருகின்றன என்பதையும் பார்க்க வேண்டும். இன்றைக்குப் பொருளாதாரத் துறையைப் பார்க்கும்போது தொழில் துறையில் இருப்பவர்கள் சக்திதான் ஓங்கியிருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். இந்த நிலைமை நீடிக்கக் கூடாது. எந்த அளவுக்குத் தொழில் துறை அதிக மாகிறதோ அந்த அளவுக்கு விவசாயத் துறையும் வளர வேண்டும். இதை எப்படிச் செய்வது என்பதுதான் நாம் இன்றைக்கு யோசிக்க வேண்டியதாகும். ஒவ்வொருவர் பெரிய

பெரிய பாக்டரிகளை கட்டுகிறார்கள். அவர்கள் சொந்த சொத்தைப் போட்டா கட்டுகிறார்கள். பல பேரிடத்திலிருந்து பங்கு வசூலித்து பெரிய தொழில்களை நிறுவனம் செய்கிறார்கள். அப்போது சக்தி ஏற்படுகிறது. ஆனால் இன்றையதினம் விவசாயத் துறையை சுரண்டிக் கொண்டேயிருக்கிறது தொழில் துறை. இது வாழ்க்கையின் இயற்கை விதி. இதற்கு என்ன செய்வது என்பது பற்றித் தான் காங்கிரஸ் ஸ்தாபனம் விவசாயத் துறையைப் பற்றி வெகு கவனத்துடன் பரிசீலித்து வருகிறது. அமெரிக்காவில் இருக்கும் அனுபவத்தை எடுத்துப் பார்த்தால் அங்கு போல் தொழில் வளர்ச்சி வேறு எங்கும் ஏற்படவில்லை. சீக்கிரத்தில் அதை எட்டி விடுவோம் என்று ரஷ்யா சொல்லு கிறது. 10, 15 வருடங்களுக்கு முன்பு விஞ்ஞான துறையில் முன்னேற்றம் இருந்தாலும் கூட சமுதாயத் துறையில் விவசாயி களுடைய சக்தி குறைவாகத்தான் இருந்தது. எந்த விஷயத்தை எடுத்துக்கொண்டாலும், பெரும்பான்மையான விவசாயிகள் ஒன்றுசேர்ந்து, தாங்கள் விளைவிக்கும் பொருள்களை விற்பதாக இருந்தாலும் சரி, தாங்கள் விவசாயம் செய்வதற்கு தேவையான வெவ்வேறு பொருள்களை "ப்ராஸெஸ்" செய்வதாக இருந்தாலும் சரி, அவர்கள் பெரிய கூட்டுறவு ஸ்தாபனங்களை ஏற்படுத்திக் கொள்ளுவதன் மூலமாக, தொழில் துறையிலே பெருகியிருக்கக் கூடிய அளவுக்கு, விவசாயத் துறை யிலுங்கூட சக்தி பெருகிக் கொண்டு வருகிறது என்று சமீபத்தில் " Economist " என்னும் பத்திரிகையில் வந்த கட்டுரையிலே விளக்கப்பட்டிருக்கிறது. இந்த அடிப்படையிலேதான், தொழில் முதலாளிகளுடைய ஆதிக்கம் விவசாயத் துறையில் இருக்கக் கூடாது என்பதற்காகத்தான், விவசாயத் துறையிலே கூட்டுறவு முறையை நாம் அனுசரிக்கவேண்டுமென்ற கொள்கையை வகுத்துக் கொண்டிருக்கிறோம்.

இந்தக் கொள்கையை எதிர்க்கின்றவர்கள் யார் என்று நாம் பார்க்க வேண்டும். முதலில் யார் எதிர்க்க ஆரம்பித்தார்கள் ? தொழில் அதிபர்கள்தான் இதற்கு முதலிலே எதிர்ப்பு கூறியவர்கள். அவர்கள் விரும்புவது தங்களுடைய ஆதிக்கம் தான் தொடர்ந்து இருக்க வேண்டும் ; விவசாயத்திலே இருக்கும் பெரும்பான்மையான மக்களுடைய சக்தி வளரக்கூடாது; அவர்கள் உற்பத்தியைப் பெருக்கினாலுங்கூட, அவர்களுக்குச் சக்தி இருக்கக் கூடாது. சக்தி இல்லாமலேயே, பலவீனர்களாக இருந்தும், அவர்கள் உற்பத்தி செய்து வழங்கிக் கொண்டிருக்க வேண்டும் என்பதுதான்.

Sri M. KALYANASUNDARAM : அதுவும் மலிவான விலைக்குக் கொடுக்க வேண்டும்.

The Hon. Sri C. SUBRAMANIAM : ஆம். இதனால் விவசாயிகளுக்கு சக்தி இல்லாமல் இருப்பதோடு, தொழிலதிபர் கள் சொல்லும் அளவுக்கு, வியாபாரிகள் சொல்லும் அளவுக்கு விற்கக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. இதற்காகத்தான் கூட்டுறவை எதிர்க்கிறார்கள். தொழில் ஆதிக்கம் உள்ளவர்கள்

என்றைக்குமே விவசாயிகளைச் சுரண்டிக் கொண்டிருக்க வேண்டும், தொழிலதிபர்கள் சொல்லும் விலைக்குத்தான் விவசாயிகள் விற்க வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகத் தான் உண்மையிலேயே அவர்கள் எதிர்ப்பைத் தெரிவிக்கிறார்கள் என்பதை நாம் நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டும். இதற்கு எத்தனையோ விளக்கங்கள் கூறலாம். யார் வேண்டுமானாலும் விளக்கங்கள் கூறலாம். ராஜாஜி சொன்னாலும் சரி, வேறு யார் சொன்னாலும் சரி. அவர்கள் புரிந்துகொண்டு சொல்கிறார்களா, புரிந்து கொள்ளாமலே சொல்கிறார்களா என்று தெரியவில்லை. அந்த எதிர்ப்பு இந்த அடிப்படையில்தான் இருக்கிறது என்பதை நாம் நன்றாக உணர்ந்துகொள்ள வேண்டும். இன்றைக்கு அவர்கள் கூட்டுறவு பண்ணையை மட்டும் எதிர்க்கிறார்கள் என்று வைத்துக் கொள்ளாதீர்கள். அவர்கள், "கூட்டுறவே உருப்படாது; பல கோளாறுகள் இருக்கின்றன; லஞ்சப் புகார்கள் இருக்கின்றன" என்று சொல்லி, கூட்டுறவே வளராமல் இருக்க ஏற்பாடு செய்வதற்கு என்ன காரணம்? அதற்குப் பிரதிநிதியாக இங்கே உட்கார்ந்திருக்கிறார்களே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், தங்களை விவசாயி என்று சொல்லிக் கொள்ளக்கூடிய அவர்கள், இதைப் பற்றி கவனித்துப் பார்த்தாரா என்று தான் உங்கள் மூலமாக அவரைக் கேட்க விரும்புகிறேன். இன்னும் பெயர் மாற்றவில்லையென்றாலும், கவனித்துப் பார்ப்பார்கள் என்று நான் நினைக்கிறேன்.

Sri V. K. RAMASWAMY MUDALIYAR: Sir, I hope I will be given an opportunity to reply.

The Hon. Sri C. SUBRAMANIAM: ஆகையால், கூட்டுறவுக்கு இருக்கும் இந்த எதிர்ப்பினுடைய இரகசியத்தை நாம் நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டும். அவர்கள் சொல்வது "விவசாயிகளைக் காப்பாற்றுவதாக" என்று, "விவசாயிகளை படுகுழியிலே தள்ளப்போகிறார்கள்" என்ற அவர்களுடைய கருத்து எப்படியிருக்கிறதென்றால், "புலி வருகிறது, எங்கள் மேல் வந்துபடுத்துக் கொள்ளுங்கள்" என்று சொல்வதுபோல் இருக்கிறது என்பதை நான் இங்கே வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

கூட்டுறவு பண்ணைக்கு இருக்கும் ஒரு எதிர்ப்பு அல்ல, அவர்களுடையது. அடிப்படையாக, தத்வார்த்தமாக, யார் ஆதிக்கம் செலுத்தவேண்டும் என்ற முறையிலே இருக்கும் ஒரு போராட்டம் என்பதைத்தான் இன்றைக்கு முக்கியமாக விவசாயப் பெருமக்களுக்கு நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். சின்ன விவசாயிகள் இருக்கட்டும். அவர்களைவிட முக்கியமாக விவசாயப் பெருமக்கள் போய் அதில் சேருகிறார்களே (!) அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மக்களுக்கு அறிவு வளர்ச்சி இல்லாமல், மற்ற சௌகரியங்கள் இல்லாமல் எந்த வளர்ச்சியும் ஏற்பட முடியாது. அதற்கு அனுசரணையாகத்தான் படிப்பு வசதி, சுகாதார வசதி, தொழில்

17th March 1960] [Sri C. Subramaniam]

வளர்ச்சி, விவசாய வளர்ச்சி, இவைகளையெல்லாம் செய்வதற்குப் பெருவாரியான முறையிலே முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறோம். இதெல்லாம் இணைக்கப்பட்ட திட்டமாக, முதல் ஐந்தாண்டுத் திட்டம், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் என்ற முறையிலே படிப்படியாக நாம் இன்றைக்குப் பணியாற்றிக் கொண்டு செல்கிறோம். இதிலே பல எதிர்ப்புகள் வருவது சகஜம். ஆனால் நம்முடைய குறிக்கோள் மட்டும் சரியாக இருக்குமானால், என்ன எதிர்ப்புகள் வந்தாலும், அவைகளைச் சமாளித்துக்கொண்டு, நம்முடைய குறிக்கோளை அடைந்துவிட முடியும். அதற்கு இங்கே எல்லாக் கட்சியைச் சார்ந்த கனம் அங்கத்தினர்களும், உண்மையாகவே பொதுமக்களிடத்தில் அக்கரை கொண்ட எல்லோரும், இதிலே ஒத்துழைக்க வேண்டுமென்ற கருத்தைத்தான் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நான் முன்பே குறிப்பிட்டேன்—பெரும் தொழில்கள் ஆரம்பித்து, பெரும் அணைகள் கட்ட ஆரம்பித்து, மின்சார நிலையம் கட்ட ஆரம்பித்து, செலவு மட்டும் செய்து, அதன் மூலமாக உற்பத்தி உடனடியாக ஆகாமல் இருக்கும்போது, பணவீக்கம் ஏற்படுகிறது என்று. இதற்காக என்ன செய்வது என்பதுதான் முக்கியமான கேள்வி. இதை அடிப்படையாக வைத்துக்கொண்டு, விலைவாசிக் கொள்கையையும் நாம் இன்றைக்கு உருவாக்க வேண்டியதாக இருக்கிறது. விலை வாசியைக் கட்டுப்படுத்த நாங்கள் எடுத்த முயற்சிகள் தோல்வி அடைந்துவிட்டன என்பதை நான் உடனடியாக ஒப்புக்கொள் வதற்குத் தயாராய் இருக்கிறேன். கொள்கை கூட தெளிவாக இல்லை என்பதை ஒப்புக் கொள்ளவும் தயாராக இருக்கிறேன். ஆனால், அந்தக் கொள்கை எப்படி உருவாக முடியும் என்பதையும் நாம் சிறிது ஆலோசித்துப் பார்க்கவேண்டும். யாரோ மேலே இருக்கின்றவர்கள் மட்டும் யோசித்துச் செய்யக்கூடிய காரியம் அல்ல இது; பல்வேறு சக்திகள் வெவ்வேறு ரூபத்திலே தோன்றி "விலைக் கட்டுப்பாட்டினால் மக்கள் சுதந்திரம் பறி போய்விடும்" என்ற உண்மையை அறியாது பேசுபவர்கள் பலர் இருப்பதால், பொது மக்கள் என்ன நினைக்கிறார்கள்? விலைக்கட்டுப்பாடு வந்தால் நம்மை சிறையில் போட்டு விடுவார்களோ என்று பொதுமக்களிடத்திலே அபிப்பிராயம் நிலவி வருகிறது. ஆகவே இன்றைக்கு கனம் அங்கத்தினர் மட்டுமல்ல; பொது மக்களும் நன்றாக உணர வேண்டும். திட்டமிட்டு நாம் முன்னேற வேண்டியது அவசியம் என்றால், பெருந் தொழில்கள் நம் நாட்டிலே வளர வேண்டியது அவசியம் என்றால், இடையிலே வரும் விளைவுகளையும் தவிர்ப்பதற்கில்லை: அந்த அளவுக்குக் கட்டுப்பாடு ஏற்படுத்தித் தான் ஆக வேண்டும். முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலும் நாம் இது விஷயத்தில் ஓரளவு வெற்றி யடையாமலிருந்தாலும், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத் திலாவது நாம் வெற்றியடையவேண்டுமென்றால், நம் மக்களிடையே இதிலே தெளிவு ஏற்பட்டால்தான் முடியும்.

விலைக் கட்டுப்பாடு ஏற்படுவதில் முக்கியமான பிரச்னை என்ன என்பதை யோசிக்க வேண்டும். ஒன்று—நிர்வாக இயந்திரம் தகுந்ததாக இல்லை இதை நிறைவேற்றுவதற்கு. வெவ்வேறு விஷயங்களுக்காக அமைக்கப்பட்ட நிர்வாக இயந்திரம் ஆதலால், விலைக் கட்டுப்பாடு வரும்போது பல கோளாறுகள் ஏற்படுகின்றன என்று சொல்கிறார்கள். கோளாறுகள் ஏற்பட்டதெல்லாம் நமக்குத் தெரியும். முன்பு ஏற்பட்ட கோளாறுகளின் காரணமாக, மக்களிடத்திலே ஒரு பீதி ஏற்படுகிறது. விலைக் கட்டுப்பாடு வந்தால் பழைய நாற்றம் எடுத்த அரிசி வந்துவிடுமோ என்று. அதெல்லாம் அவர்கள் நினைவுக்கு வந்துவிடுகிறது. அதுவும் தவிர, இந்த நினைவை அதிகப் படுத்தும் வகையிலே, மற்ற அரசியல் கட்சியினரும், " கட்டுப்பாடு என்கிறார்களே, நாற்றம் பிடித்த அரிசிதான் வரப் போகிறது " என்று வெகு சுலபமாக அவர்களிடம் சொல்லி விடுகிறார்கள். ஆகையால் தான், இன்றைக்கு தலைவர்கள் உணருவதைவிட, இங்கேயிருக்கும் நாம் உணருவதைவிட, பொது மக்களும் இது எவ்வளவு அடிப்படையான பிரச்னை என்பதை உணர்ந்து, அதை நல்ல முறையிலே, நடை முறையிலே செயல்படுத்துவதற்கு அவர்கள் உதவி செய்ய வேண்டியது மிகவும் அவசியம் என்ற காரணத்தினாலே தான் இந்த பட்ஜெட் உரையில் நான் குறிப்பிட்டேன். காரணம் இல்லாமல் விலைவாசிப் பிரச்னையை இதில் நான் கொண்டுவரவில்லை. ஏனென்றால், நாம் மட்டும் எடுக்கக் கூடிய முடிவு அல்ல தேசீய அடிப்படையிலே, பொதுவாக எல்லோரும் சேர்ந்து எடுக்கக் கூடிய முடிவாகும். ஆகையால், மக்களுடைய அபிப்பிராயத்தை இதற்குச் சாதகமாக திருப்ப வேண்டியது அவசியம். அதை இங்கிருக்கும் கனம் அங்கத்தினர்கள் உணர வேண்டும்; பொது மக்களும் உணர வேண்டும் என்ற அடிப்படையிலேதான் இந்தப் பிரச்னையையும் கொண்டுவந்தேன். பிரச்னையிலிருக்கும் முக்கியமான சிக்கலைப் பொதுமக்களும் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதனால்தான் உங்கள் முன்னிலையில் இதை வைத்திருக்கிறேன். உடனடியாக யாரும் அதற்கு யோசனை சொல்லிவிடமுடியும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. இது முக்கியமான பிரச்னை என்பதை எல்லோரும் உணர வேண்டும் என்ற அடிப்படையிலேதான் இந்தச் சபை முன்னால் இதைச் சமர்ப்பித்திருக்கிறேன்.

கொள்கை அளவிலே, வரிக் கொள்கையைப் பற்றி கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது, " வரிமயமாக இருக்கிறது " என்று குறிப்பிட்டார்கள். எதிர்க் கட்சித் தலைவர் திரு. வி. கே ராமசாமி முதலியார் அவர்கள் " இனிமேல் போடுவதற்கு என்ன பாக்கியிருக்கிறது ? எல்லாம் போட்டாய்விட்டதே " என்றார்கள். இன்றைக்குக் கொஞ்சம் யோசித்துப் பார்க்க வேண்டும். பெரிய அபிவிருத்தி ஏற்பட வேண்டுமென்று நாம் எல்லோரும் நினைக்கிறோம். அப்படி நினைக்கும்போது, பெரும் தொழில்கள், பெரும் திட்டங்கள் நிறைவேற வேண்டுமானால், அதற்கு சமுதாயத்திலே சேமிப்பு

17th March 1960] [Sri C. Subramaniam]

ஏற்படவேண்டும். சமூதாயத்தில் சேமிப்பு ஏற்படுவதன் மூலமாகத்தான் இந்த திட்டங்களை நிறைவேற்ற முடியும். இது தவிர, மந்திரம் எதுவும் கிடையாது. தொழிலாளர்களைச் சுரண்டி, பட்டினிப் போட்டு சேமிப்பை ஏற்படுத்தினார்கள் ரஷ்யாவிலே. டோடாலிடேரியன் முறையிலே மக்கள் இதைத் தான் சாப்பிட வேண்டும், இதைத்தான் உடுக்க வேண்டும், இங்கு தான் வசிக்க வேண்டும், அதற்கு மேலே ஒன்றும் பண்ண முடியாது என்ற முறையிலே அவர்கள் சேமிப்பை உண்டாக்கினார்கள். இன்ன விலைக்கு விற்க வேண்டும் என்று நிர்ணயித்து அந்த அடிப்படையிலே அங்கு அவர்கள் சேமிப்பை வளர்த்தார்கள். கம்யூனிஸ்டு அடிப்படையில் அமைந்த அரசாங்கமாக இருந்தாலும் வேறு எந்த அரசாங்கமாக இருந்தாலும் சரி, சேமிப்பு இல்லாமல் எந்த நாடும் முன்னேற்றம் அடைவது என்பது முடியவே முடியாத காரியம். அப்படிப்பட்ட சேமிப்பு பரவலாக ஏற்பட வேண்டியதாக இருக்கிறது. பணக்காரர்கள் மட்டுமல்ல ஏழைகளும்கூட, தொழிலாளர்களும்கூட அதிலே பங்கெடுத்துக் கொள்ளவேண்டியது அவசியம். அந்த முறையிலே பெரும் சேமிப்பை ஏற்படுத்த முடியும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அந்த அடிப்படையில்தான் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே வரி போடுவது என்றால் அதைப் பற்றி முதலிலேயே தீர்மானம் பண்ண வேண்டியது நமக்குத் திட்டம் அவசியமா இல்லையா என்பது. திட்டம் அவசியம் என்ற ஏற்பட்ட பிற்பாடு, எந்த எந்த முறையிலே, எதிலிருந்து பணத்தைச் சேகரிக்க முடியும் என்பதை இரண்டாவதாக முடிவு செய்ய வேண்டியதாக இருக்கிறது. திட்டம் வேண்டுமென்ற முதல் முடிவுக்கு வரும்போது, பணச் சேமிப்பை எப்படி உண்டாக்குவது என்பதைப் பற்றி அடுத்து முடிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம். அவ்வாறு பார்க்கும்போது வரி மூலமாக இது மாதிரி செய்வது ஜனநாயகத்துக்குப் புறம்பானது அல்ல, இதுதான் ஜனநாயக முறை என்பதை தெரிந்துகொள்ள வேண்டும். கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் அவர்கள், "அவ்வாறு வேண்டாம்; கம்யூனிஸ்டு கொள்கையை அனுசரியுங்கள்" என்று யோசனை சொல்கிறார்களோ என்னவோ தெரியவில்லை. திரு. ராமசாமி முதலியார் அவர்கள், "அமெரிக்காவிலே பண்ணுகிற மாதிரி தொழிலாளர்ச் சட்டம் வேண்டாம்; இவ்வளவுதான் சம்பளம் கொடுத்தாக வேண்டுமென்ற நிர்ப்பந்தம் எதற்கு? அவர்கள் பட்டினியாக இருக்கட்டும்; வேலை செய்து செத்தால் சாகட்டும்; இன்னொருவனைக் கொண்டு தொழில் நடக்கட்டும்" என்று சொல்கிறார்களா என்று பார்க்க வேண்டும். இன்றைக்கு வரி என்று சொல்லுவது மந்திரிகளுக்காக அல்ல, அல்லது பெரும் நிர்வாகத்திற்கு மட்டும் அல்ல. "எகனமிக் கிளாஸிபிகேஷன்" என்று உங்கள் கையில் கொடுத்திருப்பதை நல்ல முறையில் ஆராய்ந்து பரிசீலனை செய்து பார்த்தால் நன்கு தெரியும். வரி போடுவதன் மூலம்தான் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் முதலீடு செய்வதற்கு கோடிக் கணக்கான ரூபாய் கிடைத்திருக்கிறது. மாயா மந்திரத்தினால் ஒன்றும் அவ்வளவு பணம் வந்து விடவில்லை. நாம் எடுத்துக்கொண்ட முயற்சியின் காரணமாகத்

12 00 p.m.

[Sri C. Subramaniam] [17th March 1960

தான் இம்மாதிரி 180 கோடி ரூபாய் அளவுக்கு திட்டங்களை போட்டு நிறைவேற்ற முடிந்தது என்பதை நன்ருக தெரிந்து கொள்ள முடியும். பரவலாக கல்வி, சுகாதாரம், குடி தண்ணீர் போன்ற வசதிகளை செய்துக் கொடுக்கவேண்டுமென்ருல் வரி மூலம் பணத்தை சேகரித்துத்தான் செய்துக் கொடுக்க முடியும் என்பதையும் நன்ருக உணர வேண்டும். ஆகையால்தான் இந்த வரிக் கொள்கையைப் பற்றி நாம் திட்ட வட்டமாக இருக்க வேண்டியது அவசியம். கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். திரு. கலியாணசுந்தரம் அவர்கள் சொல்லலாம் " இந்தப் பக்கத்தில் வரிபோடவேண்டாம், இன்னெரு பக்கத்தில் வரி போடுங்கள் " என்று. அம்மாதிரி வரி போடும் துறையில் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். அது விஷயங்களை எப்படி பார்க்கிருேம், எந்த அளவுக்கு நமக்கு விஷயங்கள் தெரிந்திருக்கின்றன. அந்த விஷயங்களை எப்படி புரிந்து கொண்டிருக்கிருேம் என்பதைப்" பொறுத்து இருக்கிறது. ஆனுல் வரி போடுவதை தவிர்க்க முடியாது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தப் படியாக பல்வேறு முறையில் சேமிப்பு ஏற்படுத்தலாம். கடன்கள் வாங்குவதன் மூலம் ஏற்படுத்தலாம். பிராவிடண்டு பண்டு தொழிலாளர்களின் நன்மைக்காக என்று சொல்லுகிருேம், அதன் மூலம் ஒரு சேமிப்பு ஏற்பட்டு பல தொழில்களை ஏற்படுத்தி பல திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அதிலிருந்து வசதி இருக்கிறது. இன்ஷுரன்ஸ் மக்களுடைய நன்மைக்காக என்று சொல்லுகிருேம். அதுவும் ஒரு சேமிப்பு. அதனுல் மக்களுக்கும் நன்மை ஏற்படுகிறது. அதே சமயத்தில் அதன் மூலம் தொழில் வளர்ச்சி ஏற்படுகிறது. சேமிப்பு வரிகளின் மூலம் பணத்தை சேகரித்து திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். இன்றும் சரி, கடந்த காலத்திலும் சரி எந்தத் துறையின் மூலம் அதை எப்படிச் செய்வது என்பதைப் பொறுத்துத் தான் நாம் இன்றைக்கு யோசிக்க வேண்டியதாக இருக்கிறது. அந்த அடிப்படையிலே பார்க்கும்பொழுது அண்ணுதுரை அவர்கள் விற்பனை வரியின் மூலம் 15 கோடி ரூபாய் வருகிறது. மக்களுக்கு எவ்வளவு பளு வைத்துவிட்டீர்கள் என்று சொன்னுர். இதைக் கொஞ்சம் யோசித்துப் பார்க்க வேண்டும். விற்பனை வரி எந்த அடிப்படையில் வசூல் செய்யப்படுகிறது ? யார் பெரிய கடைகளில் போய் வாங்குகிருர்கள் ? 10,000 ரூபாய்க்கு மேல் மேல் வியாபாரம் செய்பவர்கள்தான் வரி கொடுக்கிருர்கள். அவைகள் தான் பெரிய கடைகள். அம்மாதிரி பெரிய கடைகளில் சாமான்களை வாங்குகிறவர்கள் தான் வரியை செலுத்துகிருர்கள். அதே மாதிரி 10,000 ரூபாய்க்கு மேல் விற்பனை ஆகக்கூடிய கடைகள் எங்கே இருக்கின்றன ? நகரங்களில்தான். கிராமங்களிலிருந்து வருபவர்கள் அங்கு வாங்குவதில்லையா என்று சொன்னுல்—நானும் கிராமத்தில் வளர்ந்து வாழ்ந்தவன். எனக்குத் தெரியும்—என்னைப் போன்று சௌகரியமாக இருக்கக் கூடியவர்கள் நகர் புறத்திலுள்ள கடைகளில் வந்து வாங்கக்கூடும். ஆனுல் கிராமங்களில் இருக்கக்கூடிய ஏழை மக்களும், மற்றவர்களுக்கு வாங்கக்கூடிய பொருள்கள்

17th March 1960] [Sri C. Subramaniam]

மிகவும் குறைவு. வருஷத்தில் அவர்களுக்கு சராசரி வருமானம் 250 ரூபாய் என்று சொன்னால் அவர்கள் வருஷத்தில் வாங்கக்கூடிய பொருள்களுக்காக செலவழிக்கக் கூடியது 20, 30 ரூபாய் அளவுக்குத்தான். அதில் 20, 30 நயா பைசா அவர்கள் வாங்கக்கூடிய பொருள்களுக்கு வரி போட்டு வாங்குகிறோம். அதைவிட வசதி உள்ளவர்கள், அதிகமாக பொருள்களை வாங்குகின்றவர்கள் அதிகமாக வரி கொடுக்கிறார்கள். அதற்கு மேலே "லக்ஸரி ஆர்டிகில்ஸ்" இருக்கின்றன. இன்னும் அதிகப் பண வசதி உள்ளவர்கள் அந்தப் பொருள்களை வாங்கும்பொழுது 1 சதவிகிதம் 2 சத விகிதம் என்று இல்லாமல் 7 சத விகிதம், 8 சத விகிதம் என்று வரி விதித்திருக்கிறோம். ஆகையினாலே தரத்திற்கு தகுந்த மாதிரி ஒவ்வொருவரும் விற்பனைவரி செலுத்துவதற்கு ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. ஆகையினால் "மோஸ்டு ஈகுவிடபிள் டாக்ஸ்" (most equitable tax) என்று சொல்வார்களே, அதுதான் விற்பனைவரி.

(Sri K. Sattanatha Karayalar in the Chair.)

நான் சொல்லுவது மட்டுமல்ல உலகத்திலிருக்கக்கூடிய எல்லா நிபுணர்களும் இதை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். இதன் காரணமாக அதை நாங்களும் பின்பற்றியிருக்கிறோம். இதிலே அதிகமாக ஏழைகளுக்கு வரி போட்டுவிட்டார்கள் என்று சொல்லுவது நிலைமையை மூடிவைத்துவிட்டு வெறுமனே அரசியல் பிரசாரத்திற்காக வேண்டுமானால் சொல்லலாம். இன்னொரு முறையில்கூட வாங்கக்கூடாதா என்று சொல்லலாம். கள்ளுக்கடை வைத்தால் 15 கோடி ரூபாய் வாங்கலாமே என்று சொல்லலாம். அதில் சந்தேகம் கிடையாது. வாங்கலாம். ஆனால் . . .

Sri A. Govindasamy: நாங்கள் சொல்லவில்லை.

The Hon. Sri C. Subramaniam: நீங்கள் சொல்லாமல் இருக்கலாம். சொல்லுகிறவர்கள் இருக்கிறார்கள். அப்பொழுது அந்த வரி போடுவதற்கு யாரும் ஆட்சேபணை செய்ய வில்லை. இப்பொழுது இந்த வரிக்கு ஆட்சேபணை செய்பவர்கள் அப்பொழுது கள்ளுக்கடை வரிக்கு ஆட்சேபணை செய்ய வில்லையே? அந்த வரியை செலுத்திக்கொண்டிருந்தவர்கள் ஏழைகள். அப்பொழுது ஏழைகள் கள்ளைக் குடித்துவிட்டு வரியை செலுத்திக்கொண்டு கஷ்டப்பட்டார்கள். உண்மை யாக அப்பொழுது ஏழைகள் மட்டும் இந்த வரியை செலுத்திக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது அதை ஆட்சேபிக்கவில்லை. விற்பனை வரியைப் பொறுத்தவரையில், அது "ஈகுவிடபிள் டாக்ஸ்". அவரவர்களுடைய தகுதியின் பிரகாரம் வரி கொடுக்கக்கூடிய நிலைமையில் விற்பனை வரி அமைந்திருக்கிறது. இந்த வரி ஏழைகளைப் போட்டு வாட்டுகிறது என்று யாராவது சொல்லுவார்களானால், வெறும் அரசியல் பிரசாரத்திற்கு

வேண்டுமானுல் அம்மாதிரி சொல்லலாம். கொள்கையில் இருக்கக்கூடியதுபற்றி என்னுல் இயன்றவரை விளக்கம் கொடுத்திருக்கிறேன்.

அடுத்தபடியாக, நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் பல குறைகள் இங்கே எடுத்துச் சொல்லப்பட்டன. நிர்வாக இயந்திரம் சரியாக இயங்கியிருக்கிறதா, இல்லையா என்பதுபற்றி பொதுவாக நாம் பார்க்கவேண்டும். நாம் எடுத்துக்கொண்ட திட்டங்களை எந்த அளவுக்கு நிறைவேற்றியிருக்கிருேம் என்பதை வைத்துக்கொண்டுதான் இதை அளவிடவேண்டியிருக்கிறது. அப்படி அளவிடும்போது 152 கோடி ரூபாய்க்கு போடப்பட்ட திட்டம் இப்பொழுது 181 கோடி ரூபாய் அளவுக்கு நிறைவேற்றப்பட்டிருக்கிறது. ஆகையினுல், மொத்தமாக பார்க்கும் பொழுது நாம் எதிர்பார்த்ததற்கு மேலேயே இந்த நிர்வாக இயந்திரம் திட்டத்தை நிறைவேற்றியிருக்கிறது என்பதை நாம் ஒப்புக்கொண்டாகவேண்டும். ஒரு மோட்டார் வாகனம் இருக்கிறது என்று வைத்துக்கொண்டால் ஒரு சமயம் டையர் பஞ்சராகிவிடுகிறது. இன்னெரு சமயம் பர்ஸ்டாகிவிடுகிறது. இன்னெரு சமயம் பெட்ரோல் அடைத்துக்கொள்ளுகிறது. ஆனுல் பொதுவாக பார்க்கும்பொழுது அந்த மோட்டார் நமக்கு உபயோகப்படுகிறதா என்றுதான் பார்க்கவேண்டும். அவ்வப்பொழுது சில கோளாறுகள் ஏற்பட்டாலும்கூட, இந்த மோட்டாரை நம்பி நாம் ஒரு இடத்திற்கு பிரயாணம் போகலாம் என்று பொதுவாகச் சொல்லலாம். அதேமாதிரிதான் நிர்வாக இயந்திரமும். எப்பொழுதோ ஒரு சமயம் ஒரு பஞ்சர் ஏற்பட்டுவிட்டது, அல்லது பெட்ரோல் அடைத்துக்கொண்டுவிட்டது என்ற காரணத்திற்காக அந்தக் " காரையே " எடுக்கக்கூடாது என்று நினைத்தால், அதை உபயோகப்படுத்தவே முடியாது. அம்மாதிரி பார்க்கும்பொழுது நிர்வாக இயந்திரத்தில் அங்கு ஒரு ஓட்டை, இங்கு ஒரு குறை என்று இருந்தாலும் கூட, பொதுவாக எடுத்துக்கொண்ட திட்டங்களையெல்லாம் நிறைவேற்றுவதற்கு நிர்வாக இயந்திரம் பயன்பட்டதா என்று பார்க்கவேண்டும். அப்படிப் பார்க்கும்பொழுது பொதுவாக திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நிர்வாக இயந்திரம் பயன் பட்டதல்லாமல், எதிர்பார்த்த அளவுக்கு அதிகமாகவே நல்ல முறையில் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நிர்வாக இயந்திரம் பயன்பட்டிருக்கிறது என்பதைத்தான் பாராட்டவேண்டும் என்ற கருத்தை நான் குறிப்பிட்டிருக்கிறேன். குறைகள் இருக்கலாம். அவைகளை நீக்கவேண்டியது அவசியம். அப்படி நிர்வாக இயந்திரத்திலே இருக்கக்கூடிய முக்கியமான குறைகள் என்ன என்பதைப் பற்றித்தான் யோசிக்கவேண்டும். அந்தக் காலத்தில் மக்களுக்கு அரசாங்கம் இருந்தது வரி வசூல் செய்வதற்காகவும், இங்கு நிலைமையை பாதுகாப்பதற்காகவும். ஆனுல், இன்றைக்கு சர்க்கார் சமுதாய வளர்ச்சிக்கு பல தொழில்களை ஏற்படுத்த வேண்டும். பல பணிகளை ஏற்று நடத்தவேண்டும். தனிப்பட்டவர்கள் செய்து கொண்டிருந்த பணிகளை நாமும் ஏற்று மக்களுக்கு வேண்டிய வசதிகளை செய்து கொடுக்க

17th March 1960] [Sri C. Subramaniam]

வேண்டியிருக்கிறது : அதற்குத் தகுந்தவாறு நிர்வாக இயந்திரத்தை மாற்றி அமைத்துக்கொள்ளுவது மிகவும் அவசியமாக இருக்கிறது. இன்றைய நிலைமைக்கு ஏற்ப நிர்வாக இயந்திரம் மாற்றி அமைக்கப்பட்டால்தான் திட்டங்களை சரிவர நிறைவேற்ற முடியும். சாதாரண ராட்டையில் 4 சிட்டங்கள்தான் நூற்கலாம். 12 சிட்டங்கள் நூற்க வேண்டுமானால் அம்பர் ராட்டைக்குத்தான் மாற்றிக்கொள்ளவேண்டும். மேலும் பெரிய அளவுக்கு நூற்க வேண்டுமானால், "மெஷினை" செய்துதான் ஆக வேண்டும். சாதாரண ராட்டையின் மூலமே 12 சிட்டம் நூற்க வேண்டும் என்று நினைத்தால் அது முடியாத காரியம். இன்றைக்கு நாம் புதிய பணிகளை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று நினைக்கும் பொழுது, பெரிய பணிகளை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று நினைக்கும்பொழுது அதற்கான மாறுதல்களை செய்துதான் ஆக வேண்டும்.

நாம் ஏற்றுக்கொண்டிருக்கிற பணிகளை அனுசரித்து நிர்வாக இயந்திரத்தை புதுப்பிக்கவேண்டும், நம்முடைய நடைமுறை விதிகளை மாற்றி அமைக்கவேண்டும் என்ற கருத்தைத்தான் தெரிவித்திருக்கிறேன். இந்த நிர்வாக இயந்திரத்தில் கோளாறு வராமல் வைத்துக்கொள்ளுவது மிகவும் அவசியம்.

என்.ஜி.-ஓக்களுக்கு இருக்கக்கூடிய குறைகளை கனம் அண்ணாதுரை போன்றவர்கள் எடுத்துச்சொல்லித்தான் எங்களுக்கு தெரியவேண்டுமென்பதில்லை. வீட்டிலிருக்கக்கூடிய தாய்க்கு தன்னுடைய குழந்தைகளுக்கு என்ன வேண்டுமென்பது நன்றாகத் தெரியும். இருந்தாலும்கூட, குடும்பத்தில் இருக்கக்கூடிய வசதியை வைத்துக்கொண்டுதான், அதுவும் குடும்ப வளர்ச்சிக்கு எந்த அளவு பணம் ஒதுக்கவேண்டும் என்பதையும் வைத்துக்கொண்டுதான் இது விஷயத்தில் முடிவு செய்யப்பட வேண்டும். "ஏதோ குழந்தைகள் கேட்கிற மிட்டாயை தாய் வாங்கிக்கொடுக்கவில்லை, ஆகையால் அவள் தாயல்ல" என்று வெகு சுலபமாக சொல்லிவிடலாம். விஷயம் தெரியாமலல்ல. சொல்லுவது வெகு சுலபம். அதிருப்தியும், மனக்கசப்பையும் மக்களிடையே புகுத்துவது வெகு சுலபம். அதன் மூலம் நிர்வாக இயந்திரம் பாதிக்கப்படுமானால், அந்த அளவுக்கு நம் வளர்ச்சி தடைபடும் என்பதையும், அவர்களுக்கு கிடைக்கக்கூடிய ஊதிய உயர்வுக்கான வசதியை ஏற்படுத்துவதில் இன்னும் குறைவு ஏற்படலாம் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். என்.ஜி.-ஓக்களுடைய குறைகளை நீக்கவேண்டுமென்ற அடிப்படையில்தான் சம்பளக் கமிஷன் நியமிக்கப்பட்டிருக்கிறது. ஆக்கப் பொறுத்தாலும் ஆறப் பொறுக்கமாட்டார்கள் என்ற பழமொழி சொல்லுவது வழக்கம். அதுபோல் இருக்கக் கூடாது. பே கமிஷனின் அறிக்கை வர இருக்கிறது. அந்த அறிக்கை வந்தவுடன் அதைப் பரிசீலனை செய்து அந்த அடிப்படையில் எவ்வளவு நிவாரணம் கொடுக்க முடியுமோ அவ்வளவு நிவாரணம் அளிக்கப்படும் என்று நான் முன்னமேயே உறுதி அளித்திருக்கிறேன். அதுதான் சர்க்கார் கொள்கை என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[Sri C. Subramaniam] [17th March 1960

(Deputy Speaker in the Chair.)

இம்மாதிரி திட்டங்களை நாம் 152 கோடி ரூபாய் அளவிலிருந்து 181 கோடி ரூபாய் அளவுக்கு செய்திருந்தாலும்கூட, சில திட்டங்களில் குறைவு ஏற்பட்டிருக்கிறதே, இதில் மக்களை ஏமாறச்செய்து விட்டீர்களே என்ற கேள்வியை அண்ணுதுரை அவர்கள் கேட்டார். வாஸ்தவம்தான். கணக்குப்பார்க்கும் பொழுது சில இனங்களில் குறைவு ஏற்பட்டிருக்கலாம். சில துறைகளில் உண்மையிலேயே திட்டம் போட்ட அளவுக்கு குறைவு ஏற்பட்டிருக்கலாம். ஆனுல் எல்லா துறைகளிலும் போட்ட அளவுப்படி நிறைவேற்றுவிட்டாலும், மொத்தமாக பார்க்கும்பொழுது எதிர்பார்த்த அளவுக்கு மேலேயே நிறைவேற்றியிருக்கிறேம். எல்லா துறைகளிலும் போட்ட அளவைவிட அதிகமாக உயர்வு காணவேண்டுமென்ருல், இந்த 181 கோடி ரூபாய் போதாது, 200 கோடி ரூபாய் வேண்டியிருக்கும். மொத்தமாக பார்க்கும்பொழுது எவ்வளவு முயற்சி செய்திருக்கிறேம், எதிர்பார்த்த அளவுக்கு மேலேயே எவ்வளவு அதிகமான அளவுக்கு திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறேம் என்பதை கவனிக்கவேண்டும். அதற்காகத்தான், இந்த மூன்று மாதத்திற்கு ஒரு தடவை கூட்டம் கூடி, என்னென்ன திட்டங்கள் நிறைவேற்றப் பட்டிருக்கின்றன, முதல் மூன்று மாதங்களில் எவ்வளவு செய்யப் பட்டிருக்கிறது, இரண்டாவது மூன்று மாதங்களில் எவ்வளவு செய்திருக்கிறேம் என்று பரிசீலனை செய்கிறேம். சில திட்டங்களிலே போட்ட அளவுக்கு வேலை நிறைவேறுவதில்லை. திட்டம் பூராவும் குறைவு என்றல்ல, சில பாகங்கள் குறைவாக இருக்கலாம். உதாரணமாக, கட்டிடங்கள் கட்டும் துறையில், கணிசமான குறைவு ஏற்பட்டிருக்கிறது. முதல் மூன்று வருஷங்களில் பண்டங்கள் கிடைப்பதில் நெருக்கடி இருந்தது. சிமெண்ட், ஸ்டீல் முதலியவைகளில் பற்றுக்குறை இருந்ததால் தான் வேலை குறைவு ஏற்பட்டது. ஸ்டீல் இல்லையென்பதால் கட்டிடம் கட்டும் திட்டத்தில் குறைவு ஏற்பட்டு இருக்கிறது. ஆனுல், அந்தப் பணம் வீணுக்கப்படவில்லை. ஆகவே, அந்தப் பணத்தை மற்ற துறையில் பயன் படுத்த முடியுமா என்று கேட்கிறேம். விவசாயத் துறையானுலும் சரி, தொழில் துறையானுலும் சரி, மற்ற எந்தத் துறையானுலும் சரி, அவசியம் இருந்தால், அந்தப் பணத்தை உபயோகியுங்கள் என்று சொல்லுகிறேம்.

இந்தத் துறைகளில் குறை காட்டுகிறேம், பதில் சொல்ல வேண்டும், விட்டுவிடக் கூடாது என்றெல்லாம் திரு. அண்ணுத்துரை அவர்கள் சொன்னுர்கள். அவர்கள் துருவி, துருவிப் பார்த்து, சில இடங்களிலே உள்ள குறைகளைக் காட்டியிருக்கிருர்கள். பொதுவாக எந்தத் துறையிலும் எடுத்துக் கொண்டதற்குமேல் நிறை வேற்றியிருக்கிறேம். ஆனுல், குறைவாகக் காட்டப் பட்டிருக்கிறது. அதற்கு கட்டாயம் பதில் சொல்ல வேண்டியதுதான். அதிலும் கொஞ்சம் குறைவாகக் காட்டியதற்குக் காரணம் இருந்தது. அவர்கள் முக்கியமாக காலனிகள் கட்டுவதைப் பற்றிச் சொன்னுர்கள். கைத்தறி நெசவாளர்

17th March 1960] [Sri C. Subramaniam]

களுக்கு கட்டக்கூடிய காலனிகள் எதிர்பார்த்த அளவுக்குக் குறைவாகத்தான் செய்ய முடிந்தது. அவர்கள் சொன்னது வாஸ்தவம்தான். குறைவு இருக்கிறது. ஆனால், அன்றே அமைச்சர் அவர்கள் வீடு கட்டும் விஷயத்தில், 50, 60 வீடுகள் குறைவாக இருக்கும் என்று சொன்னார். ஆனால், பண அளவில் சரியாக இருக்கிறது. கட்டட அளவில் குறைவு இருக்கிறது என்று அவர்களே ஒப்புக்கொண்டார்கள். போட்ட அளவுக்கு கட்டப்படவில்லை என்பது ஒன்று. இரண்டாவதாக, குடியேறுவதில் தாமதம், அல்லது நிராகரிப்பு இருந்திருக்கிறது. ஆனாலும், போட்ட அளவுக்கும், கட்டிய அளவுக்கும் அதிக வித்தியாசமில்லை. இன்றைக்கு கைத்தறித் துறையில் பூராவையும் எடுத்துக் கொண்டால், $1\frac{1}{2}$ கோடி, 2 கோடி அதிகச் செலவு செய்திருக்கிறோம். ஒதுக்கியதைவிட அதிகமாகச் செலவழித்திருக்கிறோம். $1\frac{1}{2}$ கோடிக்குப் பக்கமாக.

இன்னொரு விஷயம் பல அங்கத்தினர்கள் சொன்னார்கள். இதிலே போய் குடியேறுவதில் அரசியல் கட்சிகள் போய் புகுந்து கொள்ளுகிறார்கள் என்று. வருஷக் கணக்காக குடியேறாமல் காலனிகள் இருக்கின்றன. இங்கே, கல்லிடைக் குறிச்சி காலனியில் வீடுகள் கட்டி வருஷம் மூன்றாகிறது ; இன்னும் குடியேறாமல் இருக்கிறது. அதேமாதிரி வில்லிபுத்தூரில் கட்டி ஒரு வருஷம் ஆகிறது, குடியேறவில்லை. இதில் கொஞ்சம் மானியம், கொஞ்சம் கடன் என்ன, எல்லாமே மானியமாக வேண்டும் என்கிறார்கள். அது திட்டத்தையே, திட்டத்தின் அடிப்படையையே மாற்றுவதாக இருக்கிறது. இந்த வீடுகளுக்கு வாடகை என்னத்திற்கு என்கிறார்கள். ஆகவே இதனாலெல்லாம் திட்டம் பாதிக்கப்படுகிறது. சில இடங்களில், ரூ. 2 வாடகை என்னத்திற்கு, ரூ. 1-க்கு கேளுங்கள் என்று தூண்டிவிடுகிறார்கள்.

இது சம்பந்தமாக புள்ளிவிவரங்களைத் தருகிறேன். திட்டம் போட்ட 1,600 வீடுகளுக்குப் பதில், இதுவரை 1,218 கட்டப்பட்டிருக்கின்றன. இன்னும் 350 கட்டடங்கள் 1960–61-ல் கட்டப் போகிறோம். ஆக, 1,568 கட்டடங்கள் பூர்த்தியாகிவிடும். அதேபோல், கைத்தறிக்காக ஒதுக்கிய பணம் 414 லட்சம். அடுத்த வருஷத்திற்குள் ரூ. 655 லட்சம் செலவாக இருக்கிறது. ஆகவே திட்டப்படி, 50 சத விகிதம் அதிகமாகச் செலவழித்திருக்கிறோம். இதெல்லாம் அவர்களுடைய நன்மைக்காகவே. மற்றும் manufacture of footwear திட்டத்திலே போட்டது ரூ. 5 லட்சம். Anticipated achievement ரூ. 2·32 லட்சம். Manufacture of electrical goods என்ற வகையில் போட்டது ரூ. 17;70 லட்சம். அதிலே anticipated achievement ரூ. 11·95 லட்சம். Model scientific glass apparatus -க்காக போட்டது ரூ. 8·42 லட்சம். செலவழிக்கப்பட்டது ரூ. 6·15 லட்சம். Development of cycle industry க்காகப் போட்டது ரூ. 12;50 லட்சம். செலவு ரூ. 9;40 லட்சம். இதிலெல்லாம் மக்களை ஏமாற்றுவதற்காக அதிகமாகப் போட்டு இருக்கிறோம் என்பதைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். இந்தக் கணக்கைப் பார்க்கும்போது குறைவாகத்தான் இருக்கிறது. ஆனால், இது ஒரு Production cum-Training scheme ஆகவே, இதில், உற்பத்திச் செலவு

ஏற்படுவது மட்டுமில்லை ; உற்பத்திப் பயிற்சி அளிக்கவேண்டியிருக்கிறது. பயிற்சி அளிக்கும்போது உற்பத்திப் பொருள் வேண்டும். இயந்திரங்கள் மட்டுமில்லாமல், மூலப் பொருள்கள் வேண்டும். மூலப் பொருள் எவ்வளவு, பயிற்சிக்கு எவ்வளவு செலவு என்றெல்லாம் பார்க்க வேண்டும். தொழிற்சாலைச் செலவையும், மூலப் பொருள் செலவையும் சேர்த்து, பயிற்சியாளர்களுக்கு மொத்தமாக ரூ. 5 லட்சம் செலவழிக்க வேண்டும் என்று போடுகிறோம். இந்த மொத்தச் செலவைப் பார்த்தால், அது ரூ. 5 லட்சத்துக்கு மேல் போகிறது. இதிலே என்ன விசேஷமென்றால், நம்மிடமுள்ள உற்பத்திப் பொருள்களை விற்கிறோம். அதனால் வருவாய் வருகிறது. சாதாரணமாக உங்களுக்கு அல்லாட்மெண்ட் தீர்ந்து போய் விட்டது என்று சொல்லிவிடுவார்கள் திட்ட கமிஷன். அப்பொழுது நம் திட்டங்களை நிறைவேற்ற முடியாது.

ஆகையினால் ப்ரொடக்ஷன் கம் ட்ரெயினிங் சென்டர் என்று இருப்பதனால் உற்பத்தியாகக் கூடிய பொருள்களை விற்று அதன் மூலமாக வருகிற பணத்தை நீக்கிவிட்டுப் பார்த்தால் பாக்கி இருப்பது உண்மையாக இயந்திரங்கள் கட்டிடங்கள் முதலிய இனத்திற்காகச் செலவழிந்தது. இது 2·32 லட்சம் தான். மொத்தமாக நாம் செலவழித்திருப்பதை எடுத்துப் பார்த்தால் 5 லட்சத்திற்கு மேலாகக் கூட இருக்கும். அவற்றையெல்லாம் நீக்கிவிட்டு இயந்திரங்கள், கட்டிடங்கள் இவற்றுக்காக ஆனது 2·32 என்று கணக்குக் கொடுத்திருப்பதனால்தான் மத்திய சர்க்காரிடமிருந்து இன்னும் கொஞ்சம் கூடவே பணம் வாங்க முடிந்திருக்கிறது.

கனம் அங்கத்தினர்களுக்கு—நாம் திட்டம் போட்ட காலத்தில் இருந்த நிலைமை தெரியும். அதுவும் கடந்த மூன்றுண்டுக்கு முன்பு உள்நாட்டு வசதி குறைந்து, வெளிநாட்டு செலாவணித் தட்டுப்பாடும் ஏற்பட்ட காரணத்தினால் முதல் 480 கோடியாகப் போட்ட திட்டத்தை 450 ஆகக் குறைத்துக்கொண்டு அப்புறம் 420 ஆகக் குறைத்துக்கொண்டு, மறுபடியும் பரிசீலனை செய்து குறைக்கவேண்டிய அவசியம் வந்தால் குறைத்துக்கொள்ள வேண்டும் என்று சொன்னார்கள். ஆகையால் இந்த இண்டஸ்ட்ரியைப் பொறுத்தவரையில் முதலில் போட்ட அளவைக் குறைத்து 250 லட்சம் அளவுக்குத்தான் செலவழிக்க முடியும் என்று சொன்னார்கள். ஆகவே திட்டங்களுக்காகப் போட்ப்பட்ட பணம் செலவழிக்கப்படவே இல்லை என்று சொல்வது சரியல்ல. கணக்கை எல்லாம் சரியாக எடுத்துப் பார்த்தால் போட்டதற்கு மேலாகவே செலவழித்திருக்கிறோம் என்பதைத் தெரிந்து கொள்ளலாம். முன்னால் போட்ட திட்டங்களை நிறைவேற்றி, அதற்குமேலும் புதிய திட்டங்களை நிறைவேற்றி வைத்திருக்கிறோம். ஆனால் விற்பனையாகி வரக்கூடிய வருவாயை நீக்கிக் கணக்குக் கொடுத்திருப்பதன் காரணமாக 3·30 கோடி என்று அவர்கள் போட்டதற்கு மேலாக $4\frac{1}{4}$ கோடி அளவுக்குச் செலவழித்திருக்கிறோம் என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

17th March 1960] [Sri C. Subramaniam]

ஆகையால் தொழில் அமைச்சர் சரியாக கவனிக்கவில்லை. மக்களை ஏமாற்றுவதற்காக இந்தப் புள்ளிவிவரங்களைக் கொடுத்திருக்கிறார்கள், என்று குற்றம் சாட்டுவது சரியல்ல, அதற்கு மாறாக போட்ட அளவுக்கு மேலாக 4-1/4 கோடிக்கு அதிகமாகவே செலவழித்துவிட்டார்கள் என்று வேண்டுமானால் குற்றம் சாட்டலாம். போட்ட திட்டப்படி செலவழிக்கவில்லை என்று குற்றம் சாட்டுவதற்கு இடமில்லை என்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதேமாதிரிதான் இன்றைக்குப் புதிதாக ஏற்பட்ட திட்டங்கள் எது, என்ன என்று கேட்டால் உடனடியாகக் கொடுக்க முடியும்.

மான்யுபாக்சர் ஆப் சைகில் பார்ட்ஸ்—முன்பு இல்லை, இப்பொழுது ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. மானுபாக்சர் ஆப் ஹோல்டர்கள், இப்போது ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. சேலத்தில் மானுபாக்சர் ஆப் ஹண்டுலூம் பார்ட்ஸ் இப்பொழுது ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

இதேமாதிரி இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டை எடுத்துக் கொண்டால் முன்பு போட்டிருந்ததைவிட அதிகமாகவே பல திட்டங்கள் போடப்பட்டு பணம் செலவழிக்கப்பட்டிருக்கிறது. 131 லட்சம் அளவுக்கு போட்டது இப்போது 40 லட்சத்திற்கும் அதிகமாகவே செலவழிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இவற்றில் எல்லாம் குறைவு வந்திருக்கிறது என்று சொல்வதற்கு இல்லை. நிறைவு ஏற்பட்டு அதற்கு மேலும் வழிந்து ஓடியிருக்கிறது என்று என்னால் சொல்லிக்கொள்ள முடியும்.

அதற்கு அடுத்தாற்போல ரெவின்யூ இலாகா மந்திரியின் பொறுப்பில் உள்ள மெடிகல், சுகாதாரம் போன்ற இனத்தில் ஒதுக்கப்பட்ட தொகை செலவழிக்கப்படவில்லை என்றார்கள். அதில் உண்மையாகக் குறைவுதான் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் அந்தக் குறைவுக் காரணம் சர்க்கார் வகுத்துக்கொண்ட கொள்கைதான். இந்தக் கொள்கை தவறு என்றால் நீங்கள் எடுத்துச் சொல்லவேண்டும். கட்டிடங்கள் கட்டுவதற்குப் போதுமான ஸ்டீல் கிடைக்கவில்லை. வெளி மார்க்கெட்டில் இருக்கிறது. டன்னுக்கு முந்நூறு, நானூறு அதிகமாகக் கொடுத்து வாங்கி அந்தக் கட்டிடங்களைக் கட்டவேண்டியது அவசியமா, அல்லது கிடைக்கக்கூடியதைக் கொண்டு மெடிகல் காலேஜ், நடக்கக்கூடிய இடங்கள், பயிற்சி நடக்கக்கூடிய இடங்கள் முதலிய இடத்தில் அவசியமான கட்டிடங்களைக் கட்டிக் கொண்டு, அவ்வினத்தில் ஒதுக்கப்பட்ட பணம் மிச்சம் இருந்தால் வேறு துறைகளில் செலவழித்துக்கொள்வது என்று திட்டமிட்டோம். இந்தக் கொள்கை அடிப்படையில்தான் அவ்வினத்திற்காக ஒதுக்கப்பட்ட பணத்தைச் செலவழிக்கவில்லை. அப்படிச் செய்திராவிட்டால் மின்சாரத் துறையில் அதிகம் செலவழித்திருக்க முடியாது. முதல் மூன்று ஆண்டு காலமாக அவ்விலாகா மந்திரி கொஞ்சம் சுணங்கி இருந்தாலும் இப்போது அவரும் சரியாகிவிட்டார். இவ்வாண்டு அவ்வினத்திலும் அதிக

மாகச் செலவழிக்கப்படும். ஆகவே அவ்வினத்தில் ஒதுக்கப்பட்ட பணம் செலவழிக்கப்படாமல் குறைந்திருப்பதை சர்க்கார் உணர்ந்துதான் அது சரியானது என்று வைத்தார்கள்.

அதேமாதிரி ரோடு துறையைக் கேட்டிருக்கிறுர்கள். ரோடிலும் அப்படித்தான். ரோடுகள் போடுவதற்கு நமக்கு மூன்றுவகையான வசதிகள் கிடைக்கின்றன. நாஷனல் ஹைவேஸ் என்று பூராவும் மத்திய சர்க்கார் பணம் கொடுத்தே போடச் செய்கிற ரோடுகள் ஒரு இனம். சென்டிரல் ரோடு பண்டில் இருந்து அவர்கள் கொடுக்கிற பணத்தோடு கொஞ்சம் நாமும் செலவழித்துப் போட்டுக்கொள்கிற ரோடுகள் இரண்டாவது இனம். நமக்கு இருக்கக்கூடிய வசதிகள், பணம் இவற்றைக்கொண்டு நாமே நம் பொறுப்பில் போட்டுக்கொள்கிற ரோடுகள் மூன்ருவது இனம்.

